26 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com


RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
உங்கள் வாகன, வீட்டு (for your Home & Auto) காப்புறுதிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும்

துரித பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்
மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave., East, Suite # 3
(Eglinton & Markham)
Scarborough, ON M1J 2H6
Tel. - 416.267.8221

எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 26 | பாலம் 05 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 01, 2016

# வரவு செலவு திட்டத்தின் துண்டுவிழும் தொகை $20 பில்லியனை தாண்டுகிறது!

கனேடிய மத்திய அரசின் எதிர்வரும் 2016/2017ஆம் நிதியாண்டிற் குரிய வரவு செலவுத்திட்டம் 2016 மார்ச் 22ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. இதுவே புதிய லிபரல் அரசின் முதலாவது வரவு செலவுத்திட்டம் ஆகும். இவ்வரவு செலவுத்திட்டம் பற்றி நிதி அமைச்சர் Bill Morneau கடந்த 2016 பெப்ரவரி 22ஆம் திகதி குறிப்பிடுகையில் தற்போதைய கணக்கு நிலவரங்களின்படி எதிர்வரும் நிதியாண்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தில் ஏற்கனவே $18.4 பில்லியன் துண்டு விழுகிறது என்றார்.



தற்போதைய லிபரல் அரசு தேர்தல் காலத்தின்போது உட்கட்டுமான வேலைகள் மற்றும் போக்குவரத்து பாதைகள் அமைத்தல், சீர்செய்தல் போன்றவற்றிற்கு வருடாந்தம் $3.3 பில்லியன்படி மூன்று வருடங்களுக்கு $10 பில்லியன் முதலிடுவோம் எனக் கூறிய வாக்குறுதிக்கு எந்தவித நிதி ஒதுக்கீடும் செய்ய முன்னரே இந்த $18.4 பில்லியன் துண்டுவிழும் தொகை கணக்கில் வருகிறது.

இதனால் 2016/2017 ஆம் நிதியாண்டில் லிபரல் அரசு தனது தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்ற $3 பில்லியன் வரையில் உட்கட்டுமான பணிகளுக்கு முதலீடு செய்ய முன்வந்தால் வரவு செலவுத்திட்டத்தில் துண்டுவிழும் தொகை $20 பில்லியனைத் தாண்டிவிடும் என ஊடகங்கள் எதிர்வு கூறுகின்றன.

நாடாளுமன்ற நிதிக்குழு உறுப்பினர்களுக்கு நிதி அமைச்சர் 2016 பெப்ரவரி 23இல் தெரிவிக்கையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறுவதுபோல் ஒரு சமநிலைப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டுமானால் ஒன்றில் மக்களின் வரிச்சுமையை கூட்ட வேண்டும் அல்லது அத்தியாவசிய செலவினங்களுக்கு செல விடும் பணத்தை குறைக்க வேண்டும். இவை இரண்டுமே ஏற்கனவே பலர் வேலையை இழந்துள்ள நிலையில் ஒரு சரியான முடிவாக இருக்கமாட்டாது. அதைவிட இவ்வாறாக ஒரு சமநிலைப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தை கொண்டுவந்தால் அது நாட்டை ஒரு பொருளாதார மந்த நிலைக்குக் கொண்டு செல்லும். அதனால் லிபரல் அரசு கனேடிய பொருளாதாரத்திற்கு உதவும் முகமாக உட்கட்டுமானப் பணிகளுக்கு முதலிடுவதன் மூலம் ஒரு துண்டுவிழும் வரவு செலவுத்திட்டத்தையே மார்ச் 22இல் சமர்ப்பிக்கும் என்றார்.

கடந்த பழமைவாதக்கட்சியின் அரசு 2015/2016 ஆம் நிதியாண்டின் வரவு செலவுத்திட்டம் $1.2 பில்லியன் மேலதிக வரவு காட்டும் என கூறியிருந்தது. ஆனால் கடந்த 2015 நொவம்பரில் பதவியேற்ற லிபரல் அரசாங்கமோ 2015/2016 ஆம் நிதியாண்டின் வரவு செலவுத்திட்டத்தில் $3 பில்லியன் துண்டுவிழும் எனக் கூறியிருந்தது. தற்போதைய கணக்கு விபரங்களின் படி நிறைவு பெறும் 2015/2016 ஆம் நிதியாண்டின் வரவுசெலவுக்கணக்கு $2.3 பில்லியன் துண்டுவிழும் தொகையுடன் முடிவடைகிறது.

2015 நொவம்பரில் லிபரல் அரசாங்கம் 2016/2017ஆம் நிதியாண்டின் வரவு செலவுத்திட்டம் $3.9 பில்லியன் துண்டுவிழும் என எதிர்வு கூறியிருந்தது. தற்போது நிதியமைச்சர் இது ஏற்கனவே $18.4 பில்லியன் துண்டுவிழும் தொகையை காட்டுகிறது என்று கூறியுள்ளார்.

தற்போது கனடாவில் வேலை தேடுவோர் 6.9 வீதமாக இருக்கிறனர். இது 2016/2017 ஆம் நிதி ஆண்டில் 7% வீதமாக இருக்கும் என எதிர்வு கூறப்படுகிறது.

லிபரல் அரசின் உட்கட்டுமானப் பணிகளில் முதலிடுவதன் மூலம் ஏற்கனவே $18.4 பில்லியன் துண்டுவிழப்போகும், எதிர்வரும் நிதியாண்டின் வரவு செலவுத்திட்டத்தை மேலதிக துண்டு விழ செய்யும் திட்டத்தை விமர்ச்சித்து எதிர்க்கட்சி தலைவியான Rona Ambrose தெரிவிக்கையில் இவ்வாறு அளவு கணக்கு இல்லாமல் பணத்தை விரயம் செய்வது ஒரு தவறான

தொடர்ச்சி 03ஆம் பக்கம்...


Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி


Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER

416-844-8692
888-809-9154

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE

Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
அவசரகால பல் வைத்திய சேவைகள்
பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.

HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969


HOMES for Sale *Commercial*Investments
LISTING COMMISSION 999/-* !!
Harwood & Taunton
4 bm 4 wsrm home 729 k
Bayview/Elgin Mills
finished
Rossland /Harwood
695k
4 bm 4 wsrm basement finished -apartment
Scarbough
LARGER LOT 50 x 182
Bungalow House
SCARBOROUGH
$263,500
New Condo apartment
Mccowan and Kingston rd
STORE PLUS APT
389k
Investment rented for $3000
9th Line & Bur Oak
LUXURY
4 bedroom / 5 wsrm bsmnt apt
Steeles/Kennedy
4 bm 3 wsrm
Ontario north /224K
100+Ac
Vacant 100+ acre
Pharmacy/Lawrence
649K
COMMISSION NEGOTIABLE GUARANTEED SALE
Hall of Famer
14 years of service
Century 21
80 Corporate Dr. Suite 208 Toronto
416-290 1200
Pat Pushpakanthan
Real Estate Broker
COMMERCIAL & RESIDENTIAL
416-894-1187
PAT WILL BEAT ANY DEAL*!!
NEW condos
VIP ACCESS
SAVE MONEY!
21 FREE services
Rental corner
2+1 condo apt 1650/-
1+1 condo apt 1400/-
studio apt 999/-
3 bm bangalow 1590/-


THINKING OF SELLING, BUYING OR INVESTING
Always committed to work in the client's best interest
Act with Market Conditions
Exposing Your Property to 1000's of Potential Buyers
Call me to find out
how much your home worth.
Free Market Evaluation
without any Obligations
TRUST
HONEST
GUARANTEE
We do sell Cottages & Recreational Properties
Muthiah Sivabalan
Sales Representative
Friendly and Confidential
Service Just Call
Cell: 416.399.6640
msbalan78@gmail.com
HomeLife/GTA Realty Inc.
Higher Standards Agents... Higher Results!


Friends
MATRIMONY
திருமணத்
உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...
சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண
பொருத்தம் பார்க்கப்படும்
5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
அல்லது தொலைபேசி, தபால், email ஊடாக பதிவு செய்யலாம்
info@friendsmatrimony.com
www.friendsmatrimony.com
Choose Your Life Partnar Here
அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m
Sri Lanka
Ph: 94-112-363663
No-11- 2/1, 33rd lane,
Wellawatta,
Canada
info: 647-709-1536
GTA Square
5215 Finch Ave. E. Unit 257

# வரவு செலவு...

# காலநிலை மாற்றத்தை குறைக்க உதவும் ஒன்ராரியோ மாகாண வரவு செலவுத்திட்டம்

01ஆம் பக்கத்தொடர்ச்சி

நிர்வாக முறை. இது வீண் செலவுகளுக்கு (Waste) வழி வகுக்கும் என்றார். ஒரு நிலையான நிதி நிர்வாக கொள்கை உடையவர்கள் எவரும் லிபரல் அரசாங்கத்தில் இல்லை என்றார்.

புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் Tom Mulcair இதுபற்றி தெரிவிக்கையில், லிபரல் அரசு, தனது சிறிய ($3.3) பில்லியன் துண்டுவிழும் தொகையை உடைய வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பிப்போம் என்ற தேர்தல் வாக்குறுதியை மீறி மிகப்பெரிய ($20 பில்லியன்) துண்டு விழும் தொகையை உடைய வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பிக்கப்போவதையிட்டு கனேடிய மக்கள் மிகவும் ஏமாற்றம் அடைவார்கள் என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில் மசகு எண்ணையின் விலைச்சரிவு, பொருளாதார வீழ்ச்சி என்று லிபரல் அரசு தற்போது கூறும் காரணங்கள் எல்லாம் தேர்தல் காலத்திலேயே தெளிவாக தெரிந்த காரணங்கள் என்றார்.

கனேடிய அரசு தற்போது $615 பில்லியன் கடனில் இருக்கிறது. இதற்கு வட்டியாக மட்டுமே வருடாந்தம் $26 பில்லியனை கட்டிக் கொண்டு வருகிறது.

கனேடிய அரசின் நிதியாண்டு என்பது ஏப்பிரல் 01ஆம் திகதியில் இருந்து அடுத்த வருடம் மார்ச் 31ஆம் திகதி வரைக்கும் உள்ள ஒரு வருட காலப் பகுதியாகும்.

ஒன்ராரியோ மாகாண அரசின் நிதி அமைச்சர் Charles Sousa 2016 பெப்ரவரி 25 மாலை எதிர்வரும் 2016/2017 ஆம் நிதியாண்டிற்குரிய வரவு செலவுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

2016/2017 ஆம் நிதியாண்டில் ஒன்ராரியோ மாகாண அரசின் செலவினங்கள் $133.9 பில்லியனாக இருக்கும். அத்துடன் இவ்வரவு செலவுத்திட்டத்தில் $4.3 பில்லியன் துண்டு விழுகிறது. ஒன்ராறியோ மாகாண அரசு தற்போது $296.1 பில்லியன் கடனில் இருக்கிறது.

இவ்வரவு செலவுத்திட்டத்தின் மூலம் முக்கியமாக காலநிலை மாற்றத்தை (Climate Change) குறைப்பதற்காக ஒரு 'வரம்பு மற்றும் வர்த்தக' (Cap and Trade) திட்டம் 2017 ஜனவரி 01 இல் இருந்து அமல்படுத்தப்பட உள்ளது. இதன்படி ஒன்ராரியோ அரசு காபன் (Carbon) வெளியீட்டிற்கு $18ஐ Tonne ஒன்றிற்கு விதித்துள்ளது. பிரிட்டிஸ் கொலம்பியா மாகாண அரசு $30 ஐ Tonne ஒன்றிற்கும் அல்பேட்டா மாகாண அரசு $20 Tonne ஒன்றிற்கும் விதித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் ஒன்ராரியோ மாகாணஅரசு வருடம் ஒன்றிற்கு $1.9 பில்லியன் வருமானமாக பெறும். இந்த பணம் பசுமை வாயு வெளியீட்டை தடுக்கும் செயற்திட்டங்களுக்கு முதலிடப்படும். ஆனால் இந்த 'வரம்பு மற்றும் வர்த்தக' திட்டத்தால் வீடுகளை வெப்பமாக்க செலவிடும்பணம் மாதம் $5ஆல் அதிகரிக்கும். அதாவது ஒரு சதுர மீற்றர் பரப்பு வீட்டை வெப்பமாக்க மாதாந்தம் ஒருவர் 3.3 சதம் அதிகமாக செலவிட வேண்டும். இதேபோல் பெற்றோல் (Gasoline) இன் விலையும் ஒரு லீற்றருக்கு 4.3


Finance Minister Charles Sousa

சதத்தால் அதிகரிக்கும்.

இது குறித்து கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் இந்த 'வரம்பு மற்றும் வர்த்தக' திட்டம் லிபரல் அரசு மக்களிடம் இருந்து பணம் அறவிட கொண்டுவரும் ஒரு புதிய வரி என்றார்.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் உள்ள ஏனைய சில விடயங்கள்: குடும்ப வருமானம் $50,000இற்கு குறைவாக உள்ளவர்களது பிள்ளைகளுக்குரிய கல்லூரி (College) அல்லது பல்கலைக்கழக (University) கட்டணத்தை அரசு (Ontario Student Grant) உதவித் தொகையாக 2017/2018 கல்வியாண்டில் இருந்து வழங்கும். இவ் உதவித்தொகை குடும்பவருமானம், குடும்ப அங்கத்தினருடைய எண்ணிக்கை போன்ற வேறு ஒரு சில காரணிகளிலும் தங்கியுள்ளது.

அதேநேரம் கல்விக்கட்டணத்திற்கு வரி விலக்கு அளிக்கப்படுவது தொடர்ச்சி 12ஆம் பக்கம்...



# 100 விஜயகாந்த்... 500 கலைஞர்... 1000 எம்ஜிஆர்.... களைகட்டும் தமிழக பிரச்சார மேடைகள்!

“தமிழகம் முழுவதும் 100 விஜயகாந்த், 500 கலைஞர், 1000 எம்.ஜி.ஆர். டூப்கள் இருப்பார்கள். எல்லோருமே நாடக நடிகர்கள். நானும் அவர்களில் ஒருவன். கலைஞர் வேடம் போடுவேன். அரசியல் பிரச்சார கூட்டங்களில் தலைவர்கள் வருவது வரைக்கும் அல்லது கூட்டம் கூடும் வரைக்கும் நாங்கள்தான் தலைவர்கள். எங்களது கையசைவிற்கு தொண்டர்கள் மத்தியில் இருந்து விசில்கள் பறக்கும். இப்போது எங்கள் கால்சீட்கள் வேகமாக ஃபுல்லாகி வருகிறது. தேர்தலுக்காக தயாராகிக் கொண்டிருக்கிறோம். தமிழகம் முழுவதும் தேர்தல் சூறாவளிப் பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளோம்.” குதூகலமாகப் பேசுகிறார், “கலைஞர்” மார்க்கண்டேயன்.

கூட்டணி வியூகம், மாநாடு, வேட்பாளர் நேர்காணல் மற்றும் பல உள்ளூர் தேர்தல் பணிகள் என தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலுக்காக அனைத்துக் கட்சிகளும் பல்வேறு பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வரும் நேரம் இது. அரசியல் கட்சிகளில் இந்த பணி நிரல்களில், தலைவர்களின் டூப்களை புக் செய்வதும் ஒன்று. சரி, இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் டூப் தலைவர்கள் எனத் தேடினால், அவர்களில் பலர் ஏற்கெனவே ரொம்ப பிஸி. தேர்தலுக்காக வாக்கு சேகரிக்கும் பணி-களைத் தொடங்கி விட்டார்கள். சிலருடன் பேசினோம்.



## தமிழ்நாடு அரசியல்

“சிறு வயது முதலே எனக்கு கலை மீது அதிக ஆர்வம். இந்தத் துறையில் கடந்த 25 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறேன். எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகனான எனக்கு அவரைப் போல வேடமிட்டு மேடைகளில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. ரசிகர்களிடையே அதற்கு வரவேற்பு கிடைத்ததால் தொடர்ச்சியாக எம்.ஜி.ஆர் போலவே வேடமிட்டு நடித்து வருகிறேன். மேடையில் எம்.ஜி.ஆர் போல பேசவும் ஆடவும் செய்வேன். பெரும்பாலும் அ.தி.மு.க. கூட்டங்களில்தான் பங்கேற்பேன்” என்கிறார், ‘எம்.ஜி.ஆர்.’ வேடம் போடும் நாகராஜ். இவர், தமிழகத்தில் சேலம் - எடப்பாடி பேருந்து நிலையத்தில் புத்தகக் கடையும் வைத்துள்ளார். வாய்ப்பு இல்லாத நாட்களில் புத்தகக் கடையைப் பார்த்துக் கொள்வாராம்.

“மேடைகளில் நடிப்பதைத் தவிர வேறு எந்தவொரு வேலையும் எனக்குத் தெரியாது. அசப்பில் விஜயகாந்த் போல இருப்பதால் அவரைப்போல வேடமிட்டு நடிக்கத் துவங்கினேன். விஜயகாந்த், தே.மு.தி.க. கட்சியை நிறுவிய பின்னர் எனக்கு அதிக டிமாண்ட். கட்சியின் பொதுக் கூட்டங்கள், மாநாடு போன்றவற்றிற்கு எனக்கு தவறாமல் அழைப்பு வரும். விஜயகாந்த் போல வேடமிட்டு சென்று கலக்கிவிடுவேன்” என்கிறார் உற்சாகமாக ‘விஜயகாந்த்’ குமார்.

**தொடர்ச்சி 14ஆம் பக்கம்...**


MATTRESS SALE


Factory Direct Up to 50% off

Home & Kids Furniture Sale





Bedroom Set


Queen Bed $349


Single Bed $199


Queen Bed $599





Adjustable Beds


Dining sets


Sofa Sets


Sectional Sofa $849




2135 Lawrence Ave E, Scarborough, ON (416) 757-1600

#3437 Derry Rd E, Mississauga, ON (905) 612-1800

Comfort Night
Manufacturers of Quality Mattresses

Tel: (416) 757-1600
Tel: (905) 612-1800

Mattress Manufacturer Custom Made

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*
Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1W3 Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

பவர் ஒப் சேல்
பிரச்சினையா ?

- நல்ல ரேட்ல மோட்கேஜ் செய்ய வேணும்?
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க வேணும் ?
- ரீபைனான்ஸ் செய்ய வேணும்?
- 2வது, 3வது மோட்கேஜ் எடுக்க வேணும்?



- பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் செய்ய வேணும்?
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க மாத்த வேணும்?
- வீடு வாடகைக்கு விட அல்லது எடுக்க வேணும்?
- எல்லா வகையான ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும் ??

## மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,



## "மோட்கேஜ் கிளினிக்" ✓

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for an appointment)

## வோக் இன்
## திங்கள்-சனி 9.00 - 5.00

BEST RATE GUARANTEED

MORTGAGE IN ANY SITUATION

எமது முகவரி

## 1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

**And,,**

*For All Your Real Estate Services*



**Jayson Fowler** BA (Law)
Mortgage Agent/Former Underwriter
FSCO Lic # M 15002593
Cell : 416-613-2788/416-816-9011



ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
Cell : 416-624-4843

# மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தில்
# குதித்துள்ள அரசியல் கைதிகள்!



தமிழ் அரசியல் கைதிகள் தங்கள் விடுதலையை வலியுறுத்தி மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர். கடந்த தடவை நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டம் அரசாங்கத்தின் வாக்குறுதிகளையடுத்து கைவிடப்பட்டது. ஆனால், வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. பிணையில் சிலர் விடுதலை செய்யப்பட்டனர். சிலருக்கு புனர்வாழ்வளிப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. வேறெதுவும் உருப்படியாக நடைபெறவில்லை.

எவ்வித குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்படாமல் நீண்ட காலமாக சிறைகளிலிருக்கும் அனைத்து கைதிகளும் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே சிறந்த நடவடிக்கையாக இருக்கும். இந்த கைதிகள் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வாகவும் அது அமையும் என கைதிகள் உட்பட அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டது. இதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் அரசாங்கத்திடம் வலியுறுத்தி வந்தனர்.

அவ்வாறு பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்படுவது என்பது தவறானது எனவும், சர்வதேச நடைமுறைகள் அதனை ஏற்றுக் கொள்வதில்லை என்றும் இலங்கைக்கு விஜயம் செய்த ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் ராட் அல் உசைன் கூறியதன் பின்னர் இந்த கோரிக்கை கைவிடப்பட்டுள்ளது. எனவே, வேறு வழிமுறையை இதற்கு கையாள வேண்டும்.




ஐ.நா ஆணையர் இக்கருத்தை வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் தெரிவித்த போது, அவ்வாறெனில் அவர்கள் மீதான வழக்குகள் விரைவாக நடத்தி முடிக்கப்பட வேண்டும் அதற்கான அழுத்தத்தை அரசாங்கத்திற்கு ஆணையாளர் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் பொதுமன்னிப்பு இல்லாவிடினும் அதற்கு வேறு வழிமுறைகள் உள்ளன அதன்படி கைதிகளின் விடுதலை தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனக் கூறினார். ஆனால், அதற்கான செயற்பாடுகள் எவையும் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. கைதிகளிடமும் அவர்களது உறவினர்களிடமும் இதுபற்றிப் பேசி உறுதிப்பாடெதுவும் வழங்கப்படவும் இல்லை. இதன் காரணமாவே கைதிகள் மீண்டும் தங்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இக்கைதிகள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்றை முன்னெடுக்கவிருந்த நிலையிலேயே அரசியல் கைதிகள் இந்தப் போராட்டத்தில் மீண்டும் இறங்கியுள்ளனர்.

கொழும்பு மகசின் சிறைச்சாலையிலுள்ள 14 ஆண் தமிழ் அரசியல் கைதிகளும், பெண்கள் பிரிவில் உள்ள ஒரு பெண் தமிழ் அரசியல் கைதியுமாக 15 பேர் கடந்த 23-02-2016 அன்று காலை முதல் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். பிரமசகாயம் உதயகுமார், சிவசுப்பிரமணியம் தில்லராஜ், நடேஸ் குகநாதன், மு.சிவநாதன், மா.நீதிநாதன், க.வேதநாயகம், ந.தர்மராஜா, சு.ஞானசீலன், தயாபரன், செல்லத்துரை கிருபாநந்தன், தி.மனோகரன், யோசப் செபஸ்சியான், சுப்பிரமணியன் கபிலன், இராசதுரை திருவருள், இரவீந்திரன் மதனி ஆகியோரே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள கைதிகளாவர்.

இவர்கள், தங்கள் விடுதலை குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை எனவும், நீண்ட காலமாக விசாரணைகளின்றி சிறைச்சாலைகளில் தங்கியிருந்து பல துன்பங்களை அனுபவித்து வருவதாகவும், இத்தடவை தங்களின் இந்தப் போராட்டம் உறுதியான தாக இருக்கும் என்றும் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல், அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோருக்கும் உண்ணாவிதமிருக்கும் கைதிகள் தங்கள் நிலைப்பாட்டை தெரியப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு தமிழ் அரசியல் கைதிகளும் இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். மகசின் சிறைச்சாலை கைதிகள் ஆரம்பிப்பதற்கு முதல் நாளே அதாவது 23ஆம் திகதியே அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து விட்டனர். யாழ்.கரவெட்டி வடக்கு, கரணவாயைச் சேர்ந்த மதியரசன் சுலக்சன், மலையகம் நாவலப்பிட்டி - மக்கும்பரவைச் சேர்ந்த கணேசன் சந்திரன் ஆகியோரே இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இருவரும் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் மதியரசன் சுலக்சன் என்பவர் வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்த முடிவின் பின்னர், படையினரிடம் சரணடைந்து, 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதியிலிருந்து அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்து அதன் பின்னர் 01.07.2009 வரை ஓமந்தை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்து பின்னர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் ஒன்றரை வருடங்கள் கொழும்பு மற்றும் பூசா முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சுலக்சன், 09.01.2012 அன்று கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

பின்னர், 15.07.2013 அன்று வவுனியா நீதிமன்றத்தில் அவர் ஆஜர்படுத்தப்பட்ட போது அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்த அவரது வாக்குமூலம் என்று கூறப்பட்டிருந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்த குற்றச் செயல்கள் தொடர்பில் போதுமான ஆதாரங்களை பொலிசார் சமர்ப்பிக்கவில்லை.

வழக்குத் தொடரப்பட்டு மூன்று மாதங்களின் பின்னர் குற்றப் பத்திரிகையில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டு, முன்னைய குற்றப் பத்திரிகை வாபஸ் பெறப்பட்டது. புதிய குற்றப் பத்திரிகைக்கான கால அவகாசம் கோரப்பட்டிருந்தது. எனினும் சுமார் இரண்டு வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் அவருக்கு எதிராக புதிய குற்றப் பத்திரிகை சமர்ப்பிக்கப்படவில்லை. இது தொடர்பாக சுலக்சனின் வழக்கறிஞர் பல தடவை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார். அத்துடன் சுலக்சனின் தாயார் ஜனாதிபதி, பிரதமர், நீதியமைச்சர், சட்டமா அதிபர் ஆகியோருக்கும் பல்வேறு தடவை கடிதம் மூலம் முறைப்பாடு செய்திருந்தார். எனினும் இன்றுவரை எதுவித பதிலும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. இது ஒரு உதாரணம். இவ்வாறுதான் ஏனைய கைதிகளின் நிலையும் உள்ளது. எவ்வளவு முயற்சிகள் மேற்கொண்டும் தங்களின் பிரச்சினைகளை உரிய தரப்பினரிடம் அறிவித்தும் கூட எவ்வித முன்னேற்ற நகர்வுகளும் இல்லை.

ஒரு காலவரையறையுடன் கூடிய திட்டமிட்ட நடவடிக்கையின் மூலமாகவே இக்கைதிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். நீண்ட காலம் சிறைகளில் தங்கள் வாழ்நாளை கழித்தவர்களின் காலத்தை மேலும் இழுத்தடிக்கும் விதமான செயற்பாடுகள் நம்பிக்கையூட்டுவதாக அமையாது.

- விகிர்தன் -

இப்பத்தியை எழுதிக் கொண்டிருக்கும் வேளையில் உண்ணாவிரதக் கைதிகளின் உடல்நிலை மோசமாகிக் கொண்டிருப்பதான தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. சில கைதிகள் சிறைச்சாலை வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதான செய்திகள் வெளிவருகின்றன.

இக்கைதிகளின் உடல்நிலை மோசமாகி விபரீதமாக எதுவும் நடந்து விடாமலிருக்க அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கைதிகளில் எவரினதும் உயிருக்கு ஆபத்து நேர்ந்தால் நல்லிணக்க அரசியலில் இன்று ஏற்பட்டு வரும் சுமுகநிலை மோசமான பாதிப்பிற்குள்ளாகலாம். கைதிகளின் பெற்றோர், உறவினர்களும் வீதியிலிறங்கி போராட்டங்களை

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL


# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்

## சென்ற இதழ் தொடர்ச்சி...

கடந்த இதழில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முறை நான்கு பிரிவுகளை அடக்கியது எனவும் அவையாவன:

1. Prenomination Phase - ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்ய முந்திய காலப்பகுதியாகும்.
2. National Conventions Phase - தேசிய மாநாடு இது ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதி வேட்பாளர்களை கட்சிகள் தெரிவு செய்யும் மாநாடு ஆகும்.
3. General Election Phase - இது தேர்தல் பிரசார காலமும் பொதுத்தேர்தலும் ஆகும். (அதாவது நவம்பர் 08, 2016 வரை)
4. Electoral College Phase - இது ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதியை உத்தியோக பூர்வமாக தெரிவு செய்து அறிவிக்கும் காலப் பகுதியாகும். (அதாவது நவம்பர் 09, 2016 இல் இருந்து ஜனவரி 20, 2017 வரை)

இவற்றில் முதலானது Pre Nomination Phaseஐ பற்றியும் விபரமாக கடந்த இதழில் பார்த்தோம். இவ்விதழில் இரண்டாவது National Coventions Phase ஐ பற்றி பார்ப்போம்

இதுவரை 2016ஆம் ஆண்டில் நடைபெற உள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் வேட்பாளர் களாக இருப்பவர்கள் இருவர். அவர்கள் Hillary Clinton உம் Berni Sanders உம் ஆவர். குடியரசுக்கட்சியின் வேட்பாளர் களில் மேலும் இருவர் விலகியபின்னர் இப்போது குடியரசுக்கட்சியின் சார்பில் ஐந்துபேர் வேட்பாளர்களாக இருக்கிறார்



2008 - Democratic National Convention

கள். அவர்கள் Ben Carson, Ted Cruz, John Kasich, Marco, Rubio மற்றும் Donald Trump ஆவர்.

***2. National Convention Phase***

இது இரண்டு கட்சிகளுக்குமான தேசிய மாநாடுகள் நடைபெறும் காலமாகும். இத்தேசிய மாநாட்டிற்கு மூன்று கடமைகள் உண்டு. அவையாவன;

1. தற்போதைய ஜனாதிபதி தேர்தலுக்கான ஜனாதிபதி, உபஜனாதிபதி வேட்பாளர் களை தெரிவு செய்வது.
2. கட்சி கொள்கைகள் விதிமுறைகளை வகுப்பது.
3. அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யும் நடைமுறை களை வகுப்பது.

முற்காலத்தில் தேசிய மாநாடு தொடங்க முன்னர் எவர் அந்த கட்சிக்குரிய ஜனாதிபதி வேட்பாளராக வருவார் என்று கூறுவது கடினமான விடயமாக இருந்தது. பெரும்பாலும் தேசிய மாநாட்டில் நடை பெறும் முதலாவது தேர்தலிலேயே ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக வெல்வது கடினமாக இருந்தது. தேசிய மாநாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட தேர்தல் திரும்பத் திரும்ப நடந்தே ஜனாதிபதி வேட்பாளர் தெரிவுசெய்யப்பட்டார்.

தற்காலத்தில் தேசிய மாநாடு தொடங்க முன்னரே மாநிலங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை கொண்டு ஊடகங்கள் யார் அந்தக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக வருவார் என தெரிவித்துவிடுகின்றன.

இந்த தேசிய மாநாடு ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் ஆண்டின் கோடை காலத்தில் நடைபெறுகின்றது. பொதுவாக இந்த மாநாடு நான்கு நாட்களுக்கு நடைபெறு கின்றன. இத்தேசிய மாநாட்டில் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நிற்பதற்கு ஒருவருக்கு மூன்றுக்கு மேற்பட்ட (குடியரசுக் கட்சியில் ஐந்துக்கு மேற்பட்ட) மாநிலங்களிலிருந்து வந்த பிரதிநிதிகளில் பெரும்பான்மையோர் ஆதரவு அளிக்க வேண்டும். அத்துடன் அவர் தேர்தல் திணைக்களத்தால் வேட்பாளராக ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

இவ்வருடம் குடியரசுக்கட்சியின் தேசிய மாநாடு 2016 யூலை 18இல் Cleveland, Ohioஇல் நடைபெற உள்ளது. ஜனநாய கக் ட்சியின் தேசிய மாநாடு 2016 யூலை 25இல் Philadelphia, Pennsylvania இல் நடைபெற உள்ளது.

தேசிய மாநாட்டில் நடைபெறும் தேர்தலில் அறுதிப்பெரும்பான்மை பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படுவார். உப ஜனாதிபதி வேட்பாளரை அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப் பட்டவர் தெரிவு செய்வார். ஜனாதிபதி வேட்பாளரும் உபஜனாதிபதி வேட்பாளரும் வெவ்வேறு மாநிலத்தை சேர்ந்தவர் களாவே இருப்பார்கள்.


2016 இல் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாள ராக வர ஜனநாயகக்கட்சியிற்கு மாநிலங் களில் இருந்து தெரிவு செய்யப்பட்டு வரும் 4,765 பிரதிநிதிகளில் குறைந்தது 2,383 பேர் ஆதரவளிக்க வேண்டும். இதுவரை நடைபெற்ற நான்கு மாநில (Iowa, New Hampshire, Nevada & South Carolina) தேர்தல் முடிவு களின்படி Hillary Clinton 109 பிரதிநிதிகளையும் Bernie Sanders 66 பிரதிநிதிகளையும் பெற்றுள்ளார்கள். ஜனநாயகக் கட்சியின் அடுத்த மாநிலத் தேர்தல் 12 இடங்களில் மார்ச் 01 ஆம் திகதி நடைபெற உள்ளது. இந்த 12 இடங்களிலும் சேர்த்து 1015 பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

2016 இல் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாள ராக வர குடியரசுக்கட்சிக்கு மாநிலங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டு வரும் 2,472 பிரதிநிதிகளில் குறைந்தது 1,237 பேர் ஆதரவளிக்க வேண்டும். இதுவரை நடை- பெற்ற நான்கு மாநில (Iowa, New Hampshire, Nevada & South Carolina) தேர்தல் முடிவுகளின்படி Donald Trump 81, Ted Cruz 17, Marco Rubio 17, John Kasich 6, மற்றும் Ben Carson 4 பிரதி நிதிகளையும் பெற்றுள்ளார்கள். குடியரசுக் கட்சியின் அடுத்த தேர்தல் 13 இடங்களில் மார்ச் 01ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த 13 இடங்களிலும் சேர்த்து 661 பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

2016 மார்ச் 01ஆம் திகதி பல மாநிலங் களில் இருந்து தேசிய மாநாட்டிற்கான பிரதிநிதிகள் தெரிவு செய்யும் தேர்தல் நடைபெறவுள்ளதால் இந்நாளை 'Super Tuesday' என்பர்.

கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும், உபஜனாதிபதி வேட்பாளரும் தாங்கள் கட்சியின் வேட்பாளராக் தெரிவு செய்யப் பட்டதை ஏற்றுக்கொண்டு பேசுவார்கள். இதை தொடர்ந்து இந்த இரு வேட்பாளர் களும் தங்கள் குடும்பத்துடனும், கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்களாக போட்டியிட்டு தோற்றவர்களுடனும் சேர்ந்து நின்று படங்கள் எடுப்பதுடனும், நாட்டிற்கு தங்கள் கட்சியின் ஒற்றுமையை தெரிவிப்பதுடனும் கட்சியின் தேசிய மாநாடு முடிவடையும். கட்சிக்குரிய ஜனாதிபதி உப ஜனாதிபதி வேட்பாளர்களை தெரிவு செய்வதுடன் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முறையில் உள்ள நான்கு பிரிவில் இரண்டாவது பிரிவான National Convention Phase முடிவடைகிறது.

தொடரும்...


சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca






# தணிவடைந்து வரும் முரண்பாடுகள்!

**- ஆதித்தன் -**

தமிழ் அரசியலில் சமீபகாலமாக நிலவி வந்த முரண்பாடுகள் சற்று தணிவடைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. அது மட்டுமன்றி, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்குமிடையில் தோன்றியிருந்த விரிசல் நிலை குறைவடைந்து சந்திப்புகளும் இடம்பெற்றுள்ளன. இந்த முரண்பாடுகளால் தமிழ் மக்கள் விரக்தி நிலைக்குள்ளாகியிருந்தனர். வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் வெளிப்படையாகவே ஊடகங்களில் வெளிவரத் தொடங்கின. தலைவர் சம்பந்தனும், சுமந்திரனும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளுடனும், வட மாகாண முதலமைச்சருடனும் கலந்தாலோசனை மேற்கொள்ளாமல் முடிவுகளை எடுப்பதாக குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன. வட மாகாண முதலமைச்சர் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியை பாதிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டார் எனவும், வேறு ஒரு அணிக்கு ஆதரவாக செயற்பட்டார் எனவும் சுமந்திரன் வெளிப்படையாக குற்றம் சாட்டியதோடு, கட்சித் தலைமை இதற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி வந்தார். இந்த நிலையில், தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையில் உருவாக்கப்பட்டதும் மேலும் சிக்கலையே ஏற்படுத்தியது. ஆயினும், கடந்த வாரங்களில் முரண்பாடான கருத்து வெளிப்பாடுகள் குறைவடைந்துள்ளன. இந்நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கட்சியின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தை கடந்த வாரத்தில் கூட்டியதோடு, கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளுடன் சுமுகமான கலந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டுள்ளார். புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்படவிருக்கின்ற நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டியது முக்கியமான கடமையாகவுள்ளது. இதில் முரண்பாடுகள்வராமலிருக்க இக் கலந்துரையாடலை சம்பந்தன் நடத்தியிருக்கின்றார். சம்பந்தன் தலைமையில் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. இந்த சந்திப்பில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளான இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன், ரெலோ அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் க. சர்வேஸ்வரன் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.), கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா. துரை ரெட்ணம் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.



புளொட் அமைப்பு சார்பில் எந்தவொரு அங்கத்தவர்களும் இதில் பங்கேற்றிருக்கவில்லை எனினும், புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் யாழ்ப்பாணத்தில் நின்ற காரணத்தால் அவரால் மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாதநிலை ஏற்பட்டது என்று கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்திருந்தார். இந்த கலந்துரையாடலின் தொடக்கத்தில், அங்கத்துவ கட்சிகளால் சில குற்றச்சாட்டுக்களும் கட்சித்தலைமை மீது முன் வைக்கப்பட்டன. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எடுக்கப்படும் முடிவுகள் ஓரிருவரால் மாத்திரமே தனித்து எடுக்கப்படுவதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பால் குற்றம் சுமத்தப்பட்டது. இதன் போது, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எதிர்வாதம் புரியாமல் சமாளிக்கும் விதமாக கருத்து வெளியிட்டார். முக்கியமான சில தருணங்களில் அவ்வாறு முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கக் கூடும் என்றும், இனிமேல் அவ்வாறு நடைபெறாது என்றும் தெரிவித்தார். அனைவரும் ஒற்றுமையாக நின்று அரசியல் தீர்வுக்கான எமது நடவடிக்கைகளை வெகு விரைவாக முன்னெடுப்போம் என்று அவர் கூறினார். அத்துடன், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பில் ஆராய்வதற்காக, 10 பேர் கொண்ட குழு ஒன்றை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அடுத்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது நியமிக்க முடிவெடுக்கப்பட்டது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளிலிருந்து தலா இருவர் என்ற அடிப்படையில் இதில் நியமிக்கப்படவுள்ளனர் என்று அக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அடுத்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மார்ச் 6ஆம் திகதி இடம்பெறும் போது இந்த குழு நியமிக்கப்படும்.

கூட்டமைப்பின் தலைமை அதன் பங்காளிக் கட்சிகளுடன் வெளிப்படையாக கலந்துரையாடி முடிவுகள் எடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டு நீண்ட காலமாகவே வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. விரிசல்கள் மோசமான நிலைக்கு சென்றமைக்கு இதுவே காரணம்.

வட மாகாண முதலமைச்சரும் வேறு வழியில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள முற்பட்டதும், தலைமையுடன் முரண்படும் பங்காளிக்கட்சிகளிடமிருந்து அவருக்கான ஆதரவு செல்லவிருந்த தருணத்தில் இந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தை நடத்தி சுமுக நிலையை ஏற்படுத்த சம்பந்தன் முயன்றிப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வடமாகாணத்தின் புதிய ஆளுநராக பதவியேற்றுக் கொண்ட ரெஜினோல்ட் குரேயின் வரவேற்பு நிகழ்வில் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் பங்கேற்று அவரை வரவேற்றதுடன் உரைகளையும் நிகழ்த்தியுள்ளனர். நாடாளுமன்ற தேர்தல் முடிவடைந்த கையோடு விக்னேஸ்வரனுக்கும், சுமந்திரனுக்குமிடையில் இடம்பெற்று வந்த கடுமையான சொற்போர் தற்போது நிறைவிற்கு வந்துள்ளமையினையும் குறிப்பிட வேண்டும். உள்ளுக்குள் இடம்பெற்று வந்த இந்த முரண்பாடுகள் இப்போது தணிந்து வரும் நிலையில், வட மாகாண முதலமைச்சருக்கும் பிரதமர் ரணில் விக்ரசிங்கவிற்குமிடையிலான முரண்பாடுகளும் தளர்வு நிலைக்கு வந்துள்ளன. ‘வடக்கிலிருந்து படைகளை விலக்குவேன் என்று கூறினால் மட்டுமே அவருடன் கைகுலுக்குவேன்’ என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூற, ‘விக்னேஸ்வரன் ஒரு பொய்யர்’ என பிரதமர் ரணில் கூற, இருவரும் ஒருவரையொருவர் முகம் பார்க்காமலிருந்தனர்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவிற்கு பிரதம அதிதியாக வருகை தந்திருந்த பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை மண்டபத்தின் வாயிலுக்குச் சென்று கைலாகு கொடுத்து, பொன்னாடை போர்த்தி தலைப்பாகை சூடி வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் வரவேற்றிருந்தார். தொடர்ந்து இருவரும் அருகருகே ஆசனங்களில் அமர்ந்திருந்ததோடு விழாவின் ஆரம்பம் முதல் இறுதி வரையில் நீண்ட நேரமாக உரையாடிக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில், கடந்த 15ஆம் திகதி பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்குமிடையிலான முக்கிய சந்திப்பு அலரி மாளிகையில் நடைபெற்றுள்ளது. பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான குழுவில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், வட மாகாணத்தின் தற்போதைய ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, முன்னாள் ஆளுநர் பளிஹக்கார, வட மாகாண பிரதம செயலாளர் பத்திநாதன், வடக்கின் ஐந்து மாவட்டங்களின் அரச அதிபர்கள், திறைசேரியின் முன்னாள் செயலாளர் எஸ்.பாஸ்கரலிங்கம் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையிலான குழுவில் மாகாண அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். வடக்கு மாகாணத்தின் உடனடி தேவைகள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் விரிவாக எடுத்துரைத்துள்ளார். வடக்கின் அபிவிருத்தி தொடர்பிலும், பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களின் தேவைகள் குறித்தும், முன்னாள் போராளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் கொடுப்பனவு இரட்டிப்பாக்கப்பட வேண்டும் எனவும், மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் தொகையும் இரட்டிப்பாக்கப்பட வேண்டும் எனவும், அவசியமான உடனடி பிரச்சினைகள் தொடர்பில் பிரதமரிடம் முதலமைச்சர் கோரிக்கைகளை முன்வைத்தார். வட மாகாணத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. பாரிய அளவிலான நிதி முதலீட்டுத்திட்டங்களை வடக்கு, கிழக்கு மாகாண நிதி உதவி வழங்கும் மாநாட்டில் சமர்ப்பிக்க திட்டமிட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க முதலமைச்சரிடம் தெரிவித்ததுடன், ஜப்பான் போன்ற வெளிநாடுகள் வட, கிழக்கில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு தயாராகவுள்ளதாகவும் குறிப்பிட்டார். வழங்கப் பட்ட தேவை மதிப்பீடுகளை மீளாய்வு செய்வதுடன், மேற்கொள்ளப்படவேண்டிய பாரியளவிலான நிதி முதலீட்டுத் திட்டங்கள், பாரிய முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தப்படவேண்டிய விடயங்கள் உள்ளடக்கிய அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் பிரதமர் முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

அந்த அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று உறுதியளித்த முதலமைச்சர் விக்னேஸ்வரன், வடக்கின் உடனடித் தேவைகள் தொடர்பான மகஜரொன்றை பிரதமரிடத்தில் கையளித்தார். வட மாகாணத்தில் அடையாளம் காணப்பட்ட தேவைகளை நிறைவு செய்வதற் காகவும், நிலைத்து நிற்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் 3 லட்சம் கோடி ரூபா


தொடர்ச்சி 16ஆம் பக்கம்

**விளம்பரம்** VLAMBARAM™

| | |
|---|---|
| **பதிப்பாளர்:** | ராஜா மகேந்திரன் |
| **பத்திரிகை ஆசிரியர்:** | சத்தியா மகேந்திரன் |
| **பத்திரிகை முகாமையாளர்:** | கமல் செல்லையா |
| **ஊடகப்பொறுப்பாளர்:** | விஜய் செல்லையா |
| **தட்டச்சு:** | கலா விஜயபாலன் |
| **அலுவலக பொறுப்பாளர்:** | செல்வி ரஞ்சன்<br>தாரணி இந்திரராஜ் |
| **பதிப்பு:** | *Canyon Press Inc.* |

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E.,*
*#201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com*

விளம்பரம் பத்திரிகை ‘விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்’ ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.






2 Bedrooms, 1 W Room
Perfect Starter! Well Kept
Cute, Clean



1+1 Bedrooms, 2 W Room
Stunning Memory Model



2 Bedrooms, 2 W Room
Cottage Style Bungalows
On 40' & 50' Lots



2+2 Bedrooms, 2 W Room
Owner Is Also Selling 274B Beta St.



3 Bedrooms, 3 W Room
Ten Minutes To Completed
404 Hwy.



3 Bedrooms, 2 W Room
Finished Basement
With Rec. Room



3 Bedrooms, 3 W Room
Access To Ttc, 401 (8Mins To Dvp), Go,
U Of T, Centennial College And Parks



3 Bedrooms, 1 W Room
Ttc Bus At Ur Door, Go &
Subway Just Blks Away




4 Bedrooms, 3 W Room
Just Minutes Away From
The Lake! Close To Schools



3 Bedrooms, 3 W Room
Great Gulf Home With
Large Eat-In-Kitchen,



3 Bedrooms, 3 W Room
Well Designed Kitchen With Lots
Of Work Area & Beautiful Oak Cabinetry




4+3 Bedrooms, 2 W Room
3 Bedroom Basement
Apartment With Separate



4 Bedrooms, 5 W Room
Finished Basement W/Games
Room, Bar, W/O To Yard




4+0 Bedrooms, 4 W Room
Absolutely Stunning 4 Bdrm,
Custom Built Executive Bungalow



3 Bedrooms, 2 W Room
2 Year New " Sierra"
Built Royal Wynd Home


RE/MAX Platinum Club Award



Sales Representative
**ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC**
**Direct 416 - 276-1225**
Email: esrinathan@trebnet.com
Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

**Your Home Sold In 30 Days or We buy it**

# அத்தனைக்கும் ஆசைப்படு!



## சத்குரு வாசுதேவ்

'ஆசையே துன்பங்களுக்குக் காரணம்!' என்று சொன்னார்கள், இன்னொன்றும் சொல்வார்கள். யார் மீதும், எதன் மீதும் பற்று வைக்காதே. பற்றும் பாசமும்தான் வளர்ச்சிக்குத் தடை! என்று பயமுறுத்துவர்.

பற்றுடனே வாழ்ந்து பழகிவிட்ட நீங்கள் இது மாதிரி சித்தாந்தங்களால் குழம்பிப் போவீர்கள். அப்பாவையும் அம்மாவையும் குழந்தைகளையும் பற்றிய பொறுப்புகளைச் சுமக்க யோசனையாக இருக்கும்போது, பற்றில்லாமல் இருக்கச் சொன்னதை உங்களுக்கு வசதியாகப் புரிந்து கொள்வீர்கள். யாருக்கு என்ன நடந்தால் என்ன என்ற அலட்சியத்துடன் அக்கறை இல்லாமல் இருப்பதை, 'பற்றில்லாமல் இருப்பது' என்று திரித்து உங்களையே ஏமாற்றிக் கொள்வீர்கள்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

பற்று இருந்தால் வளர்ச்சி இல்லை என்று யார் சொன்னது?

பூமியுடன் பற்றுக் கொண்டு மரம் தன் வேர்களை ஆழமாகச் செலுத்தும்போது தான் அது ஆரோக்கியமாக வளர்கிறது. பல பட்சிகளுக்கு இருப்பிடம் தருகிறது. காற்றில் உயிர்வாயுவைச் சேர்க்கிறது. காய், கனிகளை வழங்கிப் பயன்படுகிறது. பூமியிடமிருந்து அதைப் பிடுங்கி எடுத்தால், சிதைந்து போகிறது.

அதைப் போலத்தான் நீங்களும்... யாரோ சொன்னார்களே யென்று, பற்றிக்கொண்டிருப்பதிலிருந்து வலுக் கட்டாயமாக விடுவித்துக்கொள்ளப் பார்த்தால் உங்களைத் தீவிரமாக காயப்படுத்திக் கொள்வீர்கள்.

உங்களுடைய அடிப்படைக் குணம் பற்று வைப்பதாக இருந்தால், நீங்கள் அதை மாற்றிக் கொள்ள முயற்சி செய்யாதீர்கள். ஒருவன் தவளையை வைத்து ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தான். அவன் 'தாவு' என்று சொன்னால், அது தாவும்படி பழக்கியிருந்தான். ஆராய்ச்சியில், அதன் கால்களில் ஒன்றை வெட்டிவிட்டு, 'தாவு' என்றான். தவளை மூன்று கால்களால் கஷ்டப்பட்டுக் குதித்தது. அடுத்து இன்னுமொரு காலை வெட்டிவிட்டு, 'தாவு' என்றான். அப்போதும், தவளை கஷ்டப்பட்டுக் குதித்தது. மூன்றாவது காலை எடுத்ததும், மிகுந்த வலியோடு ஒற்றைக் காலால், எப்படியோ கொஞ்சமாகக் தாவி விட்டது. கடைசியாக நான்காவது காலையும் அவன் வெட்டி விட்டு, 'தாவு' என்றான் நகர முடியாமல், தவளை அவனைப் பரிதாபமாகப் பார்த்தது. மறுபடி தாவச் சொல்லிக் கத்தினான். தவளை அசையவே இல்லை.

அவன் ஆராய்ச்சி முடிவை இப்படி எழுதினான். 'நான்கு கால்களையும் எடுத்து விட்டால், தவளைக்குக் காது கேட்காது!'

இப்படித்தான் சிலர் என்னவோ நடந்தால் என்னவோ முடிவெடுத்து சித்தாந்தங்களை அமைத்து விடுகிறார்கள். துன்பத்தின் அடிப்படைக் காரணத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் பற்று வைத்தால் துன்பம்தான் என்று சொல்லி விடுகிறார்கள்.

பற்று கொண்டால் துன்பம் எப்போது வருகிறது?

உங்கள் குழந்தையைப் பள்ளியிலிருந்து அழைத்து வரும் ரிக்ஷா கண்ணெதிரே கவிழ்ந்து விட்டால், என்ன செய்வீர்கள்? ரிக்ஷாவிற்கு ஓடுவீர்கள். கீழே விழுந்து கிடக்கும் குழந்தைகளில் உங்கள் குழந்தையைத்தான் முதலில் அள்ளி எடுப்பீர்கள்.

குழந்தைகளின் மீது பற்று என்றால், எந்தக் குழந்தையையும் நீங்கள் எடுத்திருக்கலாம். அங்கே குழந்தையின் மீது பற்று இல்லை. அது உங்களுடையது என்று சொந்தம் கொண்டாடும் தன்மை தான் உங்களைச் செலுத்துகிறது. 'நான், எனது' என்ற எண்ணங்கள்தான் முன் நிற்கின்றன.

ஒருவர் உங்கள் நண்பராக இருக்கும் வரை அவர் மீது பற்று கொள்கிறீர்கள். அவர் எதிரியாகும்போது காழ்ப்பு வருகிறது. உண்மையில் அந்தத் தனி நபர் மீதா நீங்கள் முதலில் பற்று கொண்டீர்கள்? இல்லை. அவர் 'உங்கள்' நண்பர் என்பதால் பற்று கொண்டீர்கள்.

எந்த உறவிலும் உங்களை விலக்கி விட்டு, அவரை மட்டும் முன்னிறுத்தி நீங்கள் பற்று கொள்ள இயலவில்லை. உங்களை முன்னிறுத்தித்தான் பற்று கொண்டீர்கள். அப்படி மிகக் குறுகிய வட்டத்திற்குள் உங்களை அடைத்துக் கொள்ளும்போது, பற்று இருந்தாலும் பிரச்சினை தான். விலக்கினாலும் பிரச்சினைதான்.

என்னிடம் யோகா கற்றுக்கொள்ள வருபவர்களில் சிலர், சில பயிற்சிகள் பிடிக்கவில்லை என்பார்கள். அவர்களிடம் ஒரு காகிதத்தைக் கொடுத்து, 'சரி, உங்களுக்குப் பிடித்ததையெல்லாம் பட்டியலிடுங்கள்' என்பேன். வெகுநேரம் யோசித்து எழுதிய காகிதத்தைத் திருப்பித் தருவார்கள். அதில் அரை டஜன் விடயங்களை எழுதி இருப்பார்கள்.

'இவ்வளவு பிரமாண்டமான பிரபஞ்சத்தில் உங்களுக்குப் பிடித்தது ஆறேழு விடயங்கள்தானா?' என்று கேட்டால் விழிப்பார்கள்.

விருப்புகள், வெறுப்புகள் என்று பார்வையைக் குறுக்கிக் கொள்வதால், எத்தனையோ அற்புதமான விடயங்கள் நீங்கள் பற்றுகொள்ளும் பட்டியலில் தவிர்க்கப்பட்டு விடுகின்றன. இந்த உலகின் முழுமையை நீங்கள் உணர முடியாமலேயே போய்விடுகிறது.

எல்லாவற்றிலிருந்தும் பற்றில்லாமல் விலகி விலகித் தனியே போய் நிற்பது சுதந்திரமல்ல. வளர்ச்சியல்ல. எல்லாவற்றையும் தனக்கள் அடக்கி விசுவரூபம் எடுத்துக் காட்டுவது தான் உண்மையான வளர்ச்சி.

நீங்கள் ஒருவர் மீது கொள்ளும் பற்றும் அப்படிப்பட்ட ஆழத்துடன் இருக்க வேண்டும். நீங்கள் வேறு, அவர் வேறு என்று பகுத்துப் பார்க்க முடியாத அளவிற்கு, அவருடன் பூரணமாக ஒன்றாகி விடுங்கள். அப்புறம் இன்னொன்று என்ற அடையாளம் ஏது? சேர்ந்திருக்கலாமா, விலகியிருக்கலாமா என்ற கேள்வி ஏது? அதன் மீது பற்று வைக்கலாமா என்ற கேள்வி ஏது? அதனால் வரப்போகிற வலிகள் தான் ஏது?

இந்த வாழ்க்கையில் இன்னொரு உயிரைத் தன் உயிர்போல மதித்துச் சேர்த்துக் கொள்வதற்கு இணையான உன்னதம் வேறென்ன இருக்க முடியும்?

உங்களுடையது என்பத விலக்கிவிட்டு, கொஞ்சம் கொஞ்சமாக பிரபஞ்சத்துடன் நீங்கள் முழுமையான பற்றுக்கொள்ளும் போது, உங்கள் வாழ்க்கையே முழுமையாகிவிடும்!


## திருவள்ளுவர் விழா

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் திருவள்ளுவர் விழா மார்ச் மாதம் 5ந் திகதி (5-03-2016) சனிக்கிழமை மாலை 3:00 மணி தொடக்கம் மாலை 6:00 மணிவரை "ஸ்காபரோ சிவிக் சென்ரர்" மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைவரையும் வருகை தந்து பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு: **416-267-6712, 416-286-0457, 647-345-4159**

சு.சிவநாயகமூர்த்தி சிவநயனிமுகுந்தன்
தலைவர் செயலாளர்






வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்-கனடா

## வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2016

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் மார்ச் மாதம் 6ம் திகதி (Mar 06, 2016) ஞாயிற்றுக்கிழமை காலை 11:00 மணி முதல் பி.ப 3:00 மணிவரை 3600 Kingston Rd, Scarboroughஇல் அமைந்துள்ள Scarborough Village Recreation Centre மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் திரு. சி. இளஞ்செழியன் தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் முக்கிய நிகழ்வாக புதிய நிர்வாகசபைத் தெரிவு இடம்பெறவுள்ளதுடன் வழமைபோல் மதிய உணவும் வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தொடர்புகட்கு: செழியன் (416-949-7795) சிவா (416-562-4141) சிறீதரன் (416-661-3494)



# யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# அடமானக் கடனை நீடித்தல்

நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர் 459

அனேகமான கனேடிய மக்களின் மிகப் பெரிய மாதாந்த கொடுப்பனவு ஆதனத்துக் குரிய அடமானக்கடன் கொடுப்பனவு ஆகும். அடமானக்கடனை மக்கள் பெறும்போது, கடன் வழங்கும் நிறுவனம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கே கடனை வழங்கும். உதாரணமாக ஒரு (1) வருடம், மூன்று (3) வருடம், ஐந்து (5) வருடங்கள் போல். இவையே சாதாரணமாக கனேடிய மக்கள் பெறுவது. இந்தக்குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன் அடமானக் கடன் கொடுத்த நிறுவனங்கள், கடனை நீடிப்பதற்கான கடிதத்தை அனுப்பும். Angus Reid இன் அறிக்கைகளின் படி 27% ஆன கடனாளிகள் எதுவித வினாக்களும் இல்லாமல் கடனின் காலத்தை நீடித்து கொள்கின்றார்கள். இது சிறந்த முறை எனக் கொள்ள முடியாது. நிதி நிறுவனங்களுடன் பேரம்பேசி சிறந்த அடமானக் கடனைப் பெறலாம் என்பது உண்மை. இதனை பலர் தவற விட்டு விடுகிறார்கள். இவை நிறுவனங்களுக்கு நன்மை பயக்கும்.

### இவ்வாறான தவறை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம்?

1. கடன் முடியும் காலத்திற்கு முன்பாக வெவ்வேறான கடன் கொடுக்கும் நிறுவனங் களுடன் தொடர்பு கொண்டு, சிறந்த அடமானக்கடனைப் பெறும் வழிகளை கண்டு பிடித்தல் வேண்டும். ஆகக் குறைந்தது மூன்று மாதங்களிற்கு முன்பாக திட்டமிடுதல் நல்லது.

அனேக நிறுவனங்கள் குறைந்தது மூன்று (3) மாதத்திற்கு அடமானக்கடனின் வட்டி வீதத்தை மாற்றாமல் வைத்துக் கொள்வார் கள். வட்டிவீதம் அதிகரித்தாலும் அதிகரிக்க மாட்டார்கள். வட்டிவீதம் குறைந்தால், குறைத்து தருவார்கள். (வட்டி வீதத்தின் பெறுமதிகள் அறிந்து கொள்ள (Canada mortgage.com நல்லதொரு website.)



இந்த websiteஇல் பல நிறுவனங்களின் அடமானக்கடன், வட்டிவீதத்தை காணலாம். இதில் காட்டப்படும் வட்டி வீதத்திலிருந்து மேலதிக கழிவைப் பெறலாம் என்பதனை ஞாபகத்தில் கொள்ளவும்.

பலமுறைகளில் அவர்களுடன் பேரம்பேசி அடமானக் கடனைக் குறைக்கலாம். உங்களுடைய மற்றைய வியாபாரங்களை மாற்றுவதன் மூலம் சிறந்த கழிவைப் பெறலாம். உதாரணமாக RRSP Investment. நிதி நிறுவனங்களுடன் பேரம் பேசும்போது அடமானக்கடனிற்குரிய வட்டி வீதத்தை மட்டும் கவனத்தில் கொள்ளக் கூடாது. மற்றைய விடயங்களையும் கவனித்தல் வேண்டும். உதாரணமாக மாறுகின்ற வட்டி வீதமா அல்லது மாறாததா. எவ்வளவு காலத்தில் முழுக்கடனையும் திருப்பி கொடுத்தல் (Amortization), கடன்பெற்று சிறிது காலத்தில் கடனை முறிக்க வேண்டி யிருப்பின் எவ்வளவு தண்டம் (Penality) செலுத்துதல் வேண்டும் போன்றவை.

பொதுவாக Renewal காலத்தில் புதிய நிறுவனத்திற்கு ஏற்கனவே இருக்கும் அடமானக்கடனை மாற்றும்போது தண்டம் செலுத்த வேண்டி வராது என்பதனை முக்கியமாக மனதில் கொள்ள வேண்டும்.

அனேக சந்தர்ப்பங்களில் நம்பிக்கையான அடமானக்கடன் பெற்று கொடுக்கும் நிறுவனங்களினூடாக (Mortgage Brokerage) அல்லது அடமானக்கடன் முகவரினூடாக மேலதிக கழிவு பெறலாம் என்பது நானறிந்த உண்மை.

***Example :*** $150,000 அடமானக்கடனில் ½% கழிவு, 25 வருட காலத்தில் $10,000 வரை சேமிப்பு பெறலாம்.

### அடமானக் கடனின், முதலீட்டில் மாற்றம்

பெப்ரவரி 15, 2016 இலிருந்து அடமானக் கடன் பெறும்முறையில் மாற்றம் வந்துள் ளது. $500,000 இற்கும் $1 மில்லியனிற்கும் இடைப்பட்ட பெறுமதியுள்ள வீடுகள் வாங்கும்போது மேலதிக ஆரம்ப முதலீடு செய்ய வேண்டியுள்ளது. முதல் $500,000 வரை 5% ஆரம்ப முதலீடும், $500,000 - $1000,000 வரையான விலையுள்ள ஆதனத்திற்கு 10% ஆரம்ப முதலீடு தேவை.

$1 மில்லியனிற்கு மேலான வீடுகளிற்கு 20% முதலீடு செய்ய வேண்டும்.

உதாரணமாக $700,000 வீடு வாங்கும்போது மொத்த முதலீடு $45,000 ஆகும். முதல் $500,000 இற்கு $25,000 ($500,000 x 5% = $25000) மற்றும் மீதமான $200,000 இற்கு $20,000 ($200,000 x 10% = $20,000) மொத்தமாக $45,000 குறைந்த முதலீடு தேவைப்படும்.

குறிப்பு - 2008ஆம் ஆண்டிலிருந்து அடமான் கடன் பெறும்முறையில் பலமாற்றங்கள் வந்துள்ளன அவற்றில் இதுவே இறுதியாக வந்தது.


"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife / GTA Realty Inc. Brokerage.*

5215 Finch Ave, East. #203 Toronto, On. 416 315 9397

* independently owned and operated



Raja Mahendran, P Eng

HOTELS FOR SALE

Prominent Hotels Available For Sale in & around GTA. Price starting from $4 million

Sale /Lease

GTA Square
Middlefield & Finch
Commercial /office space
Size Upto 1000 Sq. Ft.
2nd Floor, 2- Lockers
1-Underground Parking
Available immediately

Retail space

Middlefield &Finch
Retail space
Size Upto 430 Sq. Ft.
Main Floor, corner unit
1-Underground Parking
Price Reduced to $159K
( from $169K)

BAKERY FOR RENT/SALE


Well Established Bakery in East Scarborough
Close to: 10 Highrise condos/Appartments, Schools, TTC,Community Centre,Library and Church.
Included:Bakery Equipments,Coolers & other accessories
Availabe Immediately For Rent or Sale

# சர்க்கரை வியாதியை குணமாக்கலாம்

## பாகம் - 05

உணவு எச்சிலுடன் கலந்து உட்கொள்ளப்படும் போது உணவை எச்சில் ஜீரணத்துக்கு தயார் செய்வதுடன், வயிற்றின் உள்ளுறுப்புகளுக்கு தகவல் அனுப்பி வயிற்றில் விழும் உணவுக்கேற்ற வலிவுள்ள ஜீரண நீர்களை சுரக்க வைக்கிறது. வயிற்றில் உள்ள ஹைட்ரோ குளோரிக் அமிலம் உணவைக் கரைத்து அன்ன ரசமாக்கி, (சர்க்கரையாக்கி) இரத்தத்தில் கலக்கும்போது, ஹைட்ரோ குளோரிக் அமிலமும் தன் தன்மையை விட்டு எச்சிலில் உள்ள சுண்ணாம்புச் சத்தால் அமிலம் (அமிலமும் காரமும் வினைபுரிந்து உப்பையும் தண்ணீரையும் உண்டாக்கும்) தண்ணீராக மாறிவிட வேண்டும். இல்லையேல் அந்த ஹைட்ரோ குளோரிக் அமிலம் குடலின் சுவர்களை அரிப்பதுடன், புண்ணாக்குவதுடன், அமிலத் தன்மை இரத்தத்திலும் ஊடுருவ ஏதுவாகும்.

வெண்புள்ளி நோய் குணமாவதற்கு வீட்டு வைத்தியத்தில் என்ன மருந்து




கூறியிருக்கிறார்கள் தெரியுமா?. கருவேப்பிலைக் கொழுந்தும், கீழா நெல்லி இலைக்கொழுந்து ஒரு கைப்பிடியும் காலை வெறும் வயிற்றில் மென்று விழுங்கி வர குணமாகும் என்பதோடு சர்க்கரை நோயும் கட்டுப்படும். அதுமட்டுமல்ல ஈரல் நோய்களும் குணமாகுவதுடன் உடலில் உள்ள கழிவுகளையும் இவை நன்றாக நீக்கும்.

மேலும் கீழ்க்கண்ட இந்த இணைப்பில் வெள்ளைச் சர்க்கரையான சீனியை தவிர்த்தால், விளையும் நன்மைகளுள் ஒன்று வெண்குஷ்டம் குணமாகும். உடலெங்கும் கேடுகள் செய்யும் வெள்ளைச் சர்க்கரையான சீனியைத் தவிர்ப்போம். மேலும் ஒரு முக்கிய விடயத்தைக் கூறி இந்தப் பதிவை முடிக்கிறேன்.

சமஸ்கிருத மொழியில் "லங்கணம் பரம ஔடதம்" என்பார்கள். அதாவது "பட்டினியே சிறந்த மருந்து" என்பார்கள். மூன்று வேளையும், வேளை தவறாமல் உண்டால் உடம்பு வியாதிகளின் கூடாரமாகும். அப்படி உண்ணுவதே வேலையாக உண்ணாமல் நன்றாகப் பசித்த பின் (காலை உணவுக்குப் பின் பசிக்கவில்லையானால் அன்று முழுவதும் சாப்பிடாதீர்கள்) மட்டுமே உண்ணுங்கள்.

காலை உணவை எக்காரணத்தை முன்னிட்டும் தவிர்க்காமல், அவசரம் அவசரமாகச் சாப்பிடாமல், நிதானமாக காலை 7 மணி முதல் 9 மணிக்குள் கண்டிப்பாகச் சாப்பிட்டு விடுங்கள். ஏனெனில் வயிறின் சக்தி நாளம் இயங்கும் நேரம் இதுவே. தொடரும்...

**Premi. S**
Natural Medicine Practitioner ©
647.278.3100



# காலநிலை...

### 03ஆம் பக்கத்தொடர்ச்சி

நிறுத்தப் படும். இதன்மூலம் அரசு வருடம் ஒன்று $145 மில்லியன் மீதப்படுத்தும். $1.3 பில்லியன் அரசு உதவித் தொகையாக குடும்ப வருமானம் குறைந்தவர்களுக்கு வழங்கப் படும். ஒன்ராரியோவில் கல்லூரிக்குரிய சராசரி கட்டணம் வருடம் ஒன்றிற்கு $2,768 ஆகவும் பல்கலைக் கழகத்திற்கு வருடம் ஒன்றிற்கு $6,160 ஆகவும் இருக்கிறது.

சிகரட்டிற்கான விலை $3ஆல் (200 ஐ கொண்ட பெட்டி) அதிகரிக்கப்படுகிறது. வைன் (wine) இற்குரிய வரி அதிகரிக்கப் படுகிறது. வயது முதிர்ந்தவர்கள் தமது வீடுகளை தமது வசதிக்கு ஏற்ப திருத்து வதற்கு வழங்கப்பட்ட வரிவிலக்கு நிறுத்தப்படுகிறது. பிள்ளைகளின் உடற் பயிற்சி செலவினங்களுக்கு வழங்கிய வரிவிலக்கு நிற்பாட்டப்படுகிறது.

இதைவிட வாகனங்களின் எரிபொருள் வெளியேற்றத்தை பரிசோதனை செய்ய (Drive Clean Test) அறவிடும் $30 இனி மேல் அறவிடப்படமாட்டாது. இது 2017 ஆம் ஆண்டில் இருந்தே அமல்படுத்தப் படும். வயது முதிர்ந்தவர் களுக்கு (65வயதிற்கு மேல்) அறவிடப் படும் Shingles நோய்தடுப்பூசி கட்டணமான $170 இனிமேல் அறவிடப்பட மாட்டாது.

சுகாதார பராமரிப்புக்கு வழங்கும் நிதி $345 மில்லியனால் உயர்த்தப்படுகிறது. வயது முதிர்ந்தவர்களுக்கான மருந்து சீட்டுக்கு அறவிடப்படும் $2 பணம் இனிமேல் $19,300 இற்கு குறைந்த வருடவருமான உள்ள தனி ஒருவர் அல்லது $32,000 இற்கு குறைந்த வருட வருமானம் உள்ள தம்பதியினருக்கு அறவிடப்படும். அதற்கு மேற்பட்ட வருமானம் உள்ள வயது முதிர்ந்தவர் மருந்து சீட்டிற்கு $7.11 கட்ட வேண்டும். இது தற்போதைய கட்டணத்தை விட $1 அதிகம் ஆகும்.

# மனித உரிமை பேரவையின் 31ஆவது கூட்டத்தொடர் ஆரம்பம்!

இலங்கையின் மனித உரிமை நிலைப்பாடு மற்றும் தற்போதைய நல்லிணக்க செயற்பாடுகள் எவ்வாறான நிலையில் உள்ளதென, 2016 பெப்ரவரி, 29ஆம் திகதி ஆரம்பமான ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 31ஆவது கூட்டத் தொடரில், அதன் ஆணையாளர் செயிட் அல் ஹூசைன் தெளிவுபடுத்தவுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 24ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இந்த அமர்வில், இலங்கை குறித்த விவாதத்திற்கு நிகழ்ச்சிநிரலில் இதுவரை நேரம் ஒதுக்கப்படாத நிலையில், கூட்டத்தொடரின் ஆரம்பத்தில் ஐ.நா ஆணையாளர் சிறப்புரை ஆற்றவுள்ளார். இதன்போது இலங்கையின் மனித உரிமை நிலை குறித்து ஐ.நா ஆணையாளர் விளக்கவுள்ளார். இந்த அமர்வில் ஜெனீவாவில் உள்ள இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தலைமையிலான குழுவினர் கலந்து கொள்ளவுள்ளனர்.



அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர், வடக்கு கிழக்கிற்கு சென்று மக்களின் நிலையறிந்ததோடு, பாதிக்கப் பட்ட இடங்களையும் பார்வையிட்டார். இதன டிப்படையில் இலங்கையில் நிறைவேற்றப் பட வேண்டிய விடயங்கள் பலவுள்ளன என சுட்டிக்காட்டிய ஐ.நா ஆணையாளர், தாம் ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப் போன்று இலங்கை விவகாரத்தில் சர்வதேச நீதவான் கள் உள்ளடக்கப்பட வேண்டுமென்பதில் மாற்றுக் கருத்து இல்லையென குறிப்பிட்டி ருந்தார். எனினும், அதனை தீர்மானிக்கும் பொறுப்பு இலங்கையிடமே உள்ளதென குறிப்பிட்ட அவர், உள்நாட்டு விசாரணையா யின், அது பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி யையும் நியாயத்தையும் பெற்றுக்கொடுக்கும் வகையில் அமைந்தால் அதனை ஏற்றுக் கொள்ளலாமெனவும் குறிப்பிட்டார். இந் நிலையில், இவ்விடயங்கள் குறித்து, உலக நாடுகளின் நிலைப்பாடும் இக்கூட்டத்தொட ரில் வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பான விசாரணையில், சர்வதேச நீதவான்களும் வழக்கறிஞர்களும் உள்ளடக் கப்பட வேண்டுமென குறிப்பிட்டப் பட்ட பிரேரணை கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற ஐ.நாவின் 30ஆவது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்டது. இதற்கு இலங்கையும் அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**உள்ளக விசாரணை நீதியானதெனில் ஏற்றுக்கொள்ளப்படும்: ஐ.நா ஆணையாளர்**

இலங்கைக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்ட ஐ.நா மனித உரிமை- கள் பேரவை ஆணையாளர் செயிட் அல் ஹூசைன், தமது பயணத்தை நிறைவுசெய்துகொண்டு 2016 பெப்ரவரி, 10ஆம் திகதி நாடு திரும்பியிருந்தார். இந்த நான்கு நாள் பயணத்தின்போது, யுத்த பாதிப்புக்கு உள்ளான வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு சென்ற ஐ.நா ஆணையாளர் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்திருந்தார்.

அடுத்த வருடம் தாம் இலங்கை வரும்போது, அகதி முகாம் இருக்காதென்றும் அனைவரும் சொந்த இடங்களில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டிருப்பர் என்றும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹூசைன் உறுதியளித் திருந்தார். யாழ்ப்பாணத்திற்கு 2016 பெப்ரவரி, 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பயணம் செய்த ஐ.நா ஆணையாளர், 'சபாபதிப்பிள்ளை அகதி முகாம்' இக்குச் சென்று அங்குள்ள மக்களை சந்தித்து இந்த உறுதிமொழியை வழங்கியிருந்தார்.

இதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வின் கவனத்திற்கு கொண்டுவருவதாகவும்,

தொடர்ச்சி 14ஆம் பக்கம்...

# தமிழகத்தின் அரவிந்த் கெஜ்ரிவாலாக மக்கள் என்னைப் பார்க்கிறார்கள்!

## நேர்காணல் : அன்புமணி ராமதாஸ்

தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் இரண்டு மாதங்கள்தான் உள்ளது. ஆனாலும், அரசியல் கட்சிகள் கூட்டணி பேச்சுவார்த்தை இன்னமும் முடியவில்லை. யார் யாருடன் இருப்பார்கள், எந்தத் தொகுதி யாருக்குப் போகும் என்று தெரியாத நிலையிலேயே எல்லா கட்சிகளும் விருப்ப மனுபெற்று, நேர்காணலை நடத்திக் கொண்டிருக் கின்றன. அனைவருக்கும் முன்னால் முதல்வர் வேட்பாளரை அறிவித்து, தமிழகம் முழுக்க சுவரொட்டி யுத்தத்தை நடத்தி வருகிறது, பாமக. தனித்தே நிற்பார்களா, யாருடனாவது சேர்வார்களா? பாமக முதல்வர் வேட்பாளர் அன்புமணியை ஒரு மாலை வேளையில் நேரில் சந்தித்து உரையாடினோம்.

**பாமக வட தமிழகத்தில் மட்டுமே பலமான கட்சி. இந்நிலையில் எந்த தைரியத்தில் முதல்வர் வேட்பாளராக நீங்கள் களமிறங்குகிறீர்கள்?**

பாமகவுக்கு தமிழகத்தின் மத்திய மற்றும் தெற்கு, மேற்கு பகுதிகளில் வாக்கு வங்கி இல்லை என்பது தவறான தகவல். கோவையில் நடந்த எங்கள் மாநாட்டில் இலட்சக்கணக்கான மக்கள் திரளாக கூடினார்கள். திருநெல்வேலி, மதுரை, திருச்சி என நாங்கள் கூட்டம் நடத்திய இடங்களில் எல்லாம் மக்களின் கூட்டம் அலையடித்தது. புதுக்கோட்டையில் பொதுக் கூட்டத்திற்கே இவ்வளவு கூட்டமா என்று ஊடகங்கள் அதிசயித்துப் போகவில்லையா? கோவில்பட்டி மது ஒழிப்புப் போராட்டத்தில் கொட்டும் மழையில் 5,000க்கும் மேற்பட்ட பெண்கள் திரள வில்லையா?

**சந்திப்பு: சிவதாணு**

**தமிழகம் முழுக்க மக்கள், குறிப்பாக மாற்றத்தை விரும்பும் இளைஞர்கள் பாமகவின் பெரிய பலமாக இருக்கிறார்கள். டில்லி சட்டசபை தேர்தலில் காங்கிரஸையும் பா.ஜ.கவையும் தூக்கி எறிந்துவிட்டு அரவிந்த் கெஜ்ரிவாலை கொண்டு வந்தது போல் இந்த அன்புமணியை தமிழக இளைஞர்கள் கொண்டு வருவார்கள்.** தமிழகத்தில் 60 சதவீதம் பொது வாக்காளர்கள் என்றால், அவர்களில் 23 சதவீதம் பேர் இளைஞர்கள். இந்த 23 சதவிகிதத்தினரும் 50 ஆண்டுகால ஊழல் ஆட்சிக்கு முற்றுபுள்ளி வைக்கத் துடிக்கிறார்கள். இன்னும் 50 ஆண்டுகள் ஆண்டாலும் அதிமுகவாலும் திமுகவாலும் தமிழகம் முன்னேறவே முன்னேறாது என்று அவர்கள் நினைக்கிறார்கள். இந்த திராவிட கட்சிகளுக்கு மாற்றான சக்தியாக, மருத்துவராகவும் இளைஞராகவும் இருக்கும் என்னை இளைஞர்கள் எதிர்பார்க்கிறார்கள். இவர்களோடு, பாமக ஆட்சிக்கு வந்தால் தான் பூரண மதுவிலக்கை அமல்படுத்த முடியும் என்று நம்பும் தமிழக தாய்மார் களும் எங்கள் பலம்.

ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களின் அடிப்படை பிரச்சினைகளில் முதல் ஆளாக குரல் கொடுப்பதும் போராடுவதும் பா.ம.க.தான். கோடிக்கணக்கான குடும்பங்களை சீரழிக்கும் மதுவுக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பித்ததே




நாங்கள்தான். உச்சநீதிமன்றம் வரை சென்று போராடி நெடுஞ்சாலைகளிலுள்ள 600 டாஸ்மாக்குகளை மூடினோம். நான் மத்திய அமைச்சராக இருந்த காலங்களில் பல்வேறு நலத்திட்டங்களை செய்திருக்கி றேன். இதையெல்லாம் பார்க்கும் மக்கள் இவர்கள் ஆட்சிக்கு வந்தால் இன்னும் என்னென்ன செய்வார்கள் என்று யோசிக்கிறார்கள்.

நாங்கள் சும்மா விளம்பரத்துக்காக சொல்ல வில்லை. மாற்றம் வரும், அதை நீங்கள் பார்ப்பீர்கள்.

**உங்கள் மீது சாதிக்கட்சி என்று முத்திரை உள்ளது. குறிப்பாக தர்மபுரி சம்பவத்துக்குப் பிறகு அது அதிகமாகியிருக்கிறது. இதை எப்படி சரி செய்வீர்கள்?**

தர்மபுரி சம்பவத்திற்கும் எங்களுக்கும் எந்த தொடர்பும் கிடையாது. அங்கிருக்கும் மக்களே தூண்டிவிட்ட பிரச்சனை அது. எங்களின் வளர்ச்சியைப் பார்த்து பயப்படு பவர்கள் பா.ம.க. மீது சாதிக் கட்சி முத்திரை குத்தப் பார்க்கிறார்கள். கட்சி ஆரம்பித்ததிலிருந்து இன்றுவரை தலித்து களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோம் என்பது எல்லோருக்கும் தெரியும். தலித்துகளுக்கு உயர்ந்தப் பதவிகளை எங்கள் கட்சியில் தான் கொடுத்துள்ளோம். குடிதாங்கியில் தலித் பிணத்தை தோளில் சுமந்து சென்று அடக்கம் செய்தவர், எங்கள் அய்யா. நான் மத்திய அமைச்சராக இருந்தபோது, 'ஆல் இந்தியா மெடிக்கல் எண்ட்ரஸ் எக்ஸாமில்' தலித்துகளுக்கு இட ஒதுக்கீடு கொண்டு வந்தேன். இதன்மூலம் ஆண்டுதோறும் 4000 தலித் மாணவர்கள் படித்து பயனடைகி றார்கள். தமிழகத்தில் தென்மாவட்டங்களில் தினந்தோறும் நான்கு கொலைகள் நடக்கின்றன. வடமாநிலங்களில் அப்படி யொரு நிலை இல்லையே. சமூக ஆர்வலர்கள் என்கிற போர்வையில் என்னைப் பற்றி சமூக வலைதளங்களில் பொய்யாக விமர்சித்து வருபவர்கள், திமுகக்காரர்கள்தான்.

**இப்போது எல்லோருமே முதலமைச்சர் கனவில் இருக்கிறார்கள் என ஸ்டாலின் பேசியுள்ளார். உங்களை மனதில் வைத்து தான் அவர் இதனை சொல்லியிருக்க வேண்டும்?**

எங்களைப் போல, ஸ்டாலினை முதலமைச்சர் வேட்பாளராக அறிவிக்க திமுகவுக்கு தைரியம் இருக்கிறதா? ஸ்டாலினே இப்போது குழப்பத்தில் இருக்கிறார். மக்கள் நலக்கூட்டணியிலும் வைகோ முதலமைச்சர் வேட்பாளர் இல்லை என்று அவரே பின்வாங்கிவிட்டார். விஜயகாந்த் அனைத்து கட்சிகளிடமும் பேசிக்கொண்டே இருக்கிறார்.

**நீங்கள் என்ன சொல்லி வாக்கு கேட்பீர்கள்?**

புதிய நிர்வாகத்தை கொண்டு வருவேன். ஏற்கெனவே எங்கள் அறிக்கைகளில் சொல்லியுள்ளபடி, என்னுடைய முதல் கையெழுத்தே, ஒரு சொட்டு மதுகூட இல்லாத தமிழகமாக மாற்றுவதற்கானதா- கத்தான் இருக்கும். ஊழலை ஒழிப்பது, விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவது, சட்டம் ஒழுங்கை சரிசெய்வது, தொழில் துறை மற்றும் விவசாயத்தை மேம்படுத்து வது போன்றவற்றில் கவனம் செலுத்து வோம். இலவசங்களை கொடுக்காமல் வேலை வாய்ப்புகளை கொடுப்போம். குடும்பத்தில் ஒருவருக்காவது வேலையை உறுதி செய்வேன்.

பா.ம.க. ஆட்சிக்கு வந்தால், ஒரு டோல்ஃப்ரீ நம்பரை அறிமுகப்படுத்துவோம் அதற்கு தமிழகத்தின் எந்த மூலையிலிருந்தும் என்ன பிரச்சனையாக இருந்தாலும் பேசலாம். பிரச்சினை முதல்வர் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு தீர்த்து வைக்கப்படும் என அறிவித்திருந்தேன். அதைப் பார்த்து, அம்மா அழைப்பு மையம் தொடங்கி, தேர்தல் நெருங்கும் நேரத்தில் ஓட்டு வாங்கப் பார்க்கிறார் ஜெயலலிதா. மாற்றம் முன்னேற்றம் அன்புமணி – சுவரொட்டியை பிரதியெடுத்து ஸ்டாலின் சுவரொட்டி அடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இரண்டு திராவிட கட்சிகளுமே நாடகக் கட்சிகள்தான்.

**டாஸ்மாக்கை மூடுவது சாத்தியமே இல்லை என்று அதிமுக அமைச்சர் நத்தம் விஸ்வநாதன் சட்டமன்றத்தி லேயே அறிவித்திருக்காரே?**

டாஸ்மாக்கை மூடினால் கள்ளச்சாராய சாவுகள் அதிகரித்துவிடும் என்கிறார்கள். ஆனால், உலக சுகாதார மையத்தின் ஆய்வுப்படி கள்ளச்சாராய சாவுகள் 0.4 சதவீதம்தான். டாஸ்மாக் மதுவால் உயிரி ழப்பவர்கள் எண்ணிக்கையோ 99.6 சதவீதம். இன்னொரு வாதம் மது விலக்கை கொண்டு வந்தால் அரசுக்கு ஏற்படும் இழப்பீட்டை எப்படி சரி செய்வது என்பது. தாது மணல், கிரானைட் கொள்ளை போன்றவற்றை சரி செய்து முறைபடுத்தி னாலே அந்த இழப்பீட்டை சரி செய்துவிட முடியும். மதுவிலக்கை அமல்படுத்தாமல் இருக்க பல காரணங்கள் சொல்லப்பட்டா லும் உண்மையான காரணம், மதுவிலக்கு கொண்டு வந்தால் அதிமுக, திமுக, காங்கிரஸ் கட்சிகளைச் சேர்ந்த அரசியல் வாதிகளின் வருமானம் போய்விடும் என்பது தான். டாஸ்மாக்குக்கு மதுவை சப்ளை செய்யும் மதுபான தொழிற்சாலைகளில் 6 திமுக, 3 அதிமுக, 2 காங்கிரஸ் கட்சி களை சேர்ந்தவர்களுடையது. டாஸ்மாக் ஆர்டர் மூலமாக மொத்தமா 36 ஆயிரம் கோடி ரூபாய் இவர்களுக்கு வருமானம்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# 100 விஜயகாந்த்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

"எனது மூதாதையர்கள் நாடகத்தில் நடித்து வந்ததால் கலைத்துறை மீது எனக்கு ஆர்வம் எழுந்தது. துவக்கத்தில் கட்டைக் கூத்தில் நடித்தேன். தற்போது அரசியல் மேடையில் நடித்து வருகிறேன். கலைஞர் வேடம் மட்டுமல்லாமல் அண்ணா, எம்.ஜி.ஆர். வேடங்களும் போடுவேன். எனவே அ.தி.மு.க., தி.மு.க. இரண்டு கட்சிகளின் கூட்டங்களிலும் எனக்கு வாய்ப்புகள் கிடைக்கும். 1000 முதல் 2000 ரூபாய் வரை கூட்டத்துக்கு ஏற்றார் போல கூலி கிடைக்கும்" என்கிறார் 'கலைஞர்' மார்க்கண்டேயன். இவர் குறிஞ்சிப்பாடி - வேங்கடம்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த அரசு அலுவலர்.

தேர்தல் காரணமாக இப்போது நிறைய வாய்ப்புகளும் வருமானமும் வந்தாலும், மற்ற நாட்களில் இந்த டுப் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் பாடு மிக சிரமமானதுதான். கட்சி கூட்டங்கள், மாநாடு மற்றும் தலைவர்களின் பிறந்த நாளை தவிர மற்ற நாட்களில் வேலை இருப்பதில்லை.

"தற்போது எங்களைப் போன்ற கலைஞர்களுக்குக் கட்சி பொது கூட்டங்களில் மட்டுமே நடிக்க அனுமதி கிடைக்கிறது. நாள் ஒன்றுக்கு எனக்கு 500 ரூபாய் முதல் 600 ரூபாய் வரை கூலி கிடைக்கும். அரசியல் மேடை நிகழ்ச்சிகள் இல்லாத நாட்களில் சொந்த வேலையில் ஈடுபடுவேன். ஆனால், அக்காலங்களில் பெரிய வருமானம் இருக்காது என்பதால் எங்களது பாடு திண்டாட்டம்தான்" என்கிறார் 'விஜயகாந்த்' குமார்.

"கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தில் தனி மேடை நிகழ்ச்சிகளை நடத்த எங்களுக்கு அனுமதி கிடைப்பதில்லை. ஒரு சில கட்டுப்பாடுகளை எங்களது நிகழ்ச்சிகளுக்கு அரசு நிர்ணயித்துள்ளது. யாரோ ஒரு சிலர் செய்கின்ற தவறினால் ஒட்டுமொத்த மேடை நடிகர்களும் வஞ்சிக்கப்படும் நிலை. எனவே அதற்குத் தீர்வு காணும் விதமாக "தமிழக திரைப்பட மேடை நடனக் கலைஞர்கள் நலச்சங்கம்" என்ற சங்கத்தை உருவாக்கி, எங்களது வாழ்வாதாரத்திற்காகப் போராடி வருகிறோம். இந்த முயற்சியால் தற்போது சேலம், கோவை, திருப்பூர் போன்றப் பகுதிகளில் மேடை நிகழ்ச்சிகள் நடத்த எங்களுக்கு அனுமதி கிடைத்து வருகிறது. இருப்பினும் கட்சி கூட்டங்களுக்குக் கிடைக்கின்ற அனுமதி போல கிடைப்பதில்லை. இதேநிலை நீடித்தால் வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் நாங்கள் வேறு பணிக்கு செல்ல வேண்டியதுதான்" என்கிறார் தமிழக திரைப்பட மேடை நடனக் கலைஞர்கள் நலச்சங்க பொது செயலாளர் பூபதி.



- சிவதாணு -

"தலைவர்கள் வருவது வரைக்கும் அந்தக் கூட்டத்தின் ஹீரோவாக இருக்கும் நாங்கள் தலைவர்கள் மேடை ஏறியவுடன் கீழே இறக்கப்படுவோம். பெரும்பாலும் தலைவர்களைச் சந்திக்கவே வாய்ப்பு கிடைக்காது. எங்களது குறைகளைகூடச் சொல்ல கட்சி நிர்வாகிகள் அனுமதிக்கமாட்டார்கள். எங்களைப் போன்ற மேடைக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசு ஏதேனும் செய்ய வேண்டும்" என்கிறார், முதல்வர் ஜெயலலிதா போல வேடமிடும் திண்டுக்கல்லைச் சேர்ந்த நடிகை பத்மா.

மேடையில் நாம் பார்க்கும் ஆட்டம், பாட்டம், கொண்டாட்டமான இக்கலைஞர்களின் மறுபக்கம் வலிகள் நிறைந்தது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கதை. டுப்கள் என்றாலே சோகம்தான் போலும்.

# மனித உரிமை...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

மீள்குடியேற்றம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதாக வும் ஐ.நா ஆணையாளர் இதன்போது குறிப்பிட்டிருந்தார். அத்துடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் முப்படைத் தளபதிகள் உள்ளிட்ட பல தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்ததோடு, நாட்டின் நல்லிணக்க செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்திருந்தார். இதேவேளை, அரசாங்கத்தின் செயற்பாடு கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவ தாகவும் எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் தெளிவுபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வகையான பொறிமுறையொன்றையே ஆரம்பத்திலிருந்து நாம் விரும்புகின்றோம். கடந்த காலங்களில் இலங்கை மேற் கொண்ட உள்ளக விசாரணைகளில், பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்கப் பெறாத நிலையில், அவர்கள் உள்ளக பொறிமுறை மீது நம்பிக்கை கொள்ள மாட்டார்கள்.

எனினும் இலங்கை அரசாங்கம் எந்த தீர்மானத்தை எடுத்தாலும், அதற்கு பாதிக்கப்பட்ட அனைத்துத் தரப்பினரதும் ஆதரவு இருக்கும் பட்சத்தில், அதனை ஏற்றுக்கொள்ள முடியும். அத்தோடு, குறித்த விசாரணை பொறிமுறை பக்கச்சார்பற்ற தாகவும் சுயாதீனமானதாகவும் இருக்க வேண்டியது அவசியம்' என குறிப்பிட்டார்.



யுத்தக் குற்றம் தொடர்பான இலங்கையின் விசாரணை பொறிமுறையானது, சுயாதீன மானதாகவும் நம்பகத்தன்மை வாய்ந்த தாகவும் இருக்குமிடத்து அது ஏற்றுக் கொள்ளக் கூடியதென ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் தெரிவித்திருந்தார். இலங்கைக் கான உத்தியோகபூர்வ பயணத்தினை யடுத்து, ரொயிட்டர்ஸ் செய்திச் சேவைக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். குறித்த செவ்வியில் அவர் மேலும் தெரிவித்திருந்ததாவது

'யுத்த குற்ற விசாரணை தொடர்பில், இலங்கை அரசாங்கத்தின் மீது நாம் எதனையும் திணிக்கவில்லை. குறித்த விசாரணை தொடர்பில் இலங்கை ஜனாதி பதி தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி யுள்ளார். எமது விருப்பத்தை நாம் தெரிவி த்துள்ளோம். யுத்தக் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணை யில், சர்வதேச பங்களிப்புடன் கூடிய கலப்பு

யுத்தக் குற்ற விசாரணையில் சர்வதேசம் பங்களிப்பு செய்யுமிடத்து, அது இலங்கை இராணுவத்தினரை தண்டிப்பதாக அமையு மெனவும் சர்வதேசத்தின் தலையீடு எந்த வகையிலும் தேவையில்லையெனவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவரது ஆதரவு அணியினர் மற்றும் பௌத்த பிக்குகள் உள்ளிட்ட பலர் தெரிவி த்து வருகின்றனர்.

இதேவேளை, அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிபிசிக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிடப்பட்டதைப் போன்று, யுத்த குற்ற விசாரணையின்போது இலங்கையின் நீதித்துறையில் சர்வதேச தலையீடு இருக்காதெனவும், விசாரணை பொறிமுறைக்குத் தேவையான தொழிநுட்ப உதவிகள் மாத்திரம் சர்வதேசத்திடமிருந்து பெற்றக்கொள்ளப்படுமென்றும் அமைச்சர் பைசர் முஸ்தபா, கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. - நன்றி Athvan News




# கனடாவின் நீரேரியில் அஸ்தியினை கரைப்பதற்கு அச்சம் ஏன்?

## கனடிய தகவல் தொடர் 244

ஆங்கிலத்தில் கீழ்வருமாறு எழுதப்பட்ட பதாகை ஒன்று மக்கள் அதிகமாக குவியும் அந்த பிரபல்யமான ஒன்ராறியோ நீரேரி யின் ஒரு பகுதியில் சகலரும் பார்த்து ஓர் உண்மையினை புரிந்து கொள்வதற்காக வைக்கப்பட்டுள்ளது. அந்தப்பக்கம் சென்றால் அவதானித்து பாருங்கள்

'Bronte creek provincial park' என குறிப் பிடப்படும் இந்த பகுதிகளில் உள்ள நிலப் பகுதிகளிலோ அல்லது நீரேரிப்பகுதி களிலோ உங்கள் அன்புக்குரியவர்களின் அஸ்தியினை தாராளமாக கரைக்கலாம்.

சூழல், சுற்றாடலின் மாசுபடுத்தலை குறைத்துக்கொள்வதற்கு தயவுசெய்து பின்வரும் விதிமுறைகளை பின்பற்றுங்கள்.

- பிளாஸ்ரிக் பூக்கள், எழுதப்பட்ட நோட்டு கள், மற்றும் எந்த பொருட்களையும் இந்த பகுதிகளில் வீச வேண்டாம்.
- கிரியைகளுக்கு பயன்படுத்தப்பட்ட சில்லறைகள், உடுப்புகள், பவுண் நகைகள் எவற்றினையும் இந்தப் பகுதியிலோ அல்லது கடல் நீரேரியிலோ வீச வேண்டாம்.
- ஒதுக்கப்பட்ட பகுதியில் நின்று கிரியை களை செய்யுங்கள்.
- அந்த பகுதியில் உள்ள இயற்கையான தாவரங்கள், மரங்களை வெட்டவோ அல்லது அகற்றவோ வேண்டாம்.

இப்படித்தான் அந்த நீல கலர் பதாகையின் வசனங்கள் ஆங்கில மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஓக்வில்" (Oakville) நகரில் நீளமான நீரேரி பகுதியோடு மரங்கள், தாவரங்கள் என இயற்கை வள சோலையோடு அமைத்த மாகாண அரசின் நிர்வாகத்தில் உள்ள பின்வரும் முகவரியில் கோடை காலத்தில் மக்கள் திரண்டு உல்லாசமாக இருக்கும் பகுதியிலேயே இந்த அனுமதிக் கப்பட்ட பதாகை உள்ளது. அந்த இடத்தின் முகவரி இதுவாகும்.

Bronte Creek Provincial Park
1219 Burloak Drive
Oakville, ON L3M 4J7
Phone - 905-827-6911

கோடைகால உல்லாசங்களை அனுபவிக்க இந்த கடல் கரை பிரதேசங்களுக்கு செல்வோர் யாவருக்கும் இது கவனத்தில் கொள்ளக்கூடிய ஒரு பதாகையாகவே உள்ளது.

கடந்த மே, 2015இல் கனடாவின் ஆங்கில ஊடகத்தில் பணிபுரியும் தமிழ் இளைஞ ரான திரு. ஜெயன் - ஜெகநாதன் அவர்கள் (ரொறொன்ரோ றைசன் பல்கலைக்கழகத் தில் ஊடகத்துறையில் சிறப்பு பட்டம் பெற்றவர். இவர் களத்தில் நின்று தகவல்களை பரிமாறும் தொலைகாட்சி, ஒலிபரப்பு ஊடகவியலாளர்) இந்த இடத்தில் நின்று அஸ்தி கரைக்கும் உரிமை கனடாவில் எப்படி சட்டமாக்கப் பட்டுள்ளது என்பதனை வட இந்திய உத்தரகாசியில் நடந்த வீடியோ படங்களுடன் இந்து சமய சம்பிரதாய சடங்குகளின் ஆதாரத்தை ஆங்கிலத்தில் கனேடிய தேசிய தொலைகாட்சியினூடாக தெளிவு படுத்தியிருந்ததார்.



அதாவது அஸ்தியினை அந்தந்த சமய, கலாசார சம்பிரதாயங்களின்படி ஒன்ராரியோ நீரேரிகளில் கரைப்பதற்கு எதுவிதமான தடையுமில்லை என்பது 2009ஆம் ஆண்டிலிருந்து உறுதியான சட்டமாக மாகாண அரசால் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்துக்கள், சீக்கியர், புத்த மதத்தவர்கள் மற்றும் கீழைத்தேய சமயங்களினை பின்பற்றுபவர்களே அஸ்தியினை நீரில் கரைப்பது போன்ற சம்பிரதாயங்களை செய்பவர்கள் ஆவர்.

மாகாண அரசில் இவை தொடர்பான சட்ட உரிமைகளை பின்வருமாறு அரச ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தகனம் செய்யப்பட்ட பூதவுடலின் அஸ்தியினை ஒன்ராரியோவில் நிலத்திலும் நீரேரியிலும் வீசுதல்

தகனம் செய்யப்பட்ட சாம்பலை வீசுவது என்பது ஒன்ராரியோவில் வாழும் சில சமூகங்களின் மதம் சம்பந்தப்பட்ட நம்பிக்கையாகும். எந்தவொரு தனிநபரோ அல்லது குடும்பத்தவரோ தங்கள் பேரன்புக்குரியவரின் பூதவுடல் தகனம் செய்யப்பட்ட சாம்பலை ஒன்ராரியோவில் உள்ள அரச நிலங்கள் அல்லது அதனுடன் சேர்ந்த நீரேரி பகுதிகளில் தாரளமாக வீசலாம்.


குடிமக்கள் வாழாத அரச நிலம், அத்துடன் சேர்ந்த நீரேரிகளில் தனி நபர், குடும்பத்தவர் எவரும் தகனம் செய்யப்பட்ட அஸ்தியினை வீசுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. மாகாண பூங்கா, மரங்கள் செடிகள், புதர்கள் நிறைந்த பகுதிகள், இவற்றுடன் சேர்ந்த நீரோடைகள் போன்ற இடங்களில் அஸ்தியினை வீசுவதற்கு அரச அனுமதி ஒன்றும் தேவையில்லை. ஆனால் தனி நபர் நிறுவனங்களுக்கு சொந்தமான நிலங்கள், நீரேரி பகுதிகளில் மட்டும் அஸ்தியினை வீசுவதாக இருந்தால் அவர்களின் அனுமதி பெற்றே வீச வேண்டும்.

தகனம் செய்யப்பட்ட இப்பூதவுடல்களின் அஸ்தியினை வீசும் சந்தர்ப்பங்களில் சூழல், சுற்றாடல்கள் மாசுபடாது இருத்தல் என்ற பொறுப்புணர்வுடன் நிகழ்வுகள் யாவும் நடத்தப்படல் வேண்டும். அதாவது தகனம் செய்யப்பட்ட பூதவுடலின் அஸ்தியுடன் சேர்ந்து சிறிதளவு இலைகள், பூக்களை வீசுவது பிரச்சினையில்லை. ஆனால் சுற்றாடல்களை மாசுபடுத்தும் பிளாஸ்ரிக் பைகள், உபகரணங்கள், தேங்காய், சில்லறை காசுகள் போன்றன தவிர்த்து கொள்ள வேண்டும் என மாகாண அமைச்சின் சட்டபிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அஸ்தியினை நீரேரிகளில் கரைப்பதற்கு அல்லது அந்த இடங்களில் கிரியைகள் செய்வதற்கு எதுவிதமான தடையோ அல்லது பிரச்சினையோ இல்லை எனவும், அரசு கனடாவின் மத சுதந்திரத்திற்கும், சமய சடங்குகள், நம்பிக்கைகளுக்கு தடை எதுவும் விதிக்கவில்லை என கடந்த காலங்களில் பலமுறை ஆங்கில ஊடகங் களும் தகவல் வெளியிட்டிருந்தனர்.

'அஸ்தி வீசும் கோட்பாட்டில் தெளிவினை தேடும் மரணத்தில் துயருறும் இந்து சீக்கிய சமூகத்தினர்' என்னும் தலைப்பில் ஆகஸ்ட் 04, 2009இல் 'National Post' பத்திரிகை ஆய்வுக்கட்டுரை ஒன்றினை வெளியிட்டிருந்தது.

'இந்துகள் அஸ்தி வீசும் விதிகளை வெளியிடுகின்றனர்.' என்னும் தலைப்பில் ஒக்ரோபர் 13, 2010 இல் CBC என்னும் பிரபல்யமான கனேடிய செய்தி ஊடகம் கட்டுரை வெளியிட்டிருந்தது.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 34ஆம் பக்கம்



# தமிழகத்தின்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

வருகிறது. எப்படி மூடுவார்கள்? மக்களின் நலனில் அக்கறையோடு பேசுவது போல் நடிக்கிறார்கள்.

ஊழலை ஒழிப்பேன் என்று சொல்கிறீர்கள். ஆனால், உங்கள் மீதே மருத்துவக் கல்லூரி முறைகேடு தொடர்பாக சி.பி.ஐ வழக்கு ஒன்று இருக்கிறதே?

அது ஊழல் வழக்கு கிடையாது. காங்கிரஸ் கட்சியிலிருந்து நாங்கள் விலகியபோது அரசியல் காரணங்களுக்காக போட்டப்பட்ட வழக்கு. எங்களை ப்ளாக் மெயில் செய்து பார்த்தார்கள். உச்சநீதிமன்றமே நாங்கள் கொடுத்த அனுமதி செல்லும் என்று உத்தர விட்டிருக்கிறது. அந்த வழக்கு நிற்காது.



கூட்டணி குறித்து?

முதலிலேயே சொன்னது போல் என்னை முதலமைச்சர் வேட்பாளராக ஏற்றுக்கொள்ளும் கட்சியுடன்தான் கூட்டணி என்பதில் உறுதியாக இருக்கிறோம். தேவைப்பட்டால், கூட்டணிக்கு வரும் கட்சிகளில் தகுதி இருப்பவர்களுக்கு துணை முதல்வர் பதவியை தருவோம்.

ஆனால், கருத்துக் கணிப்பு முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இல்லையே?

ஐந்து கோடியே 79 லட்சம் வாக்காளர்கள் இருக்கும் தமிழகத்தில் 3000 பேரை மட்டும் சந்தித்து எடுப்பது கருத்துக் கணிப்பு அல்ல. கருத்துத் திணிப்பு. இது ஏமாற்று வேலை, பித்தலாட்டம். குறிப்பாக, திமுக ஆதரவு ஊடகங்கள் வேண்டுமென்றே எங்களை பலவீனப்படுத்த இப்படிப்பட்ட பித்தலாட்டமான கருத்துத் திணிப்புகளை வெளியிடுகிறார்கள். அதிமுக, திமுக இரண்டு கட்சிகளை தவிர யாரும் இல்லை என்று மக்கள் மனதில் திணிக்கப் பார்க்கிறார்கள். அதிமுகவின் மேல் உள்ள கோபம் திமுகவிற்கு சாதகமாக இருக்கும் என்று நினைக்கிறார்கள். இதுவரை அப்படித்தான் இருந்திருக்கிறது. இந்த முறை நிச்சயமாக அந்த நிலை மாறும். அதிமுகவின் ஊழலைப் பற்றிப் பேச திமுகவுக்கோ ஸ்டாலினுக்கோ எந்த யோக்கியதையும் இல்லை. மக்கள் இன்னும் 2ஜியை மறக்கவில்லை. ஸ்டாலினுக்கு நான் எழுதிய கடிதத்துக்கு இன்று வரை அவரிடமிருந்து எந்த பதிலும் வரவில்லையே.

ஊழலை ஒழிக்க சகாயம் முதல்வராக வேண்டும் என்று நிறைய இளைஞர்கள் விரும்புகிறார்கள். அது பற்றி உங்கள் கருத்து?

அவர் ஒரு நேர்மையான அரசு அதிகாரி. அதில் எந்த சந்தேகமுமில்லை. கிரானைட் முறைகேடு விசாரணைகளில் அவருக்கு ஆதரவாக நாங்கள் அறிக்கை வெளியிட்டோம். அவர் முதல்வராக வேண்டும் என்று இப்போது பல்வேறு அமைப்புகள் கிளம்பியிருக்கின்றன. ஆனால், அரசியலுக்கு வருகிறாரா இல்லையா என்பதை அவர் தெளிவுபடுத்தவில்லை. அவர் அமைதி காப்பது சரியல்ல என நினைக்கிறேன்.

கலைஞர், ஜெயலலிதா இருவரும் தான் இப்போதைக்கு உங்களுக்கு போட்டி முதல்வர் வேட்பாளர்கள். அவர்களிடம் பிடித்த விடயங்கள் என்ன?

கலைஞரின் உழைப்பு பிடிக்கும். இந்த வயதிலும் ஓய்வில்லாமல் உழைக்கும் அவரது 'sharpness' க்கு யாராலும் ஈடுகொடுக்க முடியாது. ஜெயலலிதாவிடம் பிடித்த விடயம் என்று ஒன்றுமே இல்லை. 2001 தேர்தலின் போது கூட்டணி சேர்வதற்காக பூங்கொத்துடன் அய்யாவுக்காக காத்திருந்தார்கள். 'அன்பு அண்ணன்' என்று பாசமழை பொழிந்தார்கள். ஆனால், ஆட்சியை பிடித்ததும், பூங்கொத்துடன் வாழ்த்தப்போன அய்யாவை சந்திக்காமல் இரண்டு நாட்கள் காத்திருக்க வைத்தார்கள். அதை எல்லாம் நாங்கள் மறந்துவிடவில்லை.

நானோ எனது குடும்பத்தினரோ அரசியல் பதவிக்கு வரமாட்டோம் என்று சொல்லித்தான் மருத்துவர் ராமதாஸ் கட்சியை ஆரம்பித்தார். இப்போது, மகனான உங்களையே முதலமைச்சர் வேட்பாளராக்கிறார். இது சரியா?

அது அந்த காலச் சூழலில் சொன்னது. இப்போது சூழல் வேறு. இன்று, அன்புமணியை அவர் மட்டும் முன் நிறுத்தவில்லை. படித்தவர் என பா.மக.வின் ஒட்டுமொத்த தொண்டர்களும் நிர்வாகிகளும் என்னை முன்னிறுத்துகிறார்கள். மாற்றத்தை விரும்பும் இளைஞர்கள் அதை விரும்புகிறார்கள்.

# மீண்டும்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

நடத்துவதற்கு தற்போது திட்டமிட்டுள்ளனர் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இது தொடர்பில் உடனடியாக களத்தில. இறங்க வேண்டும். இது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதங்களை நடத்திக் கொண்டிருப்பதற்கான காலம் கடந்து விட்டதாகவே தோன்றுகின்றது.




அதேவேளை, முன்னர் நடைபெற்ற, கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தின் போது அரசாங்கத்தின் வாக்குறுதியை நம்பி கைதிகளுக்கு வாக்குறுதி வழங்கி போராட்டத்தை கைவிடச் செய்ததைப் போன்று இம் முறை செய்யமுடியாது. அதனை கைதிகள் ஏற்றுக்கொள்ளப்போவதுமில்லை. எனவே, உறுதியான நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட வேண்டும்.

# தணிவடைந்து...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதை தெளிவுபடுத்தும் வகையிலான மதிப்பீட்டு மகஜரும் முதல்வர் விக்னேஸ்வரனால் பிரதமர் ரணிலிடம் கையளிக்கப்பட்டது. இவ்வாறான சந்திப்பை மாதம் ஒருமுறை நடத்துவது என்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் அக்கூட்டத்தில் தீர்மானித்துள்ளனர். போரினால் பல்வேறு வகையிலும் பாதிப்பை எதிர்கொண்டுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை நிமிர்த்துவதற்கு மாகாண - மத்திய அரசாங்கங்கள் இணைந்து செயற்படுவதென்பது இன்றியமையாததாகும். கடந்தகால முரண்பாடுகளை புறந்தள்ளிவிட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமையளிக்கும் இவ்வாறான செயற்பாடுகள் வரவேற்கத்தக்கதும் மக்களுக்கு மகிழ்ச்சியளிப்பதுமாகும்.





# வைத்தியமுறையில் நாளாந்த தாவர உணவுகள்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

தொடர்ச்சி....

### கரிசலாங்கண்ணி

இது ஒரு சுவையுள்ள பருவச்செடியாகும். இதனை கரிசாலை, கரசலாங்கண்ணி, கையாக்தகரை, கைகேசி, கைவீசிஇலை, கரிப்பான் என மறுபெயர்கள் கொண்டு அழைப்பர். இது பெரும்பாலும் சித்த ஆயுர்வேத மருந்துகளுக்குப் பாவிப்பதுண்டு.

காமாளைக்கு மிக விசேடமானது. பல் நோய் தீர்க்கவல்லது. இதன் தண்டு பல் துலக்குவதற்கு பாவிப்பதுண்டு. இதில் நான்கு இனம் உண்டு. அவை நீலம், மஞ்சள், சிவப்பு, வெள்ளை ஆகும். முதல் மூன்றும் அனேகமாகக் கிடைப்பதில்லை. பெரும்பாலும் மலைச்சாரலில் காணப்படும். அத்துடன் பயிராக்கப்படுவதும் உண்டு. அடுத்து வெள்ளைக் கரிசலாங்கண்ணி எங்கும் கிடைக்கக் கூடியது. பெரும்பாலும் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் காணப்படுகின்றது. அங்குள்ள காலநிலை யாவற்றுக்கும் உகந்ததாக அமைகின்றது.

கைப்புச் சுவையையுடையது. பித்த நீரை சுரக்கக் கூடியது. கல்லீரல் செயலுக்கு உதவியாக இருக்கும். காமாலை, குமட்டல், வீக்கம் யாவற்றும் பயன்தர வல்லது. உடல் எங்கும் "பொன்சாயல்" தென்படும். கண்ணுக்கு ஒளியையும், புத்திக்கூர்மையும் உண்டாக்கும் ஆற்றல் இதற்குமுண்டு.

இதனை வைத்தியர்கள் "செந்தூரம்" தயாரிக்கும் போது பாவிப்பதுண்டு. மேலும் இதன் இலைச்சாற்றை எடுத்து நீர் அல்லது மோர் இட்டு சாப்பிட்டால் விஷம் தீரும்.

கரிசலாங்கண்ணி சாற்றில் 1, 2 துளி எடுத்து 5 துளி தேனில் இட்டுக் குழந்தைகளுக்கு கொடுத்தால் ஜலதோஷம் நீங்கும்.

இளம் வயதினர் இதன் இலைச் சாற்றை நல்லெண்ணெயுடன் அல்லது தேங்காய் எண்ணெயுடன் சேர்த்து காய்சித் தலைக்கு தேய்த்து வந்தால் கருநிறம் கொண்டு முடி தழைத்து வளரும்.

### பசலைக்கீரை

இது பெரும்பாலும் வெப்பமான இடங்களில் வளரும் இயல்புடையது. சிறு பூண்டாக இருக்கும். பூண்டாக இருந்தாலும் தரையில் ஓரளவு படர்ந்தும் காணப்படலாம். சுவை புளிப்புடையது. சிறு பசலை எனவும் கூறுவர். சிறுநீர் பெருக்கி, பசி தூண்டியாகவும் உள்ளது. மேலும் இக்கீரையை சமைத்து சாப்பிட்டு வந்தால் சலக்கடுப்பு, மூத்திர இரிச்சிரம், ஒழுக்கு, வெள்ளைவெட்டை யாவும் தீரும்.



### கொடிப்பசளைக்கீரை

இதில் வெள்ளை, சிவப்பு என இருவகை உண்டு. இதன் மறுபெயர்கள் கொடிப் பசளை, கொடியலை, கொடிவசலை, என்பன வாகும். இதனை சமைத்துச் சாப்பிட்டு வந்தால் புணர்சியில் அதிக இச்சை உண்டாகும். இனிப்புச் சுவையை உடையது.

பருப்புக் கீரையை போல் இக்கீரையை சமைத்துச் சாப்பிடலாம். கபத் தன்மையை உண்டாக்கும் தன்மையுடையது. தாகத்தையும், உஷ்ணத்தையும் தணிக்கக் கூடியது. சிறுநீரைப் பெருக்கும், மலமிழக்கி யாகவும் செய்தன்மையை யுண்டாக்கும்.

### சிறுகீரை

கீரைத்தண்டிற்குரிய குணங்கள் இதற்குண்டு. இதனைச் சமையல் செய்து சாப்பிட்டு வந்தால் காசம், விரணம், மூத்திர கிரிச்சரம், வீக்கம், பித்தநோய் யாவும் தீரும். மேனி யழகு உண்டாகும்.

### தூதுனை இலை

கொடி வகையைச் சேர்ந்தது. இதில் சிறு முட்கள் காணப்படும். இதன் இலை உண்ணும் போது சுவையாக இருக்கும். வெப்பகற்றி, கபத்தன்மையை ஏற்படுத்தும் தன்மையுடன் சளியையும் அகற்றும். அத்துடன் உடம்பிற்கு பலத்தையும் கொடுக்கும். இதனிடையே சுவையில் கசப்பும் கார்ப்பும் கலந்து காணப்படும். காது மந்தம், காசம், நமைச்சல், மதுமேகம், அக்கினி மந்தம், விந்து ஈட்டம் போன்ற செய்கையையும் செய்யும்.

தொடரும்...

**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*



**NO MEDICAL INSURANCE**

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.
• விசா இல்லாதவர்கள், சுப்பர் விசாவில் உள்ளவர்களும் பெறலாம்.

உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.
Does your current life insurance policy need a tune up please call me.

**Nimal Subramaniam**
**Cell: 416.816.7994** **Email:neel900@hotmail.com**



La Capitale Financial Group
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life

•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# குளிர்கால நோய்களுக்கு வழிமுறைகள்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

குளிர்கால நோய்களான காய்ச்சல், சளி, இருமல் போன்றவை வைரஸ் மற்றும் தொற்று கிருமிகளாலும், சுகாதார சீர்கேட்டால் ஏற்படுபவையாகும். காய்ச்சல் ஏற்படாத மனிதரே இருக்கமுடியாது. உடலில் சேரும் ஒவ்வாமை பொருட்களை வெளியேற்றவே காய்ச்சல் உண்டாகின்றது. சாதாரண காய்ச்சல் இரண்டு அல்லது மூன்று தினங்களில் குணமாகும். ஆனால் விஷக்காய்ச்சல் எளிதில் குணமடைவதில்லை. மூன்று முதல் ஏழு நாட்கள்வரை இருக்கும். சில சமயங்களில் உடலின் தன்மைக்கேற்ப மாதக்கணக்கிலும் இருக்கும்.

விஷக்காய்ச்சலின் பொதுவான அறிகுறிகள்

1. மூக்கில் நீர்வடிதல், அதனைத் தொடர்ந்து சளிபிடித்து தலைவலி, தலைசுற்று உண்டாதல்
2. தொண்டைவலி, இருமல் ஏற்படுதல்
3. உடல் சிறிது சிறிதாக சூடேறி காய்ச்சல் அதிகரிக்கும், வியர்வை உண்டாகும்
4. பசியின்மை, நா வரட்சி ஏற்படும்
5. கை கால் மூட்டுவலி பகுதிகளில் வலி ஏற்பட்டு அவை இறுகிப் போகலாம்
6. உடலில் நடுக்கம் ஏற்படும், தூக்கமின்மை மற்றும் உண்ட உணவு செரிக்காத நிலை
7. கண்களில் அதிக சூடு, கண் எரிச்சல் ஏற்பட்டு கண்கள் சிவந்து காணப்படும்
8. சிலசமயங்களில் வாந்தி மயக்கம் ஏற்படும். பகலில் காய்ச்சலின் வேகம் குறைந்து இரவில் அதிகரிக்கும்.

காய்ச்சல், இருமல், சளி உண்டாவதன் காரணங்கள்

பொதுவாக இவை காற்றின் மூலமும் நீரின் மூலமும் அதிகம் பரவுகிறது. இவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் இருமும் போதும், தும்மும் போதும் காற்றில் வைரஸ் கிருமிகள் பரவி அடுத்தவரைப் பாதிக்கிறது. உதாரணமாக நோய் எதிர்ப்புத்திறன் குறைவாக உள்ளவர்கள் எளிதில் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இதேபோல் சுகாதாரமற்ற நீரின் மூலம் வைரஸ் கிருமிகள், பக்டீரியாக்கள் உடலில் புகுந்து காய்ச்சலையும் சளியையும் உண்டாக்குகின்றது. இந்த கிருமிகள் பல்கிப் பெருகுவதற்கு பருவகால மாற்றம்தான் காரணமாகும்.

அதிகமான அலைச்சல், மன உளைச்சல் உடையவர்களுக்கு செரிமானம் சீர்கெட்டு வாதம், பித்தம், வாயு என்பன சமநிலையை இழந்து விஷக்காய்ச்சல் ஏற்படக்கூடும். அதுமட்டுமன்றி நுரையீரலில் சூலை நீர் உருவாகி சுவாசம் மூலமாக தொண்டையை அடைந்து அங்கு குற்றல் போன்ற உணர்வு ஏற்படுவதால் இருமல் உருவாகின்றது. அடுத்து குளிர்காலத்தில் உடலானது தனது உஷ்ணத்தை இழக்கும் போதும் வைரஸ் பக்டீரியாக்கள் உடலைத் தாக்கும் போதும் நுரையீரலில் சளித்தன்மை மிகுதியாகின்றது. இவ்வாறு காச்சல், இருமல், சளி என்பன குளிர்காலத்தில் மனிதர்களைத் துன்பத்தில் ஆழ்த்துவது இயல்பானதே.

இவற்றிலிருந்து மீள்வது எவ்வாறு?

எப்போதும் வெந்நீர் அருந்துதல் நன்று. திட உணவு, கார உணவு போன்றவற்றை முழுமையாகத் தவிர்க்கவும். திரவ உணவே சிறந்தது. அடிக்கடி இளம் சூடாக நீர் அருந்த வேண்டும். நோயாளிகள் தும்மும்போதும், இருமும்போதும் லேசான துணியை வைத்து மூடிக் கொள்வது நன்று.



இதனால் பிறருக்கு பரவுவது தடுக்கப்படுகிறது. பொதுவாக இந்த நோய்கள் சாதாரண மருந்துகளினால் குணமடைவதில்லை. காரணம் சளியின் ஆதிக்கம் அதிகமாக இரத்தத்தில் கலந்துவிடும். மருந்து மாத்திரைகள் காய்ச்சலை போக்குமேயன்றி சளி அப்படியே இருக்கும். எனவேதான் விஷக்காய்ச்சல் பிடியிலிருந்து நீங்கினாலும் கை, கால் வலி வீக்கத்தோடு காணப்படுவார்கள்.

இத்தகைய காய்ச்சல் முதலியவற்றால் ஈரல் (Liver) பாதிக்கப்படுகிறது. இதற்கு தகுந்த சிகிச்சை எடுக்க வேண்டும்.

மருந்து - சளி மற்றும் காய்ச்சலுக்கு பொருத்தமான மருந்துகளை உட்கொள்ள வேண்டும். வேலைப்பழுவை குறைத்து நன்கு ஓய்வு எடுக்க வேண்டும். எளிதில் ஜீரணமாகும் உணவுகளை உட்கொள்வதுடன் மலச்சிக்கல் வராது பார்க்க வேண்டும். அதிக சக்தி வாய்ந்த மருந்துகளைக் குறைத்து கசாயங்கள் மூலிகைகளான மருந்துகளை உட்கொள்ளலாம்.

சித்த மருந்துவத்தைப் பொறுத்தவரை நிலவேம்புக்குடிநீர் மட்டும்தான் இத்தகைய குளிர்கால நோய்களை முழுமையாக குணப்படுத்தும் சக்திமிக்கது. அத்துடன் மூலிகைகள் சேர்ந்து தயாரிக்கப்பட்ட கஞ்சி வகைகள் மிகவும் நல்ல பலனைத் தரும்.


குளிர்கால நோய்களுக்கு மூச்சுப்பயிற்சி

மூச்சுப்பயிற்சி என்னும் பிராணாயாமப் பயிற்சியே காலநிலை மாற்றத்தால் வரும் நோய்களை அணுகாதிருக்க வழி செய்யும் பாதுகாப்பு அரணாக உள்ளது. இப்பயிற்சியால் உடலில் உஷ்ணம் அதிகரித்து நுரையீரலில் சளி சேராமல் தடுக்கிறது. சைனஸ் கோளத்திலுள்ள சளியை வெளியேற்றுகிறது. ஒக்சிஜன் அதிகரிப்பதால் நோய் எதிர்ப்புச்சக்தி அதிகமாகி வைரஸ் பக்டீரியாக்களின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது.

பயிற்சிகள்

1. நாடிசுத்தி
2. பஸ்திரிகா
3. கபாலபாதி
4. பரமாரி

என்பன முக்கியமானவை. இவற்றை ஒரு யோகாசன ஆசிரியர் மூலமாகக் கேட்டு தெரிந்து பழகலாம்.




# வெளிச்சத்திற்கு...

களினால் பின்பற்றப்பட்டு வந்தது.

பொதுவாகவே பேரண்டத்தின் ஒவ்வொரு பொருட்களும் தன்னைச் சுற்றித் தனக்கென ஒரு வெளியைக் கொண்டிருக்கின்றன. எனக்கு உங்களுக்கு, அருகில் கதிரைக்கு என்று எல்லாப் பொருட்களுமே தனித்தனி விசேடமான வெளியாக எல்லா இடங்களிலும் பரவியிருக்கிறது அவ்வெளி. இதனை அப்பொருளின் அல்லது அந்த ஆளின் மாட்டேற்றுச் சட்டம் என்கிறார்கள் இயற்பியல்வாதிகள். சகல பொருட்களின தும் இயக்கங்களை, நடத்தைகளை அவ்வெளிகளிலே, அதாவது அவற்றின் மாட்டேற்றுச் சட்டத்திலேயே அப்பொருட்கள் பார்க்கின்றன அல்லது பார்க்கப்படுகின்றன. எந்த இடத்தில் அல்லது எந்த பொருளில் இருந்து வேகம் கூறப்படுகின்றதோ, அப்பொருளினது மாட்டேற்றுச் சட்டத்தில் தான் அந்த வேகம் எனக் கூறுவார்கள். மாட்டேற்றுச் சட்டம் என்கிற அவ் அவதானி ஓய்வில் இருக்க வேண்டும். இதுபற்றிய மேலதிக விளக்கத்தினை பின்னர் பார்ப்போம். ஆகாயவெளியில் ஓடி வருகின்ற ஒளியின் வேகத்தைப் பொதுமைப்படுத்திக் கொடுப்பதற்கு ஓய்வில் உள்ள ஒரு அவதானி அதாவது மாட்டேற்றுச் சட்டம் ஒன்றும் நியூட்டனுக்குத் தேவைப்பட்டது. அந்த அவதானியாக, மாட்டேற்றுச் சட்டமாக ஈதரை நியூட்டன் பார்க்க வேண்டிய அவசியமும் ஒன்று இருந்தது. (ஓய்வில் உள்ள அவதானியை சடத்துவ மாட்டேற்றுச் சட்டமென விஞ்ஞானத் தனமாகக் கூறுவார்கள்)

அடுத்த இதழிலும் வெளிச்சத்தின் இரகசியங்கள் சில அம்பலமாகும்.

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL



• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

TBC Toronto Business College
கணக்கியில் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



DIPLOMA PROGRAMS

ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks

BUSINESS ADMINISTRATION
26 Weeks

COMPUTERIZED ACCOUNTING
26 Weeks

FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks (Co-op available)

MEDICAL OFFICE ADMIN.(MOA)
32 Weeks

PERSONAL SUPPORT WORKER(PSW)
26 Weeks (NACC Diploma)

SECOND CAREER
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ [illegible] EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றைக் கற்கலாம்
Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $28000 or more
visit www.secondcareerontario.com

PART TIME COURSES
*Windows, Word, Excel, Power Point, Access, QuickBooks, Sage50 Accounting & Accpac 2012*
Workshops
Food Handler Certification
First Aid & CPR

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Student Friendly Environment
- Ample Free Parking
- Professional & Experienced Staff
- TTC Accessible
- Career Planning & Counselling

416- 451- 6680 / 416-291-5155
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# புதுமைப்பெண்




உன்
செவ்வாயில்
உதடு பதிப்பதை நீக்கிச்
செவ்வாய்
செல்லப் புறப்பட்ட
ஒளிப்பெண்ணே
என்
செல் கலங்களில்
பாய்கிறது மின்னற்கதிர்
உன்
துணிவுச்செயல் அறிந்து

செவ்வாய்ப் பயணத்தில்
பூமி
திரும்புதலில்
உத்தரவாதம்
யாருக்கும்
இல்லை
என்றபோதும்
உயிர் என்பது
மயிரிலும் கீழானது
என்று
கருதிய வைரக்கல்

உரம்
நெஞ்சில் அல்ல
அறிவுச்சுழியில்
என்று
உலகுக்குச்
சங்கு
ஊதிச்சொன்னமாது

பெண்கள்
என்பது
கடைச்சரக்கல்ல

புரட்டி எடுப்பர்
ஏன்றோ ஒருநாள்
பசுமை உலகை.



முத்துராஜா

# கார்மேகம்

பால்வெளி வீதியில்
அந்தரித்த நிலையில்
ஒரு கார்மேகம்
இங்கும் அங்கும்
திசை தெரியா திக்கில்
அலைந்தபடியே
அமைதியை தேடுகிறது.



அல்லலுற்ற மனதை
ஆசுவாசப்படுத்திய வண்ணம்
பரந்து கிடக்கும் அண்டத்தில்
தனக்கொரு இடம் கிடைக்குமோ
என்ற ஓர் ஆழ்ந்த எதிர்பார்ப்பில்,
சுடர் விடும் நிலவின் வெளிச்சத்தை
மறைக்கவும் விரும்பாமல்
தணல் என்று தகிக்கும்
சூரியனின் வெப்ப கதிருக்கும்
தன்னை இரையாக்காமல்
ஆனாலும் தனக்கென்று
ஓர் இடம் தேடியே
அமைதியின்றி பாவம்
தடுமாறுகிறது
உணர்வுகள் மட்டும்
அதன் சொந்தம்
கற்பனை தோற்றத்தின்
மறு பிம்பம்
இரவும் மங்கிய நேரத்தில்
புன்னகையை இதழில் சுமந்தபடி
காலமாய் காத்திருக்கிறது.
எதிர்பார்க்காத நேரத்தில்
வந்ததோ ஒரு புயல்காற்று
முட்டி மோதியதோ - அதன்
மேகத்திரையையும் விலக்கியதோ
அடிபட்ட கணத்தில்
மழையாகி சிந்தி
வேகத்துடன் வந்திறங்கி
பூமியில் கால் பதித்தது
மழையின் வருகையில் பயிர்கள்
உற்சாகம் கொள்ள
தன் பணி
இதுதான் என்றும் இறுதியில் கண்டு
அமைதியை தழுவிக் கொண்டது



மீரா குகன்
ஜேர்மனி

# வெளிச்சத்திற்கு வரும் வெளிச்சம்


## சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்

### ஒளி அலையா? இம்மியா?

யுகிளிட் மற்றும் அறிஞர்களினது ஒளி பற்றிய கருத்துக்கள், ஒளி ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குச் செல்லும் தன்மையை அறிவதில் சிக்கலை அதிகப் படுத்தியது. அவர்கள் அறிந்து கொண்ட விடயங்களில் இருந்து ஒளி செல்கையில் அலை வடிவிற் செல்வது போலவும் இருந்தது, சின்னச் சின்ன துண்டுகள் பல தொடர்ச்சியாகச் செல்வது போலவும் தெரிந்தது. இதனால், ஒளி செல்வது அலை வடிவிலா அல்லது துணிக்கை களாகவா என்ற சர்ச்சை அந்நாட்களில் பெரியதாக வந்து விட்டது. ஒளி செல்வது துகள் களாகத்தான் எனச் சிலர் சில முடிவுகளின் அடிப்படையில் விளக்க, வேறு சிலரோ இல்லை அது அலைவடிவிற்தான் பயணப் படுகிறது எனத் தமது சார்பான கருத்துக் களை முன்வைத்தார்கள். அவர்களால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. இன்னமும் தான் அந்தச் சிக்கல் முழுமையாக முடியவில்லை.

கிட்டத்தட்ட யுகிளிட்டின் பின்னராக 2000 வருடங்களின் பின்னர், 17ஆம் நூற்றாண்டில் முதன்முதலில் நியூட்டன்தான் ஒளியின் துகள் - அலைப் புதிருக்கு உறுதியான விளக்கம் ஒன்றைக் கொடுத்தார். ஈர்ப்பு விதியை உலகெலாம் அறிமுகப்படுத்தியது அதே சேர் ஐசாக் நியூட்டன்தான். நியூட்டனைப் பற்றி கொஞ்சம் அறிந்து கொண்டு மேலே போவோம்.

உண்மையில் நியூட்டன் இயற்கையின் இரகசியங்களை அறிய முற்பட்வர்களில் முக்கியமானவர்தான். இயற்பியலின் பல பகுதிகளிலும் ஆய்வுகள் செய்தவர். அவரது ஆய்வுகளில் ஆரம்ப காலங்களில் முதலிடம் பிடித்துக் கொண்டது ஒளிதான். ஒளியிய லில் ஏராளமான முடிவுகளைத் தந்திருந்தார். பௌதீகத்தைப் பாடமாகப் படித்தவர்கள் அறிவார்கள். ஈர்ப்பு, தற்செயலாக அவரது ஆய்வுப் பாதையில் வந்த ஒன்று. அந்தத் தற்செயல் என்பது அப்பிள் பழம் அவரது தலையில் விழுந்தது என்பதல்ல. அப்படி ஒரு நிகழ்ச்சி அவரது வாழ்க்கையில் நடந்ததாக அவர் கூறவும் இல்லை, பதிவுகள் எதுவும் கூட இல்லை. அவரைப் பற்றி அறிந்தவர்கள், அக்கதை பிற்காலத்தில் ஈர்ப்புப்பற்றிக் கூறியவர்கள் வசதிக்காகக் கூறிய கதை என்கிறார்கள். உண்மையில் ஹேலி என்பவருக்கு வால்வெள்ளிகளின் இயக்கம் பற்றிய விளக்கத்திற்காக, கெப்பிளர் என்ற விஞ்ஞானி கூறிய கோள்களின் இயக்கங் களுக்கான விதிகளின் விளக்கங்களைச் சரி பார்க்கையிலேயே ஈர்ப்புப் பற்றிய ஞானம் நியூட்டனுக்கு வந்தது. இயற்கையுடன் நன்றே ஒன்றித்து விளையாடிய நியூட்டன், ஒளியினைப் பற்றி அதிக கரிசனை எடுத்து ஆய்வுகள் செய்தவர்களில் முதன்மை



உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

யானவர். கலிலியோ கலிலி அடியெடுத்துக் கொடுக்க, மற்றவர்களும் இயற்பியல் உலகினை அனுபவிக்கச் செய்தவர். முதன் முதலில் இயற்பியலை ஒழுங்குபடுத்திச் செம்மைப்படுத்தியவர். அவரின் பின்னால், அவரால் இனம் காட்டப்பட்ட இயற்பியலை செம்மை இயற்பியல் (Classical Physics) என்றார்கள். விசைகளையும், அவற்றினால் பொருட்களின் இயக்கங்களையும் தனது இயக்கவிதிகள் மூன்றினையும், ஈர்ப்பு விதியினையும் கொண்டு, அக்கால நிலையில் துல்லியமாக அறியக் கூடிய தான, விளக்கக் கூடியதான செம்மைப் பொறிமுறையை தந்தவர். இவரினால் அறிமுகப்படுத்தப்பட்ட நுண்கணிதம், இவரது நிறுவல்களுக்கு பெருத்த உறுதிப் பாடுகளைக் கொடுத்தது. வெள்ளொளியில் ஏழு நிறங்கள் ஒளிந்திருப்பதை அம்பலப் படுத்தியதின் மூலம் நியூட்டன் அறிவியல் உலகிற்கு அளப்பரிய உதவியைச் செய்திருந்தார். வெள்ளொளியிற் காணப் படும் ஏழு நிறங்களினதும் பகுப்பினைத் திருசியம் அல்லது நிறமாலை என்கிறார்கள். இயற்கையின் இரகசியங் களை வெளிக் கொண்டு வருவதில் நிறமாலைகள் பெரும் பங்கேற்கின்றன. இன்றும் கூட, நிறமாலைகள் பல சிக்கல்களைத் தீர்க்க உதவியாக இருக்கின்றது.

ஒளி துகளா இல்லை அலையா என்ற கேள்விக்கு நியூட்டன் தந்த பதிலைப் பாருங்கள். அவரைப் பொறுத்தவரையில் ஒளியானது அலை வடிவிற் செல்வதாக இருக்க முடியாது, சின்னச் சின்ன துகள்களாகவே ஒளி செல்ல வேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கையைக் கொண்டிருந்தார். ஒளிமுதல் ஒன்றில் இருந்து ஒளியானது சின்னச் சின்னத் துகள்களாக எல்லாத் திசைகளிலும் வீசப்படுகிறது. இத்துகள்கள் ஒரு ஊடகத்தின் ஊடாக நேரான பாதையிற் பயணப்படுகின்றன. ஒரு செக்கனுக்கு ஆயிரம் கோடிகளுக்கும் அதிகமான, சின்னச் சின்னத் துகள்கள் ஒவ்வொரு ஒளிமுதல்களாலும் எல்லாத் திசைகளிலும் வெளிவீசப்படுகின்றன என்றார், நியூட்டன். இத்துகள்கள்தான் ஒளிச் சக்தியைக் காவிச் செல்கின்றன என்றார். இச்சிறிய துகள்களை நியூட்டன் கொப்புலஸ் (copulas) என அழைத்தார். விண்மீன்கள், கதிரவன் என்பவற்றில் இருந்தெல்லாம் கூட இவ்விதமே ஒளி புவியை வந்தடைகின்றது என்றார்.

நியூட்டனால் தனது ஒளித்துகள்கள் கொள்கையை முதலில் முற்றுப்படுத்த முடியவில்லை. அதற்கான ஒரு எடுகோள் விளக்கத்தையும் கொடுக்க வேண்டி வந்தது. சிக்கல் ஒளி சக்தியின் வடிவம் என்பதில் இருந்து வந்தது. பொதுவாகவே சக்தியானது ஓரடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குச் செல்வதற்கு ஊடகம் ஒன்று தேவை. அப்படியாயின் கதிரவனில் இருந்தோ, அல்லது விண்மீன்களில் இருந்தோ, வெற்றிடமான அண்டவெளியைத் தாண்டி எப்படி ஒளித்துகள்கள் ஒளிச் சக்தியை கொண்டு வரமுடியும்? சக்தி பயணப்படுவதற்கு ஒரு ஊடகம் தேவை என்பதில் அக்கால அறிவியலாளர்கள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். நியூட்டன் அதற்குக் கொடுத்த தீர்வு அக்காலத்தில் மிகப் பொருத்தமாக இருந்தது. ஆகாய வெளியை ஈதர் என்கிற கண்களுக்குப் புலப்படாத, ஊடகம் நிரப்பி இருக்கிறது என்றும், அவ்வூடகத்தின் ஊடாகவே ஒளி விண்மீன்களில் இருந்து புவிக்கு வருகின்றது எனவும் கூறினார். (நியூட்டனுக்கு முன்னராகவே ஈதர்க் கருத்தினை வேறு சிலரும் முன்வைத்திருந் தார்கள். ஆனாலும் அதனை பெருமளவில் வெளியெடுத்துத் தந்ததில் நியூட்டனின் பங்கே பெரிதாக இருக்கின்றது) வெற்றிடத்தை நிரப்பியிருக்கிற இந்த ஈதரின் இயல்புகளையும் விளக்கியிருந்தார். ஈதர் மிக இலேசானது, முறிக்க முடியாத, மீள்தன்மை இயல்புடையது, எதனையும் தடைசெய்யாது தன்னுள் இயங்க அனுமதிப்பது போன்றவை அவற்றுள் முக்கியமானவை.

இவை இப்படியிருக்க சக்தி செல்வதற்கு ஒரு ஊடகம் தேவை என்பதைப் போலவே இன்னொரு தேவையும் நியூட்டனுக்கு இருந்தது. அது ஒளியின் வேகம் பற்றியது. வேகங்களை பொதுவாகவே பார்க்கின்ற இடத்தினைப் பொறுத்து மாறுபடும், அதனால், ஒரு அவதானியின் சார்பாகத் தான் பார்க்க வேண்டும், கூற வேண்டும் என்ற அறிவியல் விளக்கத்தினை கலிலியோ கலிலி கொண்டு வந்திருந்தார். அதிலிருந்து அம்முறையானது விஞ்ஞானி


- கனி -
416.261.1348
leptons@hotmail.ca




தொடர்ச்சி 18ஆம் பக்கம்


# MOHAN
## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4




# குலமகள், தங்கம்தானே குவலயம் சிறக்க வைப்பீர்!



- மாரீசன் -

சட்டங்கள் கற்றுத்தேறி நுட்பங்கள் ஆய்ந்து தேர்ந்து
சான்றோரின் அருகமர்ந்து சபையினில் நாயகமாய்
மட்டில்லா அறிவினாற்றல் மதியூக முதிர்ச்சியாலே
மக்களின் வழக்குக்கேட்டு மர்மங்கள் துலங்கவைத்து
வெட்டெனக் குற்றம் சுற்றம் அகன்ற நுண் மதியினாய்வில்
வேண்டிடும் நீதித்தீர்ப்பு வழங்கிடும் பெண்ணைக்கொள்ள
பட்டொடு பக்கம் வந்து அமர்ந்திடும் காளையர்க்கு
தட்சணை வைத்துத்தட்டம் ஏந்தியும் நிற்பதாமோ

தலைவனைக் கண்ணிற்காணும் தெய்வமாய்த் தொழுதுகொண்டு
தன்னலம் கருதிடாமல் இன்சொல்லால் ஈர்த்து நிற்பார்
விலையிலா அன்பால் பண்பால் ஆண்மையும் அணுக வைப்பார்
வினைகளிற் கற்றுத்தேர்ந்ததிறமைகள் விரியக்காட்டி
மலையெனத் தாக்கவல்ல வறுமையிற் கலக்கம் கொள்ளார்
மனத்தினில் உறுதிபூண்டு மலைத்திடா துழைக்கும் கொள்கைக்
குலமகள் தங்கம்தானே குடும்பத்தின் பேரொளியாம்
குவலயம் சிறக்க வைப்பீர் சீதனம் விலக்கிக் கொள்வீர்

தந்தையும் தாயுமாவார் தலைவனின் துணையுமாவார்
தார்மீக நெறியில் நின்று ஆன்மீகம் காத்து வாழ்வார்
முந்தையோர் உரைத்த நீதிமூதுரை நெஞ்சில் தாங்கி
முன்னுணர் நுண்மதியால் நுணுக்கமாய் கருத்துரைப்பார்
சிந்தையில் தெளிவுமோங்கும் செயலினில் திறமைவிஞ்சும்
செழுமையும் சுரக்குமுள்ளம் கருணையும் மீர்க்கும்பண்பில்
சொந்தங்கள் உறவுநாடிச் சோர்விலாதுழைக்கும் பெண்ணை
நிந்தமாய்க் கொள்ளுவோர்க்கு வேறென்ன செல்வம் வேண்டும்.







CANADIAN TAMILS' CHAMBER OF COMMERCE
25
CTCC
1991 - 2016
கனேடியத் தமிழர் வர்த்த
வெள்ளிவிழ
புரட்டாதி மாதம் 09
GOLD SPONSOR
Lebara
GOLD S
NAVA
PROFESSIONAL
www.na
உலக நாடுகளில் இருந்து தமிழ் தலைவர்களும், கல்விமான்கள
கனேடிய அரசியல் பிரமுகர்களும், பல்லின மக்கள் பிரதிநித
நிகழ்விற்கான அனு
Community Sponsor
HOME & AUTO INSURANCE
SUREN NAVARATNARAJAH
416-520-6916
Community Sponsor
Life100
INSURANCE & INVESTMENTS INC.
www.life100.ca
Community Sponsor
TET
HD
www.iwatchtet.tv
Community
Moon Maha
TD Canada
Community Sponsor
SUJAN SHAN
416.282.2000
RE/MAX
Community Sponsor
Ravi Kanagasabey
647-629-4434
Arthur Fire Protection Inc.
www.arthurfire.com
(905) 494-1408 Toll-Free: 1-(866) 315-1408
Community Sponsor
We Decorate, You Celebrate!
Commun
www.s
Community Sponsor
SANTHA
416-200-5470
Community Sponsor
Senthooran Punithavel
416-396-0707
the co-operators
A Better Place For You
Community Sponsor
Active Green + Ross
Tire Expert Christy
416.321.3443
3505 KENNEDY
(4
கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளன
" இளைய சாதனைத்


தக சம்மேளனத்தின் 25வது ஆண்டு நிறைவு
ாக் கொண்டாட்டம்
மற்றும் 10ம் திகதிகளில்
2016
PONSOR
LAW
CORPORATION
va.law
GOLD SPONSOR
Kanish& Partners LLP
Chartered Accountants and Business Advisors
நம், வர்த்தகத் துறையில் சாதனை நிலை நாட்டிய தமிழர்களும்,
திகளும் கலந்துகொள்ளும் எமது பிரமாண்ட வெள்ளிவிழா
னுசரணையாளர்கள்
ity Sponsor
Trust
Community Sponsor
747 AUTOPARTS
www.747autoparts.com
Community Sponsor
Chef
RAMANAA
www.cheframanaa.com
Community Sponsor
Chapel Ridge
ity Sponsor
hinol inc.
shinol.ca
Community Sponsor
Sathya Law
www.sathyalaw.com
Community Sponsor
DILANI
GUNARAJAH
Community Sponsor
altona
custom homes
www.altonahomes.ca
அனுசரணையாளர்களாக உங்களையும் இணைந்துகொள்ள உடன் அழையுங்கள்
416)-561-5733
ரோசான் தவரட்ணம் (Roshan)
வெள்ளிவிழா நிகழ்வு இயக்குனர்
த்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம்
தமிழர்களை நோக்கி ”

GLORIOUSPRINTERS
www.gloriousprinters.com
Our goal is to help our clients to save more, and get more result.
Glorious.Printers1
· Business Cards · Flyers · Post Cards · Banners · Signs · Window Lettering
· NCR Form Invoices · Brochures · Menus · Posters · T-Shirt Printing · Mug Printing
· Photo Framing · Video · Photography · CD & DVD Covers · Car Magnets · channel letters etc.,
9889 Markham Road, Unit-2, Markham, ON., L6E 0B7 T: 905.471.2500, F: 905.471.2501
printglorious@gmail.com, info@gloriousprinters.com gloriousweb.ca
- and also do -
FedEx TNT DHL Purolator
Design | Wedding Cards | Printing | Photo | Video | Website

# காரிகையார் நாகரிகங் காண்

நன்றிக்கு வித்திட்ட நங்கையரை நாம்போற்றி
இன்சொல்லால் வாழ்திடுவோம் இந்நாளில் - இன்பாயே
சேரிவாழ் நங்கையர் சேர்ந்தொன்றாய் முன்னேறும்
காரிகையார் நாகரிகங் காண்.

பொறுமைக்கோர் பூமியவள் போற்றிடுவீர் நாவால்
சிறுமைகண் டஞ்சுகின்ற செல்வி – உறுதிகொண்டே
வாரி வழங்கியே வாழ்விக்கும் வள்ளல்கள்
காரிகையார் நாகரிகங் காண்.

நன்றி மறவாத நாயகியாள் நாயகனை
அன்பால் அரவணைக்கும் ஆரணங்கு – துன்புவர
மாரியாய் அங்குநிற்பாள் மாதரசி மான்விழியாள்
காரிகையார் நாகரிகங் காண்.

ஆற்றல் அறிதல் அறிவுடைமை ஒப்புரவு
சீற்றமென் றெல்லாமே சேர்ந்தவளை – போற்றிடுவோம்
சீரின் சிறப்பால் சிறந்தோங்க வாழ்வளிக்கும்
காரிகையார் நாகரிகங் காண்.

அன்பால் அரவணைத்தே ஆதரிக்கும் பண்புடையாள்



சின்னத் தனங்கண்டே சீறிடுவாள் - பொன்கண்டு
பூரிக்கும் அன்னவராம் பூவையராயம் பண்புகொள்
காரிகையார் நாகரிகங் காண்.

வீட்டில் இருந்தே வினைசெய்யும் மாதர்கள்
பூட்டுடைத்த பெண்பெருமை பூரிப்பே – வாட்டமிலாக்
கூரிய புத்தி குணநலங் கொண்டதந்தக்
காரிகையார் நாகரிகங் காண்.

நாடுகாக்கச் செல்கின்ற நங்கையர்கள் போர்முனையில்
தேடி அழிக்குமம் திறனுடையார் – வாடிடாதே
ஊரிலுள்ள நங்கையரை ஊர்காக்கச் சேர்க்கின்ற
காரிகையார் நாகரிகங் காண்.

தாயாகச் சேவகியாய்த் தான்பெற்ற பிள்ளைகளை
ஓயா தரவணைக்கும் உத்தமியாள் - காயா
மனமுடைய காதலியாள் மாசுமறு வற்றே
இனத்துக்காய்ப் போராடும் ஈர்ப்பு.

காதல் களத்திரம் காரிகையாள் என்துணையோ
வாழ்விலும் பங்கேற்பாள் சற்றேனும் - பேதலிக்காப்
பெண்ணின் பெருமைக் குரியவளைப் போற்றுகின்றேன்
கண்ணியம் மிக்கவளைக் காண்.

வேற்றூரென் நண்பர் வரும்போது வேட்பாக
ஆற்றும் பணிகள் அளப்பரிதே – வேற்றுமை
காட்டா அரவணைப்பு காண்போர் மனம்மகிழ
வீட்டிலிருந்தே செய்வாள்
விருந்து.

- முருகேசு மயில் வாகனன் -

Free!
Real Estate
& Articling Classes*
20 வருடத்திற்கு மேல் ஆதன வியாபாரத்தில்
அனுபவமுள்ளவரின் நேரடியான விரிவுரை வகுப்புகள்...
April 01, 2016 இல் புதிய பாடத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட உள்ளது
சரியான சந்தர்ப்பம்
ஏறக்குறைய 100% Success Rate
For Reservation Please Call:
416 321 6969
*Some conditions apply.
HomeLife /GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. East, #203 Toronto, ON.
*Independently Owned & Operated
HOMELIFE
HIGHER STANDARDS

# வாழ்க்கைப் பயணங்கள் - 12

அமலா பிரயாணம் செய்த விமானம் ரொறன்ரோ பியர்சன் விமானநிலையத்தில் தரையிறங்கியது. இமிகிரேசன் முடிந்து பொதிகள் எல்லாம் எடுத்துக் கொண்டு வெளியில் வர 45 நிமிடங்கள் அளவில் பிடித்தது. வாசலில் சுதாகரனின் அண்ணன் கிருபாகரனும், அண்ணி வதனாவும் நின்றார்கள். என்னைக் கண்டதும் ஓடி வந்து வதனா கட்டிப் பிடித்து வரவேற்றா. கிருபாகரனும் வந்து "வெல்கம் ரூ கனடா எப்படி பிரயாணம்" என்று கேட்டார். "பரவா யில்லை" என்று சொல்லி விட்டு அங்கும், இங்கும் அமலா தேடியதைக் கண்ட வதனா அமலாவுக்குக் கிட்ட வந்து சுதாகரன் வேலை அலுவலாக கொஞ்சம் தூர ரவல் பண்ணிட்டார். இரண்டு அல்லது மூன்று நாளாகும் திரும்பி வர என்று சொன்னா.

அமலா கொண்டுவந்த பொதிகள் எல்லாத்தை யும் கிருபாகரன் வானில் ஏற்றிக் கொண்டு "நீங்கள் ஏறுங்கள்" என்று அமலாவைப் பார்த்துச் சொல்ல அமலாவும், வதனாவும் ஏறி வானில் இருந்ததும் வான் புறப்பட்டது. வரும்பொழுது இடைக்கிடை வதனா அமலாவுடன் பேசிக் கொண்டு வந்தாள்.

மார்க்கம் பகுதியில் உள்ள அவர்களின் வீட்டை வந்தடைய 45 நிமிடம் அளவு பிடித்தது. நல்ல விசாலமான பெரிய வீடாக இருந்தது. ஹோலுக்குள் இருந்த சோபாவில் அமலா அமர்ந்தாள். வதனா அமலாவைப் பார்த்து "அப்பா, அம்மாவுக்கு சுகமாய் வந்து சேர்ந்திட்டன் என்று சொல்லுங் கோவன்" என்று சொல்லிப் போனை டயல் பண்ணிப்போட்டுக் கொடுத்தார். "அவை யோடை வடிவாய்க் கதையுங்கோ அமலா" என்று வதனா சொன்னா.

"அப்பா நான் சுகமே வந்து சேர்ந்திட்டன். இப்பதான் இவை வீட்டை வந்து சேர்ந்தனான். ஏயர் போட்டுக்கு வதனா அவை வந்தவை" என்று அமலா சொன்னா.

"பிரயாணங்கள் எப்படி அம்மா" என்று நடா கேட்க "பிரச்சினை ஒன்றும் இல்லை அப்பா" என்று அமலா சொல்லிக்கொண்டு "அப்பா அம்மாவிடம் போனைக் கொடுங்கள்" என்றாா்.

"அம்மா நான் சுகமாய் வந்திட்டன். நீங்கள் ஒன்றும் யோசியாதேங்கொ. நான் பிறகு ஆறுதலாய்க் கதைக்கிறேன்" என்றார் அமலா.

"சரி பிள்ளை நீ களைப்பாய் இருப்பாய். பிறகு கதைப்பம்." என்று ராணி சொல்ல "சரி அம்மா அப்ப நான் வைக்கிறன்" என்று சொல்லி ரெலிபோனைத் துண்டித்தாள் அமலா.

வதனா தேநீா், சிற்றுண்டி அமலாவுக்குப் பரிமாறினா.

வதனா அமலாவுக்கு வீட்டைச் சுத்திக் காட்டினார். மேல்மாடியில் ஒரு அறையைக் காட்டி "இந்த அறை உங்களுக்கு" என்றார்.

"அமலா நீங்கள் உடுப்புக்களை மாற்றி குளித்திட்டு வாங்கள். நான் சாப்பாட்டை எடுக்கிறன். என்ரை சின்ன ஆக்களும் இனி வந்திடுவினம்" என்றார் வதனா.

அமலாவும் "அப்படியா, சரி அக்கா அவை வரமுதல் குளித்திட்டு வாறேன்" என்று சொல்லிவிட்டு மேல் மாடிக்கு சென்றாள்.

அமலா குளித்து உடுப்பு மாற்றிக் கொண்டு வந்தாா். அப்போது வதனாவின் பிள்ளைக-ளான சரிகாவும், சயந்தனும் பாடசாலையில் இருந்து வந்து விட்டார்கள். அமலா அவர் களைக் கண்டதும் ஓடிப்போய் கதைத்தாள். அவர்களும் அமலாவின் கேள்விகளுக்குப் பதில் அளித்தார்கள். அதன் பின்னர் எல்லோரும் உணவு அருந்தினார்கள்.

நடாவின் உறவினர் குடும்பம் ஒன்று ரொறன்ரோவில் இருந்தது. அவர்கள் கொழும்பிலும் அதிக காலம் நடா குடும்பத்தினரிற்கு கிட்ட இருந்தவர்கள். அதனால் அவர்களிற்கு சுதா, விஜிதா என இரு பெண் பிள்ளைகள் இருந்தார்கள். சுதா திருமணமாகி லண்டனில் இருக்கின்றார். விஜிதா திருமணமாகி கனடாவில் இருக்கின்றார். விஜிதாவின் தந்தை தர்மாவும் தாயார் கமலமும் விஜிதாவுடன் கனடாவில் இருக்கின்றார்கள். அமலாவுக்கு விஜிதாவுடன் நல்ல சிநேகிதம். இந்தக் குடும்பம் மூலமாகவும் சுதாகரனைப் பற்றித் திருமணப் பேச்சு வந்தபோது நடா விசாரித்திருந்தார். அமலாவின் திருமணம் கனடாவில்தான் செய்ய வேண்டும் என்று மாப்பிள்ளை வீட்டார் சொன்னதும் நடா தொலைபேசியில் நடா தர்மாவுடன் கதைத்த போது அமலா கலியாணம் நடக்கும் வரைக்கும் தங்கள் வீட்டில் தங்கலாம் என்று சொல்லியிருந்தார். அதற்கேற்ப அமலா தர்மா குடும்பத்தாரின் வீட்டில் சென்று தங்குவதாகத்தான் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது. இதுபற்றி வதனாவுக்கும் முன்பே சொல்லிச் சம்மதம் வாங்கியிருந்தார் நடா.

அமலா வந்ததும் வதனா ரெலிபோன் பண்ணி தர்மா வீட்டுக்கும் சொல்லியிருந்தாள்.

(416) 332 1743 www.buildingexpertscanada.com

# குரங்கின் நோய்

ஒருமுறை ஒரு குரங்கிற்கு நோய் ஒன்று வந்தது. அது அக்காட்டிற்கு புதிதாக வந்தபடியால் அதற்கு யார் அங்கு வைத்தியர் எனத் தெரியவில்லை. அது அயலவர்களிடம் கேட்டு ஒரு புகழ் பெற்ற வைத்தியரிடம் சென்றது. குரங்கும் அந்த வைத்தியர் வாழ்ந்த மரத்தின் கீழ் நின்று வைத்தியரை அழைத்தது. சிறிய பறவை ஒன்று மரத்திலிருந்து இறங்கி வந்தது.


'நான் தான் வைத்தியர்', என பறவை தன்னை அறிமுகப்படுத்தியது. குரங்கிற்கு அதிசயமாக இருந்தது. இவ்வளவு சிறிய பறவை அவ்வளவு பெரிய வைத்தியரா? ஒருவர் கூட வைத்தியரைக் காண அங்கு நிற்கவில்லை. மரமும் ஒன்று இரண்டு கிளைகளுடன் சிறிதாக இருந்தது. இவ்வாறு குரங்கு பறவையை சந்தேகத்துடன் பார்த்தது. ஆனாலும், சிறிய பறவை குரங்கிடம் சில கேள்விகளை கேட்டு, அதன் உடம்பையும் சோதனை செய்தது. அதற்கு குரங்கின் நோய் எது என புரிந்துவிட்டது.

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

'இதோ, மருந்து தருகிறேன்', என கூறிய வைத்தியர், சில மூலிகைகளை நசுக்கி குரங்கிடம் கொடுத்தது. 'ஒரு நாளுக்கு ஒரு தடவை இதைக் குடி. ஒரு கிழமையில் உனது நோய் சரியாகி விடும்' என்றது.

குரங்கும் தினமும் மருந்து குடித்தது. ஒரு கிழமை ஒரு மாதமாகியது. இன்னும் அதற்கு நோய் மாறவில்லை. குரங்கு மறுபடியும் தெரிந்த அனைவரிடமும் நல்ல



வைத்தியர் எங்கு இருக்கிறார் எனக் கேட்டது. அவர்களும் வெகு தூரத்தில் ஒரு மிகப் புகழ் பெற்ற வைத்தியர் இருக்கிறார் என்று கூறினர்.

குரங்கும் காட்டில் வெகுதூரம் தேடிச் சென்று அந்த வைத்தியரின் மரத்தடிக்கு வந்தது. அது ஒரு மிகப்பெரிய மரம். நிறைந்த கிளைகள் இருந்தன. ஒவ்வொரு கிளையிலும் வைத்தியருக்கு ஒரு நோயாளி காத்துக் கொண்டு இருந்தார். குரங்கும் இவ்வாறு காத்துக்கொண்டிருந்த பின்பு வைத்தியர் குரங்கை சந்தித்தார். வைத்தியரும் ஒரு நீளமான வெள்ளை வைத்தியர் அணியும் Coat உம் கழுத்தில் Stethescope உம் போட்டுக் கொண்டு வந்திருந்தார். அதுவும் ஒரு பறவைதான்.

அப்பறவையும் நெடுநேரம் குரங்கை சோதனை செய்துவிட்டு குரங்கின் நோயை கண்டு பிடித்தது. குரங்கிடம் கொஞ்ச நேரம் பொறுக்கச் சொல்லி விட்டு, திரும்பி ஒரு போத்தலில் மருந்தைக் கொண்டுவந்து கொடுத்தது.

'இந்த மருந்தை நாளுக்கு ஒருமுறை ஒரு மாதத்திற்கு எடுத்தால் உங்கள் நோய் மாறிவிடும்' என்று கூறி அந்த மருந்தை குரங்கிடம் கொடுத்தது. குரங்கின் நோயும் ஒரு கிழமையிலேயே மாறி விட்டது.

இதைக் கேள்விப்பட்ட முதல் பறவை வைத்தியர், மற்ற பறவை வைத்தியரிடம் 'நீங்கள் கொடுத்த மருந்தும் நான் கொடுத்த மருந்தும் ஒன்றுதான். எவ்வாறு நீங்கள் கொடுத்தவுடன் குரங்கின் நோய் மாறியது?' எனக் கேட்டது.

மற்ற பறவை வைத்தியரும் 'பொதுவாக விடயத்தைவிட, அதைக் காட்டும்விதம்தான் முக்கியம். இதனால் வாங்குபவரிற்கு எங்கள் மேல் நம்பிக்கை வரும். அதுவே அவர்களுக்கு மனத்திருப்தியை கொடுக்கும்' என்றது.

**நீதி: மருந்து கால் மதி முக்கால்**



ஞா. ஆரணி
அகவை 17



# ஈழத்துக் கலைஞன் கே.எஸ்.பி கனடாவின்...

ஈழத்து யாழ். குடாநாட்டில் கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திரு. கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்களின் புதல்வரும் ஆனவரே மறைந்த கே. எஸ். பாலச்சந்திரன் ஆவார். அன்னார் எவரையும் மதிக்கும் மனப்பாங்கு கொண்டவரும் பல்துறை சார்ந்த விற்பன்னர்களின் பாசத்துக்கும் நேசத்துக்கும் பாத்திரமானவர். அன்னார் இன்று மண்ணைவிட்டு மறைந்தாலும் ஈழத்துத் தமிழ் மக்கள் மனதை விட்டு அகலாத ஓர் ஈழத்துக் கலைஞர் ஆவார். இவர் 1967ஆம் ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் ஓர் அறிவிப்பாளராக இணைந்து பணி ஆற்றியவர்.



இவரது குரல் வளத்தாலும் நடிப்புத் திறனாலும் 1970ஆம் ஆண்டு வானொலிக் கலைஞர் ஆகத்தெரிவானார். இவர் 'கோமாளிகள் கும்மாளம்' என்ற வானொலித் தொடர் நாடகத்தில் நடித்து ரசிகர்களின் வரவேற்பைப் பெற்றார். அடுத்து ஒலிபரப்பாகிய 'தணியாத தாகம்' என்ற நாடகத் தொடரில் 'சோமு' என்ற பாத்திரம் ஏற்று அதில் பாசமுள்ள ஓர் அண்ணனாக நடித்து தனது மிகையான நடிப்புக் திறனினால் பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் உள்ளங்களை ஈர்த்தவரானார்.

1973ஆம் ஆண்டு இவர் அறிமுகப்படுத்திய 'தனி நடிப்பு' நகைச்சுவை சித்திரமான 'அண்ணை றைற்' என்ற நாடகத்தின் மூலம் இவர் ஒரு புதுப்பரிமாணம் பெற்றார். இந்த நாடகமானது பல மேடைகள் ஏறி சாதனை புரிந்ததோடு 'அண்ணை றைற்' 'பாலச்சந்திரன் என்னும் அழைக்கப்பட்டார். இந்த ஓரங்க நாடகமானது ஒலி இழைப்பேழை வடிவில் இவரால் தயாரிக்கப்பட்டு புலம்பெயர்ந்த நாடுகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு அங்கும் பெருவரவேற்பைப்பெற்ற நாடகமாக ரசிகர்களை கவர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தான் பிறந்த மண் கரவட்டியை கதையின் கருப்பொருளாகக் கொண்டு 'கிராமத்துக் கனவு' என்ற நாடகத்தையும் தொகுத்தும், நடித்தும், ஒலியிழைப் பேழையாகவும் தயாரித்தமை குறிப்பிடத்தக்கது. இவர் இலங்கை வானொலியில் கலைக்கோலம், விவேகச்சக்கரம் போன்ற நிகழ்ச்சிகளையும் தயாரித்து நடத்தியவர்.

'நாடு போற்ற வாழ்க', நான் உங்கள் தோழன்', 'அவள் ஒரு ஜீவநதி', வாடைக்காற்று', இதயராகம்' போன்ற ஈழத்தில் தயாரிக்கப்பட்ட தமிழ் திரைப்படங்களிலும் இவர் ஒரு நடிகனாக பாத்திரம் ஏற்று நடித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் புலம்பெயர்ந்து வாழ்ந்த கனடா நாட்டிலும் கனேடிய தமிழ் வானொலியில் 'மனமே, மனமே', 'ஓல்ட் இஸ் கோல்ட்' போன்ற நிகழ்சிகளையும் நடத்தி தயாரிப்பாளர் என்ற முத்திரை பதித்தவர். கனேடிய தொலைக்காட்சியிலும் கூட வை.ரி.லிங்கம் என்னும் பாத்திரமாய் தன்னை உருமாற்றி ஒரு நகைச்சுவைத்தொடரையும் நிகழ்த்தியவர்.

இவர் ஒரு பத்திரிகை எழுத்தாளனாகவும் சிறுகதை எழுவதிலும் திறமையானவருமாகத் திகழ்ந்தவர். இறுதியாக இவர் கடல் தொழிலாளர்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு 'கரைதேடும் கட்டுமரங்கள்' என்ற பெயரில் ஒரு நாலலையும் எழுதி வெளியிட்டார் என்று குறிப்பிடத்தக்கது.

தென்னகக் கலைஞர்களை நாம் நினைவுகூருவது போல் எமது ஈழத்துக்கலைஞர்களையும் இந்நாளில் நாம் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளோம்.

15ஆம் பக்கத்தொடர்ச்சி

கனடாவின் ஏனைய மாகாணங்கள், நகரங்கள் உட்பட அமெரிக்காவின் பல நகரங்களில் வள்ளங்களிலும், ஹெலிகொப்ரர் விமானங்களிலும் சென்று கடலின் மத்தியில் கரைக்கும் சம்பிரதாயம் நடத்த அந்தந்த இடங்களில் உள்ள நகரசபைகளின் சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அஸ்தியினை கரைக்கும் கிரியைகள் செய்வதற்காக, கடுமையான குளிர் காலங்களில், எவருமே செல்லாத கடற்கரைகளுக்கு இரவு நேரங்களில் சென்று பொதுமக்கள், பொலிசாரின் சந்தேக பார்வைகள், விசாரணைகளுக்கு பயந்து அஸ்தி கரைத்த செய்திகள் ஏராளம் கனடாவில் நடந்துள்ளன.

புத்திசாலித்தனமாக உண்மையினை மறைக்கின்றேன் என கிளம்பி சிக்கலில் மாட்டுப்பட்டவர்கள். சூழல், சுற்றாடல்களை மாசுபடுத்துகின்றார்கள் மற்றும் கடல் நீரின் தூய்மையினை கெடுக்கின்றார்கள் என எச்சரிக்கை செய்யப்பட்டவர்கள் நகர-சபை சட்டவிதிகளை (Bylaws) மீறியதாக விசாரணை கடிதம் அனுப்பப்பட்டவர்கள். இவ்வாறு பல விடயங்கள் நடந்துள்ளன.

சட்டத்தினை அமல்படுத்துபவர்களுக்கும், அஸ்தி கரைப்பது தடையில்லை என்ற சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது என்ற தெளிவு அந்த இடத்தில் உடனடியாக தெரிய வந்திருக்காமலும் இருக்கலாம். காலம் கடந்து உண்மை இதுவே என்பது தெரிய வர அவர்கள் குற்றச்சாட்டினை மீளப்பெற்றுக்கொண்ட சம்பவங்களும் நடந்துள்ளன.

மேலே குறிப்பிட்டது போல அஸ்தி கரைப்பதனை தவிர வேறு எந்த அசுத்தங்களையும் உருவாக்காது பொறுப்புணர்வோடு கிரியைகள் செய்யும்போது நடந்து கொண்டால் எதுவிதமான பிரச்சினையும் கனடாவில் இந்த சமய சம்பந்தப்பட்ட கிரயைகளில் இருக்கமாட்டாது.

அச்சமின்றி நம்பிக்கையோடு தொடருங்கள். மதசுதந்திரங்கள், நம்பிக்கைகள், சம்பிரதாங்களை மதிக்கும் நாட்டில் வாழுகின்றோம் என்ற உணர்வோடு செயற்படுங்கள்.

I  Math Tutorial317

Answers to tutorial 316

1)Since there are 5 possibilities for each question there are a possible $5^7$=78125 possible answer sheets . Since there are only 30,000 students every answer sheet could be different

2)There will be 26+26+10=62 symbols available. Each position can be any of the 62 possible words (with repetition)hence there will be $62^8$possible passwords .

3)Given$\bar{a}$=(1,3,-1) ,$\bar{b}$=(2 ,1 ,5) , $\bar{v}$ =(-3 ,y ,z ) and $\bar{a} \times \bar{v} = \bar{b}$

$\bar{a} \times \bar{v}$ =(3z+y ,3-z, y+a) =(2 ,1 ,5)

Eqating components gives y = -4 ,z =2

Questions to tutorial 317

1)If 332 ,520 ,and 755 are each divided by d(an integer greater than one ), the remainder r is the same .Determine the value of d+r?(for gr 10-120

2)When a two digit numberand a three digit are multiplied , the result is 7777. Find the largest such three digit number possible?(for gr8-10)

3)What is the distance between the planes 2x-y-2z+3=0 and 4x-2y-4z-9=0 ?(forgr12)

4)There are seven seats in the family"s new mini van .If four of the seven family members can drive ,how many possible seating arrangements are there for a family trip in the van? ( for gr 12)

5)For a 12side die ,what is the probability that first 10 will be on the 2nd ,5th ,and 10th roll and what is the expected time until a 1st is rolled?(for gr 12)

By MrS.F Xavier(Teacher) Tel 6473409490/cell4167322228

# பேராசை - கற்பனை கலந்த உண்மைக்கதை

## அலசல் அரங்கம் - 4

கிருஷாந்தன் கூறுகிறான்.

இதை நான் ஒன்ராரியோவிலுள்ள ஒரு சிறைக்கூடத்தில் இருந்து எழுதுகிறேன். வாழ்க்கை என்பது சிலருக்குப் பஞ்சு மெத்தையாகவும் சிலருக்கு கல்லும், முள்ளும் நிறைந்த கானகமாகவும் இருப்பது ஏன் என்ற வினாவுக்கு விடைகாண முடியாமல் தவிப்பவர்களில் நானும் ஒருவன். கனடாவுக்கு பல கனவுகளோடும் கற்பனைகளோடும் பலகஷ்டங்கள் பட்டு வந்தேன். வந்த நாள்முதல் பாதை கரடுமுரடாகவே இருக்கிறது. இது விதியா அல்லது ஊழ் வினையா என்பது விளங்கவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் விளங்குகிறது. அதாவது எமது வாழ்க்கை எமது கட்டுபாட்டுக்குள் இல்லை. யாரோ அதை நிர்ணயித்து விட்டார். அது அவ்வாறே நடைபெறும். எனினும் நாமும் வருவதை எதிர்கொண்டு சமாளிக்கப்பழகிக் கொள்ள வேண்டும். என் கதை எல்லோருக்கும் ஒரு படிப்பினையாக இருக்கும் என்ற எண்ணத்தில் இதை எழுதுகிறேன். ‘நாய்க்கும் நடுக் கடலிலும் நக்குத் தண்ணிதான்’ என்ற முதுமொழிக்கு நான் நல்ல உதாரணமென எண்ணத் தோன்றுகின்றது. என்னைப் போல் சிலர் இங்கு வந்து கஷ்டப்படுகிறார்கள் என்பதும் இப்போது தெரிகிறது.

நான் ஈழத்தில் வன்னி மாவட்டத்திலுள்ள பரந்தன் பகுதியைச் சேர்ந்தவன். எங்கள் குடும்பம் ஒரு விவசாயக் குடும்பம். வீட்டில் காய்கறித் தோட்டமும் வைத்திருந்தோம். ஓரளவுக்கு வாழ்க்கை பிரச்சினை இல்லாமல் ஓடிக் கொண்டிருந்தது. உள்நாட்டுப் போர் எல்லாவற்றையும் தலை கீழாக மாற்றியது. பெரும்பாலும் இளையோர் வாழ்வு மிகவும் கஷ்டமாக இருந்தது. பள்ளிக்கூடங்கள் நடைபெறுவதில்லை. நடைபெற்றாலும் விமானச் சத்தம் கேட்டவுடன் எல்லோரும் வாங்குகள் மேசைகளுக்கும் கீழ் ஒழிந்து கொள்வோம். வீடுகளுக்குமேல் குண்டு விழுந்து இறந்தவர்கள் ஏராளம். நாள்தோறும் ஊரில் ஓரிரு சாவீடுகளுக்குச் குறைவில்லை. இந்தச் சூழ்நிலையில் எவ்வாறு படிப்பது. நான் தான் குடும்பத்தில் மூத்தபிள்ளை. எனக்கு ஒரு தங்கச்சியும் தம்பியும். நாளாந்தம் கிடைப்பதைக் கொண்டு வாழ்க்கையை கடத்திக் கொண்டிருந்தோம்.

இக்காலத்தில் போரின் கொடுமையிலிருந்து தப்புவதற்கு இந்தியாவுக்கும், வெளிநாடுகளுக்கும் பலர் வெளியேறிக் கொண்டிருந்தனர். சிலர் விவாகஞ் செய்து ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, கனடா என்று வெளியேறிக் கொண்டிருந்தனர். இவ்வாறு ஜேர்மனிக்கு இரு ஆண்டுகளுக்கு முன் சென்றவர் எனது சித்தி. எனவே எனது அம்மாவின் ஓயாத வேண்டுகோளுக்கிணங்கி என்னை கனடா அனுப்புவதற்கு ஒழுங்குகள் செய்தா. எனக்கு அப்போது வயது 16. ஆங்கிலமும் தெரியாது. எவ்வாறு போய்ச் சமாளிப்பது என நான் பலமாக யோசித்தேன். நாட்டு நிலைமையும் வீட்டு நிலமையும் என்னைப் போகும்படி துரத்தின. அம்மாவும் எனக்கு நல்ல உற்சாகம் தந்தா. மூத்தபிள்ளை நீ. உனக்கு இக்குடும்பத்தை உயர்த்துவதற்கு கனடா போவது தான் ஒரே வழி. சித்தியும் உதவி செய்ய முன்வந்திருக்கிறா. எனவே இராசா நீ சந்தோசமாய்ப் போ. இங்கை இருந்தால் நீ கடைசியிலை புலிகளோடை சேரத்தான் வேணும். இப்பவே ஊருக்குள் உள்ள பிள்ளைகளைப் பிடிச்சுக் கொண்டு போட்டாங்கள். நீயும் எத்தனை நாளைக்குப் பயந்து ஒழிச்சிருக்கிறது. எங்களைப் பற்றி கவலைப்படாமல் போயிற்று வா என்று அம்மா உற்சாகப்படுத்தினா.

கடைசியில் ஐயாவுக்குத் தெரிந்த ஒருவர் மூலமாக ஒரு ஏஜன்சிக்காரரைப் பிடித்து ஒழுங்குகள் யாவும் செய்யப்பட்டன. கொழும்புக்குப் போவதே கஷ்டமான காலம். எத்தனையோ துண்டுகள், அனுமதிகள், பொய்கள் எல்லாம் சொல்லி நானும் ஐயாவும் கொழும்புக்குப் போனோம். கனடாவிலிருந்து வந்த ஒருவர் என்னைக் கூட்டிக்கொண்டு போகச் சம்மதித்தார். வேண்டிய பணம் எனது சித்தி ஜேர்மனிலியிருந்து அனுப்பியிருந்தார். நாள் கிட்டக்கிட்ட எனக்குப் பயமும் அதிகமாகியது. ஐயா ஒவ்வொரு நாளும் புத்திமதிகள் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் ஒரு தமிழாசிரியர். இது அவரது சுபாவம். நானும் பேசாமல் தலையாட்டிக் கேட்டுக் கொண்டிருந்தேன். அம்மா கொழும்புக்குத் தொலைபேசியில் கதைப்பதென்றால் மூன்று கட்டைக்குத் தபால் கந்தோருக்குப் போக வேணும். எனவே ஐயா, பிள்ளைகளை விட்டுப்போட்டு போகாதே என்று சொல்லிப் போட்டுத்தான் கொழும்புக்கு வெளிகிட்டனாங்கள்.

என்னைக் கூட்டிக் கொண்டு போறவர் ஒரு நாள் நாங்களிருந்த ஹோட்டலுக்கு வந்தார். கனடா வாழ்க்கைபற்றியும் என்ன மாதிரியாகக் கதைக்கிறது, ஆட்களோடு பிழங்குகிறது என்பதெல்லாம் இங்கிலிசிலை சொல்லித்தந்தார். அடுத்த நாள் வந்து பேசத் தெரியாது ஊமை போல நீ நடிக்க வேணுமென்று அதற்குப் பயிற்சிகள் தரப்பட்டன. ஐயாவும் அவரும் எனக்குப் பல புத்திமதிகளைச் சொல்லிச்சினம். இது ஒரு பெரிய சோதனையாக இருந்தது. இடையிலை அம்பிட்டால் என் கதி அதோகதிதான். எனவே கனடாக்காரரும் ஏஜன்சிக்காரரும் நன்கு யோசித்துத் தான் இந்த முடிவுக்கு வந்தவர்கள். ஒரு கிழமைக்கு மேலாக ஒவ்வொருநாளும் ஊமைப்பயிற்சி நடந்தது. இதனால் வாழ்க்கையே எனக்கு வெறுத்துவிட்டது. ஐயாவோடை கூடப் பேசமுடியாதநிலை. ஆசைக்குத்தன்னும் கதைக்க ஏலாது. எல்லாம் சைகையிலை காட்ட வேணும். இமிகிறேசன் தாண்டி விட்டால் பிரச்சினை இல்லை. அங்கையும் பிரச்சினை இராது. நீ பயப்படாமல் வா என்று கனடாக்காரர் உற்சாகப்படுத்தினார்.

இதற்கிடையில் கனடாவில் எங்களுக்குச் சொந்தக்காரர் ஒருவரும் கிடையாது. எனவே சித்தி தனக்கு ஜேர்மனியில் பழக்கமான ஒரு சிநேகிதியைப் பிடித்து அவவின்ரை மாமி வீட்டிலை எனக்குத் தங்குவதற்கு ஒழுங்குகள் செய்திருப்பதாகவும், அவையின்ரை விலாசத்தை தொலைபேசியில் தந்தா. எனவே ரொறொன்ரோவுக்குப் போவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. கனடாக்காரரும் ரொறொன்ரோவாசி என்றதால் எனக்கு இலேசாகப் போயிட்டது.

நாங்கள் ஒரு சனிக்கிழமை இரவு ஒரு மணிக்கு இங்கிலாந்து செல்லும் விமானத்தில் போய் அங்கிருந்து கனடாவுக்கு வேறொரு விமானத்தில் போவதாக ஏற்பாடு செய்யப்பட்டது. பின்னேரம் 8 மணிக்கே கட்டுநாயக்கா புறப்பட்டோம். போகும்போது கூட ஐயாவோடு மனம்விட்டுப் பேச முடியாத நிலை. அழுகை அழுகையாக வந்தது. ஐயாவும் கட்டிப்பிடித்து அழுதார். எங்கடை குடும்பத்திலை முதலில் வெளிநாடு போனது சித்தி. இப்போது நான் களவாகப் போகின்றேன். எதுவும் நடக்கலாம் என்ற பயம். ஐயாவுக்கும் இருந்து. ஆனால் அவர் வெளிப்படையாகச் சொல்லவில்லை. கனடாக்காரர் உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார். விமானம் புறப்படுவதற்கு அரை மணித்தியாலத்துக்கு முன் உள்ளே போனோம். ஒரு பிரச்சினையுமில்லாமல் நான் அவரோடு உள்ளுக்குச் சென்றேன். ஐயா ஏதோ என்னவோ என்று பதைபதைத்துக் கொண்டு இருப்பார் என்பது எனக்குத் தெரியும். ஏஜன்சிக்காரர் விமான நிலையத்துக்கு வரவில்லை. ஆனால் இமிகிறேசனில் எல்லா ஒழுங்குகளும் செய்து வைத்திருந்தார் எனப் பின்னர் அறிந்து கொண்டேன்.

விமானத்துக்குள் ஏறிய பின்னர்தான் எனக்கு மனம் ஆறுதலடைந்தது. இரண்டாம் நாள் ரொறொன்ரோ சென்றேன். என்னைக் கூட்டிச் சென்றவர் வீட்டில் ஒருநாள் தங்கி அடுத்த நாள் சித்தியின் நண்பியின் மாமியார் வீடு சென்றேன். அவர்களும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர்தான் கனடா வந்தவர்கள். ஒரு அடுக்கமாடிக் கட்டிடத்தில் இரு அறைகள் கொண்ட இடம்தான் அவர்களின் இருப்பிடம். ஓரறையில் மாமியின் மகள், கணவர் ஒரு பிள்ளை. மற்றைய அறையில் நானும் மாமியும். ஒரு படுக்கை மட்டும் இருந்தது. எனவே நான் நிலத்தில் கம்பளத்துக்கு மேல் சீட் விரித்துப் படுத்தேன். நான் சென்றபோது பனிக்காலம். என்னிடம் பனிக்கான உடுப்புகள் இருக்கவில்லை. சித்தி உடுப்புகள் வாங்குவதற்கு அவர்களிடம் பணம் அனுப்பியிருந்தா. ஆனால் அவர்கள் வாங்கித்தருவதாகவும், வார இறுதிநாட்களில்தான் கடைக்குப் போகலாமெனவும் வீட்டுக்காரர் சொன்னார். நான் சுகமாகச் சேர்ந்த தகவலை என்னைக் கூட்டி வந்தவர் தொலைபேசியில் தபால் கந்தோருக்கு கூறி வீட்டுக்குத் தெரிவித்திருந்தார். எனக்குச் சித்தியோடு உடனே தொடர்பு கொள்ள முடியவில்லை.

**- துறையூரான் -**

ஆரம்ப நாட்களில் குளிரால் வாடினேன். வெளியில் கூட்டிக் கொண்டு போவதற்கும் யாருமில்லை. மனம் விட்டுப் பேசுவதற்கும் ஒருவருமில்லை. ஏன்தான் வந்தோம் என்று மனம் சஞ்சலப்பட்டது. மாமி ஒரு கறார் பேர்வழி. சமையல் செய்யும்போது தனக்கு உதவியாக சிறுசிறு வேலைகள் தந்தா. நேரம் போகட்டுமே என்று நானும் உதவினேன். ஆனால் இது நாடோறும் தொடர்ந்தது. வீட்டுக்காரர் மோகன் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்தார். காலையில் 6 மணிக்குப் போய் பின்னேரம் 6 மணிக்கு மேல்தான் வீட்டுக்கு வருவார். மாமியின் மகள் கௌரி என்னேரமும் பிள்ளையோடு இருப்பா. வீட்டு வேலையொன்றும் செய்வதில்லை. இரண்டாம் நாள் பக்கத்திலிருக்கும் கடைக்குப் போக மாமி கேட்டா. நானும் சென்றேன். மாமிக்கும் ஆங்கிலந் தெரியாது. எனக்கும் அதேநிலை. அது ஒருபெரிய ‘சுப்பர் மாக்கெட்’. எனக்கு ஒரே பிரமிப்பாக இருந்தது. விலை கேட்டு வாங்கத் தேவையில்லை. அன்றைக்கு குளிர் குறைவு. என்றாலும் எனக்கு குளிராக இருந்தது. சாமான்களை வாங்கி ஒரு வண்டிலில் போட்டு, பணம் செலுத்திய பின் அவ்வளவையும் என்னைத் தூக்கி வரும்படி மாமி சொன்னார். மாட்டேன் என்று சொல்ல முடியவில்லை. மிகவும் கஷ்டப்பட்டு பைகளைக் கை வலிக்கத் தூக்கிக் கொண்டு 15 நிமிடங்கள் நடந்து போனேன். மாமி இரண்டு பைகளை மட்டும் ஒரு கையில் தூக்கிக் கொண்டும் முன்னால் போனா. குளிர் ஒருபக்கம். கைவலி ஒருபக்கம் என்னை வாட்டின. ஏதோ வந்தாச்சு சமாளிக்கலாம் என்ற நினைப்போடு வீடு போய்ச் சேர்ந்தேன். எனக்குக் குளிர் உடுப்புகள் வாங்குவதற்குப் பலமுறை கேட்டும், கடத்திக் கொண்டே போனார்கள்.

தொடர்ச்சி 39ஆம் பக்கம்



# EDUCATION

## Review Questions16-05

➢ **FUNCTION - 11**

***For what value (s) of K , the following function has no real roots.*** $f_{(x)} = k\,x^2 - 6x + k$

➢ **VECTORS 11 IB & 12**

**(a)If the following lines intersect,** determine the point of intersection

$L_1 = (4, 3, 6) + r\ (4, -1, 2)$

$L_2 = (3, 1, 4) + s\ (3, 0, 2)$


**(b) Determine the coordinates of the point on $L_1$ that is nearest to the origin.**


## Answer Key : 16-04


➢ **CHEMISTRY 12 & IB**

**Organic synthesis**









➢ **BIOLOGY 12**

**(I) sucrose, lactose and maltose disaccharides, each consist of two monosaccharide units linked together by an glycosidic linkage.**

(i) **sucrose : D- glucose and D- fructose joined by α-1,2-glycosidic bond**

(ii) **lactose: D- glucose and D- galactose joined by β-1,4-glycosidic bond**

(iii) **maltose - two molecules of D-glucose joined by α-1,2-glycosidic bond**

**(II) Polysaccharides are polymer of monosaccharide units linked together by glycosidic bonds.**

**Starch is made up of amylose and amylopectin. Amylose is polymer of D-glucopyranose formed by α – 1,4 – glycosidic bonds. Amylopectin is a polymer of D-glucopyranose formed by by α – 1,4 – glycosidic bonds and α – 1,6 – glycosidic bonds. Amylose is a linear structure polymer, but amylopectin is a branched polymer due to α – 1,6 – glycosidic bonds.**

**Glycogen – similar to amylopectin . However more branches compared to that of amylopectin.**

**Cellulose – a linear polymer of D-glucopyranose formed by β – 1,4 – glycosidic bonds.**

**(III) Steroids are a class of lipids, that have a characteristic structure consists of three six carbon and one five carbon ring.Major classes of steroids are cholesterol, steroid hormones and bile salts.**

**Steroid hormones such as sex hormones, adrenocorticoid hormone, vitamin D and bile salts are synthesized from cholesterol. Cholesterol – most widely occurring steroid found in all animal tissues. High level of cholesterol causes development of arterioscelersis and plaque formation – causes heart attack.**

➢ **ADVANCED FUNCTIONS 12**

a) $|x^2 - x - 3| > 0$ or $|x^2 - x - 3| < 0$

$if\ x^2 - x - 3 = -x + 5$ ; $x^2 = 8$

$x = \pm 2\sqrt{2}$

$if\ -(x^2 - x - 3) = -x + 5$

$-x^2 + x + 3) = -x + 5$

$-x^2 + 2x - 2 = 0$

***no solution***

(b) $|3x + 8| = |2x - 3|$

**Both become equal when ,**

$3x + 8 = 2x - 3$ or $3x + 8 = -(2x - 3)$

$x = 11$ or $x = -1$

Answer key
16-05 - next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj

KEEN TUTORING CENTRE

# கவிஞர்...

**27ஆம் பக்கத்தொடர்ச்சி**

உவமைச் சிறப்பையும் மேலே கண்டோம். இனி, அவர் காட்டும் கம்பனைப்பற்றிய பாடல்களில் இரண்டைப் பாருங்கள்:

கலையொழுகு தமிழ்க்கடலே கனலாய்க் காற்றாய்க்
 கரைபுரளு கற்பனையே கற்கக் கற்க
அலைகெழுமி அமிழ்தமெழ வதிலே தோயும்
 அனைவரையும் அமரரென ஆக்கி நின்று
தலைமைநிலை வகித்தினிது தமிழ்செய் கின்ற
 தரணிபுகழ் காப்பியத்தைத் தந்தே எம்மைத்
தலைநிமிரச் செய்ததவப் புலவ ரேறே
 சங்கநிதி நீயெமக்கு வாழி வாழி!

ஆனகுல ராமன்தன் அடக்கம் என்னே
 அன்புள்ள தம்பியரின் பண்பும் என்னே
சானகியின் கற்பென்னும் திண்மை என்னே
 தசரதனின் அறங்காக்கும் வாய்மை என்னே
ஈனமழிக் கின்றசிவன் நன்கு உவந்த
 இராவணனின் இணையற்ற இசைதான் என்னே
மானமிகு வீடனனின் தனிமாண் பென்னே
 மாகும்ப கர்ணன்செய் நன்றி என்னே!

கம்பரின் பெருமையையும் காவியப் பாத்திரங்களின் படப்பிடிப்பையும் கவிஞர் சொல்லும் திறம் கண்டு வியக்கிறோம்! இப்படி இந்நூலில் உள்ள சிறப்பம்சங்களிற் பலவற்றை இன்னும் எடுத்துக் காட்டலாம். விரிவஞ்சி அவற்றை நிறுத்திவிட்டு, ஈழத்துப் புலவர் பெருமக்களில் இராமாயணத்துக்குத் தொண்டு செய்தவர்களைக் கவிஞர் எப்படி நன்றிப் பெருக்குடன் குறிப்பிடுகின்றார் என்பதைக் காட்டுகின்றேன். இது ஈழத்தின் ஒரு மரபு வழியாகும்:

கண்டவன் ஒருவனுள்ளான் கம்பனைக் கருத்து வைத்துப்
பண்டித மணிநற் கங்கை பாய்ந்துசெய் தொண்டைப் போலே
உண்டுதொல் புகழிராமன் உன்னத அமிழ்தை அள்ளிக்
கொண்டுவந் துலகத்தார்க்குக் குவிக்கின்றான் குவிக்கின்றானே.

பண்டிதமணி சி.க. அவர்களுக்கு நன்றிக்கடன் செலுத்தியதைப் போலவே புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, வித்துவான் வேந்தனார் என்போருக்கும் ஒவ்வொரு பாட்டினால் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இராமாயணம் முழுவதையும் படியாமலே தர்க்கத்தில் இறங்குவோரைப் பற்றியும் அரைத்த மாவையே அரைப்பதைப்போல மற்றையோர் சொல்லும் வியாக்கியானங்களையே திருப்பிச் சொல்லும் கிளிப்பிள்ளைப் பேச்சாளர்களையும் கவிஞர் சில இடங்களிற் குறிப்பிட்டுச் சாடியுள்ளார்.

நூற்றொரு பாட்டுகளாலே கம்பனைப் போற்றியுள்ள இக்கீரிமலையினிலே என்ற நூல் இரசிகர்களுக்கு நல்விருந்தாகும். கம்பரைக் கண்டு 'கம்பரே வாரும் வாரும்' என அணைத்துக் கவிதையாகிய நன்முத்துக்களைக் குளிக்க விரும்புவோர் இதை நிச்சயம் படித்துப் பார்க்க வேண்டும்.

இனி, மலைநாட்டிலே எலும்பொடிய மாடாய் உழைக்கின்ற தோட்டத் தொழிலாளர்களைப்பற்றியும் சமுதாயச் சீர்கேடு களைப்பற்றியும் கவிஞர் கொண்டுள்ள கருத்துக்களை அடுத்த கட்டுரையிற் பார்ப்போம்.


- நன்றி: ஈழநாடு வாரமலர், 11.12.77


## MATH & PHYSICS TUTION

By a well-qualified and an experienced teacher. For all grades from Gr. 4 to 1st year of university.

Special classes in advanced functions, calculus & vectors and data management. Classes available at Scarborough & Stouffville.

Contact: 647 340 9490/ 416 732 2228





# எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது

பெரியர், சிறியர் பேதம் பெருமைக்குரிய கடவுள்களையும் விட்டு வைக்கவில்லை என்றால் சாதாரண மக்களை அது எங்ஙனம் சங்கடப்படுத்தும் என்பது சொல்லாமலே விளங்கும். திருமாலும், பிரமனும் சிவனுடைய அடிமுடி தேடி அகந்தை அடங்கிய வரலாறு நாம் அனைவரும் அறிந்ததே! ஆறு அடி உயரம் உடையவர் பெரியவரா? உயர்ந்த ஆசனத்தில் இருப்பவர் பெரியவரா? அதிக பணம் படைத்த கோடீஸ்வரர் பெரியவரா? உயர் பதவியில் இருப்பவர் பெரியவரா? அறிவுச் சிகரமாக, கல்விமானாக விளங்குபவர் பெரியவரா? தவசிரேட்டர் பெரியவரா? விளையாட்டு வீரர் பெரியவரா?. பெருமைக்கு அடையாளம் பணிவுடன் நடத்தல். இதுவே வள்ளுவர் கருத்து. சிறுமை தன்னை அணிசெய்யும் பெருமை தன்னை பணிசெய்யும். தன்னிலும் தாழ்ந்தவரிடத்தும் தோல்வியை ஒப்புக் கொளல் பெருமையின் சிகரம் எனலாம். இதற்கு எத்தனை பேர் தயாராக உள்ளனர்?. நான் பெரிது, நீ பெரிது என்று பீற்றிக் கொள்பவர்களே அதிகமாக உலகில் உள்ளார்கள். மனிதர்கள், விலங்குகள், பறவைகள் ஒவ்வொன்றும் தனித்துவமுடையவை. ஐந்தறிவுடைய மிருகங்கள், பறவைகள் செய்யக் கூடியவற்றை ஆறறிவு படைத்த மனிதனால் செய்ய முடிவதில்லை.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்' எனும் குறள்பாவானது செய்யும் தொழிலின் சிறப்பு ஓர் உயிரின் தனி உடமை. அதனால் அது சிறப்பும் பாராட்டும் பெறுகின்றது. "செய்யும் சிறப்பான கருமத்தையிட்டு அடக்கமுடைமை உடையவராக இருப்பவர் அமரர்நிலைக்கு உயர்வர்" என்பது வள்ளுவர் வாய்ச்சொல். பின்வரும் ஔவையாரின் தனிப்பாடல்



இதனை உணர்த்துகின்றது.

வான் குருவியின் கூடு வல்லரக்கு தொல்கறையான்
தேன் சிலம்பி யாவர்க்கும் செய்தரிதால் - யாம்பெரிதும்
வல்லோமோ என்று வலிமை சொல வேண்டாங்காண்
எல்லார்க்கும் ஒவ்வொன்(று) எளிது.

தென்னங்கீற்றில் தொங்கும் தூங்கணாங் குருவிக்கூடு மிகவும் நுட்பமான பின்னல் வேலை உடையது. வலிமையான அரக்கை உண்டாக்குவது சிறு தேன் பூச்சிதான். வலிமையான புற்றுக்களை கட்டியமைப்பது சின்னஞ்சிறு கறையான் தான். இவற்றின் நுணுக்கம் வேறு யாருக்கு கைவரும். அதிகம் படித்த பொறியியலாளர்களால் முடியாத செயல்கள் சின்னஞ்சிறு உயிர்களால் முடிகின்றன. என்னுடைய வேலை தான் சிறந்தது, நான் தான் திறமை உடையவன் என்று பெருமை பீற்றித் திரிய வேண்டாம் மனிதர்களே! எல்லோர்க்கும் ஒவ்வொன்று எளிது என்று மனங்கொள்ளுங்கள்.

பெற்றோர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள் யாதெனில் உங்கள் எண்ணங்களை பிள்ளைகள் மீது திணியாதீர்கள். அவர்களை சுயமாக வளரவிடுங்கள். அப்பொழுது தான் அவர்களது உள்ளார்ந்த திறமை வெளிவரும். ஒவ்வொரு பெற்றோரும் தனது பிள்ளை மருத்துவராக, பொறியியலாளராக, கணக்காளராக சட்டத்தரணியாக வர வேண்டும் என்றே கனவு காண்கின்றார்கள். இழுக்கமுடியாத பாரத்தை வண்டியில் ஏற்றினால் மாடுகள் படுத்துவிடும். எனவே ஒரு அறிஞனாக, கலைஞனாக, கவிஞனாக, சிற்பியாக, நடிகனாக, பாடகனாக, நாட்டிய தாரகையாக, விளையாட்டு வீரனாக, ஓவியனாக மகன்/மகள் வரவேண்டுமானால் அவர்களை அவரவர் திறமைக்கு ஏற்ப வளர விடுங்கள். ஒருவருக்கு எது எளிதாக கைவருமோ, ஒருவர் எதில் திறன் மிக்கவரோ அதனை அவர் தேர்வு செய்வதற்கு விட்டுவிடுங்கள். குழந்தையின் ஆர்வம், திறன் என்பவற்றிற்கேற்ப அவர்களை அத்துறையில் விட்டு விடுவதே நல்லது. ஒவ்வொருவர் ஆர்வத்தையும் திறனையும் அங்கீகரிக்க ஔவையார் மேற்கொண்ட உத்தி இது. உனது திறமைக்கேற்ப உன்னால் முடியும் தம்பி என்று தட்டிக் கொடுக்க வேண்டும். உனக்கு எளிதாக கைவருவது ஒன்றுண்டு என்று துணிவு கொடுப்பது, எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது எனும் தொடர் ஆகும். தாழ்வுணர்ச்சியை நீக்கி தன்னம்பிக்கையை வளர்ப்பது இது.

மனிதனாக இருப்பவன் மகானாக மாறிவிடும் போதுதான் மானிடம் மகத்துவம் பெறுகின்றது.



நா. க. சிவராமலிங்கம்

# புரட்சியின் பூபாளம்

வரதட்சணை பாரத்தால்
வாடிடும் பெண்களுக்கும்,
மாமியார் கொடுமையால்
மாண்டிடும் பெண்களுக்கும்,

பாலியல் பலாத்காரத்தால்
பரிதவிக்கும் பெண்களுக்கும்,
அடுக்களை வேலைகளில்
அல்லல்படும் பெண்களுக்கும்,

கள்ளிப்பால் குடித்துக்
கருகிப்போன சிசுக்களுக்கும்,
நெல்மணிகளின் நெருக்கத்தால்
நீர்த்துப்போன பெண்களுக்கும்,

புலரவேண்டும் புரட்சியின் பூபாளம்!

மல்லிகைபோன்ற பெண்கள்நல்
மதிப்புப்பெற்றிட வேண்டும்!
மங்கையரைக் கண்டவுடன்
மரியாதையேற்பட வேண்டும்!

பாதுகாப்புடன் பெண்கள்
பலதுறைகளிலும் பெண்கள்,
பாரதிகண்ட பெண்களாகப்



புதுமைகள் தோற்றுவிக்கப்
புலரட்டும் பூபாளம்!

காரைக்குடி. பாத்திமா ஹமீத்
ஷார்ஜா

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ M CAT Classes
✓ EQAO GR 3 & 6

# பெண்ணின் பெருமையோ பெருமை

காவியத்தில் பெண் ஓர் தலைவியாய்
ஓவியத்தில் அவள் ஓர் அழகியாய்
பேரளவில் மட்டும் தான் அன்றைய
பெண் இனம் வாழ்ந்தது

பொய்யான சம்பிரதாயத்தில் பெண்ணை
வேறுபடுத்தி, வேலி போட்டு அடக்கி
ஏட்டை தொடவிடாது தடுத்து
அகப்பை பிடிக்க வைத்த காலம்
அக்காலம் இன்று மலை ஏறிப்போய்
விலங்குடைத்து விடுதலை பெற்று
வீறுகொண்டு வீர நடைபோட்டு
வீர முழக்கம் செய்கின்றாள்



தூங்கிக் கிடந்த பெண் இனம் இன்று
துயில் விட்டெழுந்து அச்சத்தையும்
துச்சமாய் தூக்கி எறிந்து விட்டு
துணிந்து நிற்கின்றாள்

வியக்கும் விதத்தில் அறிவியல் அனைத்தும்
விவேகம் கொண்டு கற்றறிந்து
கற்றறிந்த அறிவினால் அவள்
சாதனை பலவும் படைக்கின்றாள்
இன்று பட்டமென்ன பதவி என்ன
சட்டங்கள் கற்று சட்டசபை ஏறிப் பேசவும்
அரசியலறிவை ஆக்க பூர்வமாகக் கற்று
நாட்டை ஆளவும் துணிந்து விட்டாள்
மண்ணிலே என்ன விண்ணிலேயும்
சாதனை புரிந்திடத் துணிந்து விட்டாள்

போர் என்று வந்தால் களத்தில்
போர் புரிந்து சாதனை படைக்கின்றாள்
பெண் இனத்தை பேடிகள் என எண்ணியோரை
இன்று பேதலிக்க வைத்து விட்டாள்
சுதந்திரப் பறவையாய் சிறகடித்துப் பறக்க
இறக்கை விரித்து விட்டாள் இன்றைய பெண்



கவிநாதம் பரந்தாமன்

நகைச்சுவைத் தொடர் 327

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



வின்ரர் முடிந்துவிட்டதா? இதுவரையில் இலை உதிர்காலம் இளவேனில் இனி வருங்காலம். ஆனால் பனி மழை காற்று காலநிலை மாறி மாறி போய்க் கொண்டிருக்கிறது.



உலகரின் வீடு தமிழக சட்டசபையில் எதிர்வரும் தேர்தலுக்காக வாக்குவாதம் நடப்பதுபோல அமளிதுமளிப்பட்டது.
வாக்குவாதத்திற்கு காரணம் வீட்டுச்சண்டையோ..அரசியலோ அல்ல.
சிவராத்திரி 6ம் திகதியோ? 7ம் திகதியோ? பௌர்ணமி வெள்ளியோ சனியோ?

பலவிதமான பிரச்சினைக்கு பட்டிமன்றம் நடந்து கொண்டிருந்தது.
உலகர் பார்வையாளர் போல பார்த்துக்கொண்டிருந்தார்.




இலங்கைக்கு ஒரு சமய கலண்டர். இந்தியாவுக்கு ஒரு கலண்டர். இத்தாலிக்கு ஒரு கலண்டர். ஜேர்மனிக்கு ஒரு கலண்டர். எந்தத் திகதி எந்த நேரத்தை வைத்து விழாக்களை கொண்டாடுவது என பலர் திணறிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் சிலருக்கு எந்தக் கவலையுமில்லை. கோவிலில்லை, தேவாலயமில்லை, சமய நிகழ்வுகளில்லை, ஊர் விழாக்கள் ஒன்றுகூடலில்லை, கலை கலாச்சார விழாக்கள் இல்லை.
அவர்களைப் பொறுத்தமட்டில் ராமன் ஆண்டாலென்ன? இராவணண் ஆண்டாலென்ன? இராமனுடன் வந்த குரங்காண்டாலென்ன?



ஐ பொட் அகிலாண்டேஸ்வரியின் முகம் சிராந்தி ராஜபக்சாவின் (இன்றைய) முகம்போல வாடிப்போய் இருந்தது.
பமிலி டேக்கு குடும்பத்தை விட்டு பிரிந்திருக்கும் சினேகிதிக்கு ஹப்பி பமிலி டே என ரெக்ஸ் மெசேச் அனுப்பி பதிலுக்கு சினேகிதி ஐ பொட் அகிலாண்டேஸ்வரியை இரவு அழைத்து தனது கணவனில் இருந்த ஆத்திரத்தையும் சேர்த்து பேசித்தீர்த்துவிட்டா. அகிலா உனக்கு தெரியும்தானே 15 வருசமா நான் தனிய இருக்கிறது. நீ தானே எனக்கு டிவோஸ் பேப்பர் நிரப்பி தந்தனி. கண்டறியாத பமிலி டே. மூச்சு விடாமல் சினேகிதி பேசியது. இந்தப்பிரச்சினையை செக்கண்ட் புளோர் செல்லம்மாவுக்கு சொல்லி அழுதேவிட்டா
ஐ பொட் அகிலாண்டேஸ்வரி. உலகரும் ராசம்மாவும் ஆட்டிலறி அன்னம்மாவும் இந்த கண்ணீர் வழியும் சோகக்கதையை கேட்கத் தவறவில்லை.



உலகர் பொதுவாகச் சொன்னார்... தனக்குத் தெரியாச் சிங்களம் தன் பிடரிக்கு சேதமென்று.
என்னை மின்சாரக்கதிரையில் ஏற்றியிருந்தாலும் பரவாயில்லை இப்பொழுது அனுபவிக்கும் தண்டனையை விட அது பரவாயில்லை என ஆட்சிலிருந்தபொழுது மகிழ்ந்த மகிந்த ராஜபக்ச புலம்பியிருக்கிறார்.

உலகருக்கு டி.எஸ். பாலையா நடித்த என்னதான் முடிவு படத்தில் பாவியென்னை மறுபடியும் பிறக்கவைக்காதே செய்த பாவமெல்லாம் தீரும்வரை இறக்கவைக்காதே... என்ற பாடல் நினைவுக்கு வந்தது.
பொதுநிதி கையாடல், கொலை, களவு, அநீதியான ஆட்சி செய்தவர்கள் மனதிலெல்லாம் இப்பாடல் ஒலித்துக் கொண்டுதான் இருக்கும்.

திருவள்ளுவர் எத்தனையோ ஆண்டுகளுக்கு முதல் எப்படித்தான் இவர்களுக்காகவே எழுதி வைத்துவிட்டாரோ!
மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனும் சொல். (திருக்குறள்..70)

ஆனால் தந்தை மகிந்தாவின் செயலால் அல்லது ரோகிதவின் சட்டமீறல்களை கண்டிக்காததால் இன்று சிறையில்

அது போலத்தான்.........
தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்..... திருக்குறள் 67

இதில் யாரை யார் பெருமையுடையவராக்குவது?
மகிந்த குடும்பம் படும்பாடு... அடுத்த கைது யாருக்கு?
காலமும் புதிய அரசும் சட்டமும் பதில் சொல்லும்.

முருகேசர் இப்போ வெளியில் செல்வதில்லை. தனி வாழ்க்கை. உலகரோடு மட்டும்தான் ரெலிபோனில் கதைப்பார். எப்போ இறைவன் அழைத்தாலும் செல்லத்தயார் என்ற மனப்பக்குவம். ஒரு நாளைக்கு நான் தூக்கத்திலேயே போய்விடவேண்டும். எனக்காக யார் கவலைப்படப் போகிறார்கள்... என இப்போ அடிக்கடி கதைக்கிறார்...உயிரோடிருக்கும்போதே கண்டுகொள்ளாதவர்கள் கவலைப்படாதவர்கள் இறந்த பிறகா கவலைப்படப்போகிறார்கள் என மனத்தாங்கலுடன் கதைப்பார்...


ஆனாலும் அரசியல் உலக நடப்புகள் பலமணிநேரம் கதைப்பார் குறிப்பாக தினம் தினம் இலங்கைச் செய்திகள் முக்கியமாக ராஜபக்சா பற்றியதுதான் தனது அயலிலுள்ள நாலைந்து குடும்பம் அடையிடை ரெலிபோனில் கதைப்பவர்கள் இறுதிப்போரின் பின் இன்றுவரை எங்கென்றே தெரியாது..

போரில் பொதுமக்கள் ஒருவரும் இறக்கவில்லையென ஐ.நா.வரை அடித்துச் சொல்லுகிறார்கள்
எத்தனை பேரின் உயிர் குடித்து பணம் சேர்த்திருக்கிறார் .

உலகர் சிரித்துவிட்டு சொன்னார் காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே....என பட்டினத்தார் அனுபவம் வரிகள் ....பல மேடைகளில் தமிழில் எழுதிப்படித்த ராஜபக்சாவிற்கு நிச்சயம் இந்த வரிகள் தெரிந்திருக்கும்.
ஆடிய ஆட்டமென்ன...பேசிய வார்த்தையென்ன திரண்டதோர் செல்வமென்ன....
எண்ணிய எண்ணமெங்கே? இலக்கண குமாரனெங்கே? கர்ணணும் தேருமெங்கே? கரைகொள்ளா சேனையெங்கே?
உலகர் படிக்கும் காலத்தில் செவிமடுக்காத பல விடயம் இப்போ தமிழாசிரியர்கள் ஐ பொட் இல்லாத காலத்தில் பிளாக்போட்டில் எழுதியது ஞாபகம் வந்தது.




சகுனம் அபசகுனம் என ஒவ்வொரு நாட்டவரும் பலவிதமான பல நம்பிக்கையை வளர்த்து வைக்கின்றனர்
தடைகள் ஏற்படும்பொழுது பெரிய சங்கடம் ஏற்பட்டுவிடுகிறது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா ஜேர்மனிக்கு சென்றபொழுது சம்பிரதாயப்படி வெற்றிலை வழங்கும்போது இடையே ஒருவர் கைகுலுக்க முயற்சிக்கும்போது வெற்றிலை விழுந்துவிட்டது. அது ஒரு தடங்கல்..அபசகுனம்..ஆனால் அதனை சிங்களப்பத்திரிகை படத்துடன் செய்தியாக வெளியிட்டது. இது சிறு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



நடிகர் குமரிமுத்து காலமாகி விட்டார்.

ஞாபகம் இருக்கிறதா? மார்ச் 1..15…..

1.சுவிற்சலாந்தில் பிரபல நகைச்சுவை நடிகர் சார்லி சாப்பிளின் கல்லறையிலிருந்து அவரது உடல் திருடப்பட்டது.




2.விவியன் நமசிவாயம் பிறந்தநாள். இலங்கை வானொலி ஒலிபரப்பாளர் நிகழ்ச்சி தயாரிப்பாளர். (1921-1988) விவேகச்சக்கரம் விண்வெளி வினோதம் விவசாய நேயர்விருப்பம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தியவர்.

2. நா.சிவலிங்கம் நினைவுதினம். (2010) றிச்மன்ட் ஹில் இந்துஆலய வளர்ச்சியில் ஆரம்ப காலத்திலிருந்து அதன் வளர்ச்சியில் இறுதிவரை பங்குகொண்டவர்.




3. அலெக்சாண்டர் கிரகாம் பெல் தொலைபேசியைக் கண்டுபிடித்தவர். (1847-1922) (அவரது தாயாரும் மனைவியும் செவிப்புலனற்றவர்கள். அதுவும் இவரின் ஆய்வுக்கு காரணம் எனக் கூறுகிறார்கள். பிறந்தது பிரிட்டன் வாழ்ந்தது கனடா.




3. சிரித்திரன் ஆசிரியர் யாழ். கரவெட்டி சிவஞான சுந்தரம் நினைவுதினம். சவாரித்தம்பர் (சுந்தர்) வீரகேசரியில் மித்திரன் பத்திரிகைகளில் இவரது கேலிச்சித்திரங்கள் பிரபலமானவை..

7. மஹா சிவராத்திரி



7. ஆசுகவி ஈழத்து எழுத்தாளர் கல்லடி வேலுப்பிள்ளை நினைவுதினம். (1860-1944)




8. அனைத்துலக மகளிர் தினம் (1945 இல் கனடாவில் கொண்டாடப்பட்டது)

10. 1876 இல் அலெக்சாண்டர் கிரகாம் பெல் உலகின் முதலாவது தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார்.

12. நேரமாற்றம்








சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் வழங்கிய தைப்பொங்கல் - தமிழ் மரபுத் திங்கள் விழா - 2016

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் வழங்கிய பொன்மாலைப்பொழுது - 4, தைப்பொங்கல் - தமிழ் மரபுத்திங்கள் விழா - 2016, கனடா செல்வச்சந்நிதி ஆலயத்தில் ஜனவரி 31, 2016 அன்று நடைபெற்றது. மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பித்த விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்தினையும் கனடிய தேசிய கீதத்தினையும் சங்கீதபூசணம் திருமதி. கமலாதேவி சண்முகலிங்கம் அவர்களின் மாணவர்களாகிய வித்யா விஜயகுமார், விஸ்வா விஜயகுமார், யாதவி பிரசன்னா ஆகியோர் இசைத்தனர்.

**- ராஜி -**

விழாவிற்குக் கவிஞர் கழகத் தலைவர் மாவிலி மைந்தன் திரு. சி. சண்முகராஜா தலைமை தாங்கினார். கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத் தலைவர் கலாநிதி சுப்பிரமணியம் சிவநாயகமூர்த்தி அவர்களும் உதயன் பத்திரிகையினது பிரதம ஆசிரியர் திரு. ஆர். ஏன். லோகேந்திரலிங்கம் அவர்களும் வாழ்த்துரை வழங்கியும் கவிஞர் திரு. அகணி சுரேஸ், கவிஞர். திரு. க. குமரகுரு, ரொறன்ரோ மாவட்டக் கல்விச்சபை உறுப்பினர் திரு. நீதன் சண், அபாக்கஸ் கல்வி நிறுவன அதிபர் திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம், சட்டத்தரணி கனக மனோகரன் ஆகியோர் சிறப்புரை வழங்கியும் விழாவினைச் சிறப்பித்தனர்.

தொடர்ந்து கவிஞர் திரு. தம்பிஜயா ஞானகணேசன் அவர்களால் இயற்றப்பெற்ற நாட்டார் பாடலாகிய அறுவடைப்பாடலைச் சங்கீதபூசணம் திருமதி. கமலாதேவி சண்முகலிங்கம் அவர்களின் மாணவர்கள் இனிமையாகப் பாடி அவையோரை மகிழ்வித்தனர்.

இவ்விழாவில் கவிஞர் கழகத்தினரால் "கவிச்சரம்" என்ற சஞ்சிகையும் வெளியிடப் பட்டது. இச்சஞ்சிகை வெளியீட்டின் போது வாழ்த்துரையினை ஆசிரியர் திரு. த. சிவபாலு அவர்களும் வெளியீட்டுரையினைக் கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களும் நிகழ்த்தினர். இச்சஞ்சிகைப் பதிப்பாளர்களாகிய திரு. சிறீ கண்ணுத்துரை, திரு. சோமா கண்ணுத்துரை ஆகியோருக்குப் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட விருந்த போதிலும். திரு. சோமா கண்ணுத்துரை அவர்களே சமூகமளித்திருந் தமையால் அவர் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டார். சிறப்புப் பிரதிகளும் வழங்கப்பட்டன. சிறப்புப் பிரதிகளை மருத்துவர் திரு. போல் ஜோசப், வீடு விற்பனை முகவர் திரு. ஆறுமுகம் தயாபரன், திரு. கிருபா கிசான், ஆசிரியர் சின்னையா சிவநேசன், திரு. ராதா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

மூத்தோர் மேம்பாட்டுக்கழக, கலைமுற்றக் கலைஞர்களால் கனடாச் சூழலை மையப் படுத்தித் தயாரிக்கப்பட்ட வில்லுப்பாட்டு நிகழ்ச்சி அடுத்ததாக இடம்பெற்றது. அதனையடுத்து கவியரங்கம் நடைபெற்றது. கவியரங்கத்திற்குப் பண்டிதர் ம.செ. அலெக்சாந்தர் தலைமை தாங்கி மிகவும் சிறப்பாக நடத்தினார். கவியரங்கத்தில் கவிதாயினி இராஜ்மீரா இராசையா, புலவர் முருகேசு மயில்வாகனன், பெரும்புலவர் மொகமட் ஹன்சீர், கவிஞர் கலாநிதி தில்லைச்சிவகுமரன், அருட்கவி த. ஞானகணேசன், கவிஞர் மாவிலி மைந்தன் சண்முகராஜா ஆகியோர் பங்கு பற்றிச் சிறப்பான மரபுக் கவிதைகளை அவையோரது கைதட்டலுக்கு மத்தியில் வழங்கிச் சிறந்த கருத்துக்களைச் சிந்தனைக்கு விதைத்தனர். கவிஞர் திரு. கனி விமலநாதன் அவர்கள் செவிகளுக்கு மிகவும் சிறப்பான இன்னிசை விருந்தளித்து சபையோரை ஈர்த்து அவர்களுக்கு உவகை ஊட்டி 'சுப்பர் சிங்கர்' என அவர்தம் பாராட்டுதல்களையும் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து 'பாரதி வந்தார்' என்ற சிறப்பான நடைச்சித்திரம் சோக்கல்லோ சண்முகம் குழுவினரால் நிகழ்த்தப்பட்டது. மக்கள் மனதைத் தொட்டு நின்ற அந்நிகழ்ச்சியில், கலைஞர் திரு. சோக்கல்லோ சண்முகம், கலைஞர் திரு. வி.ரி.இராஜேந்திரன், கலைஞர் திரு. கனி விமலநாதன், கவிதாயினி இராஜ்மீரா இராசையா ஆகியோர் பங்குபற்றினர். திருமதி. மங்கையர்க்கரசி சிவசுப்பிரமணியம், கலைக்குவியல் திரு. கே. கயலிங்கம் கமல் ஆகியோர் சிறப்பாகப் பின்னணி இசை வழங்கி நிகழ்ச்சிகளுக்கு மெருகூட்டினர்.

விழாவிற் கலந்து கொண்ட அனைவருக்கும் முகம் மலர, மனங்குளிர இனிய விருந்து வயிற்றுக்கும் செவிக்குமாக இணைத்து வழங்கிய கனடாக் கவிஞர் கழகத்தின் சார்பில் கவிஞர் கழகச் செயலாளர் இராஜ்மீரா இராசையா அவர்கள் விழா சிறப்புற நடைபெறவும் கவிச்சரம் சஞ்சிகை வெளிவரவும் உழைத்தோர், மகிழ்வு பொங்கக் கலந்து சிறப்பித்தோர், பொங்கல் செய்ய உதவியோர், விழாவினைப் பதிவு செய்தோர், மண்டபத்தைத் தந்துதவியோர் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துடன் கூடிய நன்றியினைக் கூற விழா இனிதே நிறைவேறியது.

# பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியான் இயற்கை எய்தினார்

பிரபல நாவல் ஆசிரியரான "செங்கை ஆழியான்" என்ற புனை பெயரினைக் கொண்ட குணராசா அவர்கள் தனது 75 ஆவது வயதில் பெப்ரவரி 28ம் திகதி இயற்கை எய்தி விட்டார். 1941ம் ஆண்டு ஜனவரி 25ம் திகதி யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் பிறந்து பிரபல இலக்கியவாதியான இவரது பிரிவினை எண்ணி எழுத்தாளர்களும், அவரது வாசகர்களும் கண்ணீர் துளிகளை காணிக்கையாக செலுத்துகின்றனர்.

பேராதனை பல்கலைக்கழகப் பட்டதாரியும், யாழ். பல்கலைக்கழக பூமி சாஸ்திர கலாநிதியுமாகிய இவர் யாழ்ப்பாணத்தில் பிறவுண் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் காலமானார். யாழ். பல்கலைக் கழகப் பதிவாளராகவும், கிளிநொச்சி அரசாங்க அதிபராகவும் பணியாற்றிய இவர் "நந்திக் கடல்", "ஆச்சி பயணம் போகிறாள்", "அக்கினிக் குஞ்சுகள்", "தீம் தரிகிடதோம்", "வாடைக் காற்று" போன்ற முப்பதுக்கு மேற்பட்ட நாவல்களை எழுதியவராவார். அவற்றுள் சில திரைப்படங்களாகவும் வெளிவந்துள்ளன. "வாடைக் காற்று" என்ற திரைப்படம் பெரும் சலசலப்பினை ஏற்படுத்தியதும் குறிப்பிடத்தக்கதாகும்.



இவரது படைப்புக்கள் சிங்கள மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு "சிலுமின", "விவரண", "றாவய" போன்ற பத்திரிகைகளில் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- வீரகேசரி மூர்த்தி

# கனடாவின்...

### 35ஆம் பக்கத்தொடர்ச்சி

நானும் குளிரில் அதிகம் கஷ்டப்பட்டேன்.

வீட்டிலும் என்னை மாமியின் அறையில் நிலத்திலே ஒரு சீற்றை விரித்துப் படுக்க விட்டார்கள். போதிய வசதிகள் கூடச் செய்து தரவில்லை. மாமிக்கு உதவியாகச் சமைக்கச் சொன்னார்கள். எனக்கு உலகமே வெறுத்துப் போனது. இவ்வளவு பணஞ் செலவு செய்து இப்படிக்கஷ்டப்பட வேண்டுமா என எண்ணி வருத்தப்பட்டேன். ஒரு நாள் சித்தி ஜேர்மனிலிருந்து தொலைபேசியில் கதைத்தா. எனது கஷ்டங்களைச் சொல்லமுடியாமல் மாமி அருகிலியே இருந்தா. எனக்கு அழுகை வரவே மாமி ரிசீவரை என்னிடம் வாங்கி அவர் சுகமாக இருக்கிறார். வீட்டை நினைத்து அழுகிறார் போலை எனச் சமாளித்து கதைத்துவிட்டு வைத்துவிட்டா. இந்த வீட்டில் நான் ஒரு கைதிபோல் காலங்கழித்தேன். (தொடரும்)

HOUSE FOR SALE



NEWMARKET
(YONGE & MULLOCK)
4Bedrooms, 4 Baths, open concept main floor
Modern Kitchen with upgraded maple.
Hardwood and ceramic throughout
Main floor.finished basement



PICKERING
(BROCK & DELLBROOK)
5Bedrooms with 1bedroom legal basement apartment, 4 washrooms, very spacious & bright, large detached home with lots of upgrdes. Close to 401,park, shops, GO transit, school,and much more.
Pl. Contact: 416.505.6486

# இலங்கை அணியின் தலைவர் மலிங்கா முதல் ஓவரின் முதல் பந்திலேயே விக்கெட் வீழ்த்தினார்!

## விளையாட்டுத் தகவல்கள் 372

ஆசியக்கிண்ண வரலாற்றில் முதன்முறையாக டி20 போட்டிகளாக நடக்கும் இந்த தொடர் பெப்ரவரி 24ஆம் திகதி முதல் மார்ச் 6ஆம் திகதி வரை நடைபெறுகிறது. ஆசியக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி அதிகமாகவே ஆதிக்கம் செலுத்தியுள்ளது. கடந்த 2014ஆம் ஆண்டு நடந்த ஆசியக்கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்ற இலங்கை அணி, இதுவரை 5 முறை கிண்ணம் வென்றுள்ளது. ஆனால் நடப்பு சாம்பியனாக களமிறங்கும் இலங்கை அணியின் நிலைமை இந்த ஆசியக்கிண்ணத் தொடரில் மிகவும் மோசமாகவே உள்ளது. குறிப்பாக டி20 போட்டிகளில் சொல்லிக் கொள்ளும் அளவில் இல்லை.

அனுபவ வீரர்களான சங்கக்காரா, ஜெயவர்த்தனே ஆகியோரின் ஓய்வுக்கு பிறகு இளம் வீரர்களை கொண்ட இலங்கை அணி அதிகமாகவே தடுமாறி வருகிறது. 2014ஆம் ஆண்டு டி20 உலகக்கிண்ணத்தை வென்ற இலங்கை அணி அதன் பிறகு நடந்த 10 டி20 போட்டிகளில் 3இல் மட்டுமே வென்றுள்ளது. இது அந்த அணியின் மோசமான நிலையையே காட்டுகிறது. இருப்பினும் ஆசியக்கிண்ணம் மற்றும் டி20 உலகக்கிண்ணத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருக்கும் இலங்கை அணி அனுபவ வீரர்களையும், இளம் வீரர்களையும் கொண்ட கலவையாக இருப்பதால் சிறப்பாக செயல்பாடு இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். இந்த



ஆசியக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி ஆதிக்கம் செலுத்தும் பட்சத்தில் 6வது முறையாக சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைக்கலாம். தவிர, எதிர்வரும் டி20 உலகக்கிண்ணத் தொடருக்கும் சிறப்பானதாக அமையும்.

இலங்கை அணி வீரர்கள் விபரம்: லசித் மலிங்கா (அணித்தலைவர்), அஞ்சலோ மத்யூஸ், தினேஷ் சந்திமால், திலகரத்னே டில்ஷான், நிரோசன் டிக்வெல்லா, ஷீகன் ஜெயசூர்யா, மிலின்டா சிறிவர்த்தனா, தசுன் சனகா, சமரா கப்புகெதரா, நுவான் குலசேகரா, துஷ்மந்தா சமீரா, திசர பெரேரா, சசித்ரா சேனநாயகே, ரங்கனா ஹேரத், ஜெப்ரே வன்டர்சே.

ஆசியக்கிண்ணம் - டி20: ஆசியக்கிண்ண டி20 தொடரில் மலிங்காவின் அபார பந்துவீச்சில் 14 ஓட்டங்களில் ஐக்கிய அரபு அமீரகம் தோற்றது. 130 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி விளையாடிய ஐக்கிய அரபு அமீரக அணி 20 ஓவர்களில் 115 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது. இலங்கை அணியின் தலைவர் மலிங்கா முதல் ஓவரின் முதல் பந்திலேயே விக்கெட் வீழ்த்தினார். ரோகன் முஸ்தபா எல்பிடபிள்யூ முறையில் மலிங்கா பந்தில் வீழ்ந்தார். அதே ஓவரில் கடைசி பந்தில் ஐக்கிய அரபு அமீரகத்தின் முகம்மது ஷாஷத் விக்கெட்டை பறிகொடுத்தார். அதன்பின்னர் ஐக்கிய அரபு அமீரக வீரர்கள் யாரும் சொல்லிக் கொள்ளும்படி விளையாடவில்லை. அந்த அணியின் எஸ்.பி.பாடீல் மட்டுமே 37 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் 20 ஓவரில் அந்த அணி 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 115 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 14 ஓட்டங்களில் தோல்வியடைந்தது. இலங்கை சார்பில் அதன் அணித்தலைவர் 4 ஓவர்கள் வீசி 26 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். முன்னதாக நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஐக்கிய அரபு அமீரகம் இலங்கை துடுப்பெடுத்தாட பணித்தது. களம் இறங்கிய சந்திமாலும் தில்ஷானும் முதல் விக்கெட்டுக்காக 68 ஓட்டங்களை பகிர்ந்தனர். தில்ஷான் 27 ஓட்டங்களை பெற்றிருந்த வேளையில் அம்ஜத் ஜாவேத் பந்து வீச்சில் முகம்மது உஸ்மான் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அதனை தொடர்ந்து விக்கெட்டுகள் தொடர்ந்து வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். சந்திமல் 50 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். இருபது ஓவர் முடிவில் இலங்கை அணி 8 விக்கெட் இழப்பிற்கு 129 பெற்றது.

சாதனைகளுடன் விடைபெற்றார் பிரன்டன் மெக்கல்லம்


நியூசிலாந்து அணித்தலைவர் பிரன்டன் மெக்கல்லம் தற்போது நடைபெற்று வரும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியோடு ஓய்வு பெறுகிறார். கிறிஸ்ட்சர்ச்சில் இந்தப் போட்டியில் முதல் இன்னிங்சில் 145 ஓட்டங்கள் குவித்த மெக்கல்லம், 54 பந்தில் அதிவேகமாக சதம் அடித்து வரலாறு படைத்தார். இந்நிலையில் 2வது இன்னிங்சிலும் அதிரடியை தொடர்ந்த மெக்கல்லம் 3 பவுண்டரி, 1 சிக்சர் என 25 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதன்மூலம் இந்த டெஸ்டில் அவர் மொத்தமாக 170 ஓட்டங்கள் சேர்த்து சாதனை படைத்தார். கடைசி டெஸ்ட் போட்டியில் தலைவராக ஒருவர் அடித்த அதிகபட்ச ஓட்டங்கள் இதுவாகும். இதற்கு முன் கடந்த 1930ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் கார்ல் நுனெஸ், இங்கிலாந்துக்கு எதிரான தனது கடைசி டெஸ்டில் 158 ஓட்டங்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது.

மேலும், கடைசி டெஸ்ட் போட்டியில் சதம் விளாசிய முதல் தலைவர் என்ற பெருமையையும் மெக்கல்லம் பெற்றார். 34 வயதான மெக்கல்லம் 101 டெஸ்டில் விளையாடி 6,453 ஓட்டங்களும் (12 சதம், 31 அரைசதம்), 260 ஒருநாள் போட்டியில் 6,083 ஓட்டங்களும் (5 சதம், 32 அரைசதம்) எடுத்துள்ளார். அதேபோல் டி20 போட்டிகளில் விளையாடி 2 சதம், 13 அரை சதத்துடன் 2,140 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

20 ஓவர் ஆசியக்கிண்ணம்: இருபது ஓவர் ஆசியக்கிண்ண கிரிக்கெட் போட்டியின் முதல் ஆட்டத்தில் இந்திய அணி வெற்றியை பதிவு செய்துள்ளது. 167 ஓட்டங்கள் என்ற இந்திய அணியின் வலுவான இலக்கை நோக்கி களமிறங்கிய வங்கதேசம், இந்தியாவின் பந்து வீச்சை தாக்குபிடிக்க முடியாமல் திணறியது. இதனால் அடுத்தடுத்து தனது விக்கெட்களை சீரான இடைவெளியில் இழந்து வந்தது. இதன்காரணமாக 10 ஓவர்கள் முடிவில் 50 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்து அந்த அணி தத்தளித்தது. அந்த அணித் தரப்பில் சபீர் மட்டும் 32 பந்துகளில் 44 ஓட்டங்கள் குவித்தார். மற்றவர்கள் சொற்ப ஓட்டங்களில் வெளியேறி ஏமாற்றம் அளித்தனர்.

வங்கதேசம் 20 ஓவர் முடிவில் 7 விக்கெட்களை இழந்து 121 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதனால் இந்தியா 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்திய தரப்பில் அதிகப்பட்சமாக நெஹ்ரா 3 விக்கெட்களை வீழ்த்தினர். ஆட்டநாயகனாக 83 ஓட்டங்கள் குவித்த ரோகித் சர்மா தேர்வு செய்யப்பட்டார்.

எஸ். கணேஷ்



**கொக்குவில் இந்துக்கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம் - கனடா**

வருடாந்த தமிழ்மொழிக் கல்விசார் போட்டிகள் - 2016

***Educational Contest in Tamil Language – Year 2016***

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா நடத்தும் வருடாந்தத் தமிழ் மொழிக் கல்விசார் போட்டிகளும் கணிதம், ஆங்கிலம் (தரம் 03 - 08வரை) நடைபெறும். இப்போட்டிகள் யாவும் கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர்களின் வாரிசுகள் மட்டுமே பங்குபற்றும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

இடம்: SAI CENTRE, 5321 Finch Ave East, Scarborough, ON, M1S 5W2
தொலைபேசி இலக்கம்: 416.335.7242
காலம்: பங்குனி 19, 2016 – சனிக்கிழமை, காலை 9.00 மணி
(Saturday, March 19 – 9:00 a.m.)

தமிழ்ப் பாடப் போட்டிகளுக்கான வயதெல்லை 06, 09, 12, 15, 18 வயதுக்கு உட்பட்டோர் பிரிவுகளாக நடத்தப்படும். போட்டியில் பங்குபற்றுபவர்கள் காலை 8:30 மணிக்கு முன்பாக கட்டணங்களைச் செலுத்தி தமது பெயர்களை பதிவுசெய்தல் வேண்டும்.
கட்டண விபரம்:

- குடும்ப அங்கத்துவப் பணம் $15.00
- தமிழ்ப் பாடத்திற்கான கட்டணமாக ஒவ்வொரு பாடத்திற்கும் தலா $5.00 உம் ஆகக் கூடுதலாக 3 பாடங்களுக்கு மட்டுமே அறவிடப்படும்.
- ஆங்கிலம், கணிதம் பாடத்திற்கான கட்டணம் $ 5.00 தனியாக செலுத்துதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி மார்ச் 12, 2016 (Saturday, March 12, 2016)
சகல வயதுப் பிரிவினருக்குமான போட்டிகள் யாவும் காலை 9:00 மணிக்கு ஆரம்பமாகும்.
மேலதிக விபரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் பெற்றுக்கொள்ள
திரு ந. நாகேஸ்வரன் - (416) 299-6645, மின்னஞ்சல்: nada.nages@gmail.com
திருமதி சி. நாமகள் - (416)283-1439, மின்னஞ்சல்: namagalx5@gmail.com
திருமதி ப. ஜெயலோஜினி: 416.287.8164
நிறுவனங்கள்: ***VLAMBARAM - GTA Square, # 201, 5215 Finch Ave. East***
***BREAD MASTER BAKERY - Unit #B3, 31 Tapscott Road*** (Malvern Mall பின்புறமாக)




தரத்தில் சிறந்தவை...
இல்லத்தரசிகளின் முதல் தெரிவு...
நிரு பிரான்ட் தயாரிப்புகள்
Organic
Extra virgin
COCONUT OIL
- 100% Natural
- No Preservatives
- No Genetically Modified Organism
Perfect For:
- Frying
- Cooking
- Baking
COCONUT
Niru
ORGANIC EXTRA VIRGIN
Coconut Oil
100% NATURAL, NO PRESERVATIVES, NON-GMO
PERFECT FOR FRYING, COOKING & BAKING
தமிழ் மளிகைக் கடைகளில் கிடைக்கும்
416 750 1976 www.niru.com email: info@niru.com
Niru
Niru
Niru
நிரு


JRS AUTO TECH
OPEN 24 HOURS
7 DAYS A WEEK
MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS
VISA
Free Inspection & Diagnostics
Complete Car & Truck Care
Licensed Mechanics
Insurance Work Done
All Fluid Top Ups & A/C Repairs
Fuel Injection Service & Muffler/ Turbos
Courtesy Drop Off & Pick Up Available
Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash
SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors
TIRE SPECIALS
NEW TIRES FROM $75
USED TIRES FROM $35
FREE OIL CHANGE WITH RUST PROOFING
$99 Car
$120 SUV
BRAKE JOB
STARTING FROM
$159
WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans
Castrol
REGULAR OIL CHANGE
$29.95
CASTROL OIL CHANGE
$39.95
SYNTHETIC OIL CHANGE
$49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR
$149.95
TRANSMISSION FLUSH
Starting From…
Imports
$74.95
Radiator Flush
$79.95
Domestic
$149.95
ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK
BMW
LEXUS
FREE DTC Code Run and Inspection
2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)
CALL SUBAS DIRECT → 416-206-9489
Tel: 416-628-4399
Email: jrsautotech@hotmail.ca
Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech
*Prices subject to change. Valid with flyer.
Cannot be combined with any other offers.

# NK Movers

We make moving easy!




***Proudly moving the local community for the last 20 years***

கடந்த 20 ஆண்டுகளாக தமிழ் சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்றவர்கள்

## WE SPECIALIZE IN:

- RESIDENTIAL MOVING
- COMMERCIAL MOVING
- LONG DISTANCE MOVING

மேலதிகமாக

**$50**

கழிவினை பெறுவதற்கு இக்கூப்பனைக் காட்டவும்

### QUESTIONS TO ASK

Choosing a moving company is a major decision. Making sure to learn about a company's cost and service is very important. Once you are comfortable then make your final selection.

- **Are you an insured company?**
- **Is your staff trained?**
- **Do you offer free estimates?**
- **What payment option is available? Is a deposit required?**
- **Is there a contact number I can contact on move day if there are any questions or challenges?**
- **Are there additional charges for:**
  **Stairs?**
  **Travel time from your location to mine?**
  **Evenings and weekends?**

**TEL: 416-566-4260**

**FAX: 1-888-614-9373**

**TEL: 1-800-895-8362**

**WWW.NKMOVERS.CA**

clientsupport@thenkmovers.com

**32 Howden Road - Unit 2. Toronto, M1R-3E4**



















**Free Real Estate Class - Call: 416.321.6969**










விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**
**www.tamilvanakkam.com**

